பரவசமூட்டும்

பாலா பீடம்



வானதி பதிப்பகம்

நெமிலி. பி. வெங்கட்கிரிதர்

பரவசமூட்டும் பாலா பீடம்

நெமிலி பி. வெங்கட்கிரிதர்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : செப்டம்பர், 1997

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 30.00

☐	TITLE	:	PARAVASAMOOTUM BALA PEEDAM
☐	AUTHOR	:	NEMILI P. VENKATGIRIDHAR
☐	LANGUAGE	:	TAMIL
☐	EDITION	:	FIRST EDITION, SEPTEMBER, 1997
☐	No. OF PAGES	:	158
☐	PUBLISHED BY	:	VANATHI PATHIPPAKAM, 13, DEENADAYALU STREET, THYAGARAYA NAGAR, CHENNAI – 17.
☐	PRICE	:	Rs. 30.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17

Printed at: NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 8588471, 8548891

முன்னுரை

பாலா! இந்த இரண்டு எழுத்துக்குள்ள மகிமையை இந்த நிமிடம் வரை, இவ்வுலகில் உள்ள எவராலும் எடுத்துக் கூற இயலவில்லை. காரணம், உலகில் உள்ள குறும்புத் தனங்கள் மொத்தத்தையும் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட ஒரே குழந்தை தெய்வம் பாலா. விளையாட்டு என்றால் அவள் விளையாடுவதுதான். லீலைகள் என்றால் அவள் புரிவதுதான். அற்புதங்கள் என்றால் அவள் நிகழ்த்துவதுதான். ஆம் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்ட அற்புதமான குழந்தைதான் பாலா!

பாலாவுக்கென ஒரு கோயில் தனியாக இந்த உலகெங்கிலும் தேடிப்பார்த்தாலும் கிடையாது. காரணம் பாலாவை மற்ற தெய்வங்கள் போல் ஒரே இடத்தில் உட்காரவைக்க முடியாது. அவள் சுழன்று கொண்டே இருக்கும் ஸ்ரீசக்கரம் . அப்படி என்றால் இந்த பாலா பீடம் மட்டும் எப்படி சாத்தியம்? பாலா பீடம் என்பது கோயில் இல்லையா? ஆம். பாலா பீடம் என்பது கோயிலல்ல. ஒரு வீடு. பாலா தனக்கெனத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒரு வீடுதான் இந்த பாலா பீடம்.

சரி. அந்த பாலா பீடத்தில் என்ன விசேஷம்? பாலா பீடமே விசேஷந்தான். சுமார் 150 வருடங்களுக்கு முன்னால் வேதவித்தகர் திரு. டி. கே. சுப்ரமண்ய அய்யர் கனவிலே வந்து உனக்காக, உன்னைத்தேடி, உன் இருப்பிடம் நாடி ஆற்றிலே வருகிறேன். என்னை உன் இல்லத்திற்கு அழைத்துச் செல் என்று அன்புக் கட்டளையிட்ட பாலா,

இன்று அந்த வீட்டையே பாலா பீடமாக்கி இருக்கிறாள் என்றால் அது விசேஷந்தானே!

பாலா! அவள் அனுமதியின்றி அங்கு எதுவும் நடக்காது. அவள் உத்தரவின்றி உள்ளே நுழைய முடியாது. படிக்கும் போது ஏதோ சாதாரணமாகத் தோன்றும் இவ்விஷயம், பாலா உத்தரவு பெற்று உள்ளே வந்தவர்களால் உணர்வுபூர்வமாக உணரப்பட்டது. இது அவர்கள் சொன்ன கூற்று.

அன்னை பாலாவின் திருவிளையாடல், அற்புதங்கள், லீலா வினோதங்கள் மற்றும் வரலாறு என எல்லா வற்றையும் இதுவரை வெளியிட்ட ஒரே பதிப்பகம் வானதி பதிப்பகம்தான். பாலைவனம் போலிருந்த பக்தி நெஞ்சங்களை சோலைவனம் போல் மாற்றிய வானதி பதிப்பகம் பாலாவின் புத்தகங்களை வெளியிட்டு வான்புகழ் கண்டது. பாலாவைப் பற்றி எழுதி அது புத்தகமாக வெளி வரவேண்டுமென்றால் அது வானதி பதிப்பகம் மூலம்தான் வெளி வரவேண்டும் என்பது பாலாவின் எழுதப்படாத சட்டங்களில் மிக முக்கியமான ஒன்று.

பாலா தனக்கென நெமிலியை மட்டும் தேர்வு செய்து கொள்ளவில்லை. வானதியையும் தேர்வு செய்து கொண்டாள்.

பாலாவை நேரில் பார்க்க வேண்டும் என்றால் நெமிலிக்குத்தான் வந்தாக வேண்டும். வேறு எங்கும் பாலாவைப் பார்க்க முடியாது. அதே போல் பாலாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் வானதி பதிப்பகம் வெளியிடும் புத்தகத்தைப் பார்த்தால்தான் தெரிந்து கொள்ள முடியும். பாலா பீடத்தில் நடந்த சில சுவையான நிகழ்ச்சிகளை அதன் சுவை குறையாமல் அப்படியே எழுதியிருக்கிறேன்.

இந்தப் புத்தகம் எழுத காரணம் ஒரு முக்கிய சம்பவம்தான். அது என் மனதை மிகவும் பாதித்த சம்பவம். அதை முழுக்க முன்னுரையில் கூறமுடியாது. அதை தனி அத்தியாயமாகவேக் கடைசியில் எழுதியுள்ளேன். இது எனது இரண்டாவது புத்தகம். முதல் புத்தகம் அன்னை பாலா வரலாறு. இரண்டிலுமே நான் வெறும் கருவியாகத்தான் செயல்பட்டிருக்கிறேன்.

இந்த அற்புத நூலை அழகுடன் பதிப்பித்த இறைபணிச்செம்மல் புத்தகவித்தகர் வானதி. திரு. திருநாவுக்கரசு அவர்கட்கு பாலா பீட உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

22, சத்திரத் தெரு,
நெமிலி - 631051.
தொலைபேசி:- 47216 (04177)

நேசமுடன்
நெமிலி. பி. வெங்கட்கிரிதர்

பொருளடக்கம்

1

மத ஒற்றுமைக்கு மகத்தான ஓர் பீடம்!

கோலமகள் உந்தன் முன்னே போடும்
    கோலங்கள் யாவும் தாளங்கள் போடும்!
ஜாதி மதம் நீக்கும் பாலா உந்தன்
    ஜாலங்கள் யாவும் ஜகத்தினை ஆளும்!

–பாலா நவரத்னமாலை

ஒரு நாள் இரவு 11.30 மணி இருக்கும். கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால் இரண்டு அன்பர்கள் நின்றிருந்தனர். "கோயிலப் பார்க்க மெட்ராஸ்லேர்ந்து காலைல மோட்டர் பைக்ல புறப்பட்டோம். வழி தெரியாம திருத்தணி பக்கத்துல இருக்கிற நெமிலி, ஸ்ரீ பெரும்புதூர் பக்கத்துல இருக்கிற நெமிலிக்கெல்லாம் போயிட்டு கடைசியா அட்ரஸ சரியா விசாரிச்சு இங்க வந்தோம்." களைப்பு மேலிட அவர்கள் கேட் அருகே நின்று பதில் சொன்னதைக் கேட்டு பரிதாபமாக இருந்தது.

கதவைத் திறந்தோம். உள்ளே அனுமதித்தோம். இந்த அனுமதி அவள் போட்ட உத்தரவு. ஆம் பாலாவின் கண்டிப்பான உத்தரவு "யார் என்னைப் பார்க்க எப்போது வந்தாலும், அவர்களைத் தரிசனம் செய்ய வைத்துத்தான் அனுப்ப வேண்டும்" என்பதுதான். வந்தவர்களுக்கு குடிக்க நீர் கொடுத்தோம். பாலா பீடத்தில் நுழைந்தவுடனே

அவர்கள் களைப்பு காணாமல் போயிற்று. பிறகு ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்தோம்.

"அன்னை பாலா அற்புதங்கள் " புத்தகம் படிச்சோம். எப்படியும் பாலா பீடத்துக்கு போயிட்டு வந்துடனும்னு முடிவு பண்ணோம். காலைலேர்ந்து எங்கெங்கயோ சுத்தினோம். இருந்தாலும் பாலாவை பாக்காம வீடு திரும்பக் கூடாதுன்னு ஒரு வைராக்யம் எடுத்துக் கிட்டோம்."

அவர்கள் சொல்லச் சொல்ல ஆச்சர்யம் மேலோங்கியது. பாலா தன்னிடம் வருபவர்களை சோதித்துத்தான் அழைத்து வருவாள். ஆனால் இந்த அளவுக்கு யாரையும் சோதித்ததில்லை. வந்தவர்கள் பாலாவைக் கண் குளிரக் கண்டார்கள். தீபாராதனை நடந்தது. விபூதி, குங்குமப் பிரசாதம் வாங்கிக் கொண்டார்கள். கற்பூர ஆரத்தியை கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள்.

எனது தந்தையார் அவர்களிடம் "இங்க நவராத்திரி, புத்தாண்டு பூஜைகள் விசேஷம். நீங்க உங்க பேர் சொல்லி அட்ரஸ் குடுத்திங்கன்னா நாங்க பத்திரிகை அனுப்பறோம்" என்றார். "என் பேர் அப்துல் காதர். இவர் பேர் சையத் பாஷா ரெண்டு பேருமே மண்ணடிலே (சென்னை)தான் இருக்கோம்!" அவர் சொல்லச் சொல்ல ஸ்தம்பித்து நின்றோம்.

பாலாவைத் தரிசிக்க இரண்டு முஸ்லிம் அன்பர்கள் பல தடைகளைக் கடந்து வந்து அவள் கற்பூர ஆரத்தியை ஏற்றுக் கொண்டு, குங்குமப் பிரசாதம் வாங்கிக்கொண்டு.... என்றென்றும் மறக்க முடியாத ஓர் அற்புத நிகழ்ச்சி. அப்பப்பா இன்று நினைத்தாலும் புல்லரிக்க வைத்த நிகழ்ச்சி அது !

2

பாடல்கள் பாடும் பாலாவின் பீடம்!

கொள்ளும் நீரும் கொஞ்சு தமிழில் உன் பேர் கூறும்!
கள்ளும் போதை கொள்ளும், உன் பேர் சொல்ல
தள்ளும் மனமும் உனைக்காண துள்ளும்! குத்தும்
முள்ளும் பூவாய் மாறி பாடும் உந்தன் கீதம்!

–பாலா அந்தாதி

பாலா எங்கள் அன்புச் சிறையிலிருந்து நீங்கா வண்ணம், நாங்கள் அவளுக்குப் போட்ட பூட்டு பாட்டு. ஆம்! பாடல்கள்தான் அவளுக்குப் பிடித்த ஒன்று. அவளைப் பற்றிப் பாடப்பாட பாடல் பிறக்கும். நல்ல பாதை திறக்கும்.

அருள்மிகு தேவி அன்னை பாலா திரிபுர சுந்தரி சரணம்!
இருள்தனை நீக்கும் தாயே பாலா திரிபுரசுந்தரி சரணம்!

இந்தப் பாடல் பாடாமல் எந்தப் பூஜையும் நிறைவு பெறாது. பூஜை என்ன, எங்கள் வீட்டு விழாக்கள் எதுவானாலும் இந்தப் பாடல் பாடாமல் விழா நிறைவுறாது. இந்தப் பாடல் எங்களுக்கு தெவிட்டாத தேசிய கீதம். எளிமையான வார்த்தைகள். பாடப் பாட சந்தோஷம் பிறக்கும் எளிமையானப் பாடல். என் தந்தை இயற்றிய இந்தப் பாடல்தான் எனக்கு வழிகாட்டி. இதன் அடிச்சுவட்டில் நானும் பாடல்கள் எழுத ஆரம்பித்தேன்.

பேனா பிடித்துவிட்டால் போதும். பாலாவின் அருளால் வார்த்தைகள் வரிசையாக வந்து கொண் டிருக்கும்.

வந்து உன்னைப் பார்த்தால் போதும்
கவிதை வந்து பொங்குமே!
வார்த்தை வந்து வணங்கி நின்று
வாழ்த்தி உன்னைப் பாடுமே!
நீதான் எங்கள்
வீடு தேடி வந்த சொந்தம்!

பாலா.. பாலா... பாலா ... பாலா

பாடல் எழுதி முடித்தவுடன் படித்துப் பார்ப்பேன். இதெல்லாம் நான் எழுதிய வார்த்தைகளா? கைகள் எழுதியதைக் கண்கள் பார்த்தாலும் மனசாட்சி மட்டும் மறுக்கும். "எந்தப் பேனாவும் தானாக எழுதாது. வெளியே இருந்து ஒரு சக்தி இயக்க வேண்டும். அந்தப் பேனாவை நீ இயக்குகிறாய். உன்னை பாலா இயக்குகிறாள்" எனக் கூறிவிட்டுச் சிரிக்கும். பேனாவில் மை இருந்தாலும், அது நம் கையிலிருந்தாலும் அதிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் வலியை நீக்குவது எப்படி?

தேவைதன்னை பிறர் சொல்லத் தேவையில்லை
தேடிவந்து அருள் புரிபவளாம்!
சேவைகள் பலவும் செய்யத் தேவையில்லை
சேவித்தால் அன்புடன் வருபவளாம்!
ஆற்றினில் மிதந்து வந்தவளாம் – உயர்
ஆற்றலை அழகாய்த் தந்தவளாம்!
அன்புடன் அழைக்கும் சேயவளாம் – நல்ல
பண்புடன் நடந்தால் தாயவளாம்!

எனக்கோ, என் பேனாவுக்கோ லட்சருபாய் கொடுத்தாலும் இது போல எழுத வருமா? சில சமயங்களில் நான் எழுதிக் கொண்டிருக்கும்போது

வார்த்தையின் வலிமை தெரியாது. எழுதி முடித்தவுடன் பார்த்தால் ஒவ்வொரு வரியும், எப்பேர்பட்ட வலியையும் போக்கும் வலி நிவாரணியாக இருக்கும். அப்படி நான் எழுதிய (நான் என்றால் நானல்ல. அவள் அவளுக்காக எழுதும் பாட்டு. பெயரை நான் போட்டு, பெருமையை கடன் கேட்டு, பணிவோடு தலை காட்டுவேன்.) இந்தப் பாடல் ஒரு சிறந்த வலி நிவாரணி.

ஓர் இரவில் சிறு உருவில்
சேயாய் வந்தவள் நீயம்மா!
கனவிலே வந்தவளே
கவலையை தருவது நியாயமா?
எனது விழியில் வரும்
துளிகள் சிதறி விழும்
உனது உருவம் கண்டு
உடலும் சிலிர்த்து விடும்
பாலா.. பாலா..
என்னுயிரே என் கனவே
இனியும் தாமதம் ஏனம்மா?

அதென்னமோ தெரியவில்லை. பாலா பாடல்கள் எழுதும்போது மட்டும் ஏதோ விண்வெளியில் பறப்பது போன்ற ஒரு சிலிர்ப்பு ஏற்படும். அது எப்படி என்றே தெரியவில்லை. சாதாரணத் தமிழ் வார்த்தையும் பாலாவின் புகழ்பாட இனிப்பின் இமயத்தை இமைப்பதற்குள் தொட்டு இசையருவியாய், இன்பவெள்ளமாய் இரு காதுகளிலும் இடைவிடாமல் ஒலிக்கும்.

அன்னதானம் என்பது பாலா பீடத்தில் மிக முக்கியமான ஒன்று. நவராத்திரி ஒன்பது நாளும் பாலா பீடத்தில் அன்னதானம் ஒரு புறமும், அமுதகானம் ஒரு புறமும் நடந்து கொண்டே இருக்கும். இந்த விஷயங்கள் பாடலாக மாறிய போது இன்னும் சுவையாக உருமாறின.

அன்னதானம் அமுதகானம் அனைத்தும் இங்கே தானடி
இவ்விடம் போல் இவ்வுலகில் வேறு இடம் ஏதடி?
உனக்கெனவே ஓர் இடமும் இவ்வுலகில் ஏதடி?
நெமிலி மட்டும் உன்னிடமாய் ஆன மாயம் என்னடி!
உள்ளம் எனும் கோயிலிலே உள்ள தெய்வம் நீயடி
உன்னை நம்பி நாங்கள் வந்தோம் எம்மைக் கொஞ்சம் பாரடி!

பாலாவை மயக்கப் பாடல் ஒன்றுதான் சரியான வழி என்று பரீட்சித்துப் பார்த்துக் கொண்டோம்.

அன்புதான் அவளின் மந்திரம்
இல்லையே தந்திரம்!
காக்குமே அவளின் எந்திரம்!
காவலும் நிரந்தரம்!
அன்னை வந்து சேர்ந்த
அந்தப் பீடத்தில்
பாடல் ஒன்றுதானே வேதமந்திரம்
பாடல் பாடுவோம் பாதை தேடுவோம்
பாலா நம்மைக் காப்பாளே!

பாடல்கள் பாடும் பாலாவின் பீடம் பார்த்தாலே பாவங்கள்தான் ஓடும். நாளும் அவள் சன்னதி தருமே மன நிம்மதி. என்றும் திருவிழா அவள் வீட்டிலே!

(முழுப் பாடல்கள் புத்தகத்தின் கடைசியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.)

3

வான் புகழ் கொண்ட வாலையின் விழாக்கள்!

தீர்த்தவள் தீங்கினை, நல்லவர் பலரை நெமிலியிலே கொண்டு
சேர்த்தவள், கலை நிகழ்ச்சிகள் பலவற்றை களிப்புடனே
பார்த்தவள்! மணியான கலைஞர்களை மணி மணியாகக்
கோர்த்தவள்! கோடி கோடி இன்பமதைக் கொடைபோல்
கொடுத்தவள்!

– பாலா அந்தாதி

பாடல்கள் பாடும் பாலாவின் பீடம்
பார்த்தாலே பாவங்கள் தான் ஓடும்!
நாளும் அவள் சன்னதி
தருமே மன நிம்மதி!
என்றும் விழாவே அவள் வீட்டிலே!

பாலாவுக்கு தினந்தோறும் விழாக் கோலம்தான். முதலில் நவராத்திரி விழாக்கள் மட்டுமே நடைபெற்று வந்தது. பிறகு பாலாவின் விருப்பத்தால் இன்னிசை விழாக்கள் அதில் இடம் பெற்றன. இறுதியில் இயல், இசை மற்றும் நாடகம் என முப்பெரும் விழாக்களாக கலை விழாக்கள் அணிவகுத்து வந்தன.

வெறும் விழாக்கள் நடந்தால் போதுமா? கலைஞர்களை ஊக்கப் படுத்த வேண்டாமா? அதனால் பாராட்டு விழர்க்கள் நடைபெற்றன. இசை உலகில்

சம்பந்தப்பட்டவர்களுக்கு முதலிடம். காரணம் பாலா இசையினை ரசிப்பவள் ஆயிற்றே! பிறகு திரைப்படத் துறையிலிருந்து வர ஆரம்பித்தார்கள். இப்படி நாளுக்கு நாள் விழாக்கள் கூடிக் கொண்டேச் சென்றன.

வெறும் விழாக்கள் மட்டுமல்ல, விதவிதமான பூஜை களையும் பாலா தனக்கென அமைத்துக் கொண்டாள். நவராத்திரி ஒன்பது நாட்களும் திருமண வைபவம்தான். புத்தாண்டு பிறந்தால் பாலா ஹோமம் விமரிசையாக நடைபெறும். சிறிது சிறிதாக ஆரம்பித்த பூஜைகள் இன்று எங்கள் அனைவரையும் ஆக்ரமித்துக்கொண்டன. வார பூஜைகள், பௌர்ணமி, மாத பூஜைகள், புத்தாண்டுச் சிறப்பு பூஜைகள், தை வெள்ளித் திருவிழா பூஜைகள். பாலா பீடத்தில் திரும்பிய பக்கமெல்லாம் திருவிழாக்கள்தான், பூஜைகள்தான்.

ஒரு புறம் அன்னதானம், மறுபுறம் அமுதகானம். ஒரு புறம் செவிக்கு உணவு, மறுபுறம் வயிற்றுக்கு உணவு. திரையுலகப் பிரபலங்கள், கலையுலகப் பிரபலங்கள் எனப் பல பேர் அவளின் உத்தரவோடு அங்கு வந்து தங்களின் திறமையைப் பணிவுடன் வெளிக்காட்டி, அவள் தரும் அழகிய பட்டங்களை அன்புடன் வாங்கிச் செல்வது கண் கொள்ளாக் காட்சி.

பாலா பீடத்திற்கு முதன்முதலில் வந்த இசைக் கலைஞர் அமரர், பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் ஆவார். அவர்தான் பாலா பீடத்தில் இசை மழையைத் தொடக்கி வைத்தார். இன்றளவும் பாலா பீடத்தில் அந்த இசை மழை இடைவிடாமல் பெய்து கொண்டிருக்கிறது. அவரது இசைத் தொண்டால் அவரது பெயரிலேயே டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் இன்னிசை அரங்கம் அமைத்தோம். ஓய்விலாக் கடல் அலைகளைப் போல, அந்த அரங்கத்தில் இன்றளவும் பாராட்டு விழாக்களும், பட்டமளிப்பு விழாக்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.



அன்னை பாலாவை திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வணங்கும் காட்சி



அன்னை பாலாவின் முதல் நூலான வானதி பதிப்பகத்தின் "திரிபுர சுந்தரி திருவிளையாடல்" என்னும் நூல் அன்னை பாலாவின் சந்நிதியில் வெளியிடப்படும் காட்சி. நூலாசிரியர் கவிஞர் நெமிலி எழில்மணி, நூல்வெளியீட்டாளர் வானதி திருநாவுக்கரசு, முதல் பிரதி பெற்றுக்கொண்ட டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் உள்ள காட்சி.

4

சுமைகள் அல்ல - சுகங்கள்!

வேண்டும் வரம் யாவும் தரும் எங்கள் பாலா
மீண்டும் ஒரு தரம் எங்கள் வேண்டுதல்களைக் கேளாய்
யாண்டும் இன்பம் வேண்டவில்லை பாழும் துன்பக் கிணற்றை
தாண்டும் சக்தியும் அதைத் தாங்கும் சக்தியும் நீ தா!

– பாலா அந்தாதி

"எனக்கு மட்டும் ஏன் ஆண்டவன் இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கிறான்?" இது மாதிரி பல சந்தர்ப்பத்தில் பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஏதோ ஆண்டவன் எல்லோருக்கும் அளந்து அளந்து கஷ்டத்தைக் கொடுப்பது போலவும், ஒரு சிலருக்கு மட்டும் அளவே இல்லாமல் லாரிலாரியாக கஷ்டத்தை ஏற்றி வந்து அவர்கள் வீட்டில் கொண்டு வந்து இறக்கியது போலவும் பேசுவது எவ்வளவு அபத்தமானது. நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

வெயில் என்பது ஒரே அளவாகத்தான் அடிக்கும். ஆனால் தெருவில் வருவோர் போவோரை கவனித்துப் பாருங்கள், ஒருவர் "என்ன மோசமான வெயில்..." எனக்கூறி நிழல் தேடி ஒதுங்கிவிடுவார். இன்னொருவர் "சே... என்ன ஒரேயடியா இப்படிக் கொளுத்துது..." எனச் சொல்லி சோடாக் கடையில் சோடா வாங்கிக் குடித்துக்

கொண்டிருப்பார். மற்றொருவரோ தள்ளாடித் தள்ளாடி மயங்கி கீழேயே விழுந்து விடுவார்.

ஒருத்தர் மட்டும் எதையும் பொருட்படுத்தாமல் தன் வேலையை முடிக்க வேண்டி தெருவிலே விறுவிறுவென்று நடந்து கொண்டிருப்பார். இப்போது சொல்லுங்கள் சூரியன் என்ன தன் வெப்பத்தை ஒருவருக்கு 22 டிகிரியாகவும், சோடா குடித்த நபருக்கு 32 டிகிரியாகவும், மயங்கி விழுந்தவருக்கு 102 டிகிரியாகவும் தனித்தனியாகப் பிரித்தா கொடுத்தது? இல்லை.... தெருவிலே விறுவிறுவென நடந்தவருக்கு மட்டும் ஸ்பெஷலாக குடை பிடித்து ஏர்கூலர் செட்டப் செய்ததா? அது தன் கடமையை பிறருக்கு எனக் கூட்டவும் இல்லை - குறைக்கவுமில்லை!

அதே போலத்தான் ஆண்டவனும். தன் கடமையைச் செய்து கொண்டிருக்கிறார். முனுசாமிக்கு முப்பது கிலோ, நாராயண மூர்த்திக்கு நாற்பது கிலோ என அவர் கஷ்டங்களைப் பிரித்தா கொடுக்கிறார்? தாங்கும் சக்தி இல்லாத சிலர் கடவுளைத் திட்டுகிறோம். இன்னும் சிலர் “ஐயோ இவ்வளவு கஷ்டமா” எனத் தலையில் கை வைத்து உட்கார்ந்து விடுகிறோம்.

இன்னும் சிலர் தாங்கும் சக்தியின்றி ஒரேயடியாகப் படுத்து விடுகிறார்கள். தகுந்த பக்தி கொண்டவர்கள்தான் தாங்கும் சக்தியோடு, தடங்கலைப் பொருட்படுத்தாமல் தடையின்றி தம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர். ஆக, கஷ்டங்கள் என்பது கால்நடையாகப் போகிறவருக்கும் உண்டு. காரில் ஏறிப் போகிறவருக்கும் உண்டு. அப்படி என்றால் கோயில் எதற்கு? தெய்வம் எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்கும் போது அருமை தெரியாது. இல்லாதபோதுதான் அருமை தெரியும். உப்பு என்பது நம்மைப் பொறுத்தவரை சாதாரண

விஷயம். அதைப் பற்றிப் பெரிதாக நினைத்துப் பார்த்து ஏங்கமாட்டோம். அதே சமயம் மஞ்சட்காமாலை வந்து ஒரு மாதம் உப்பில்லாத பத்திய உணவு சாப்பிடும்போது, அந்த சாதாரண உப்பே நமக்கு அமுதமாகத் தெரியும். அதற்காக ஏங்குவோம்.

எனது நண்பர் ஒருவர் கீ போர்ட் ப்ளேயர். 20,000 ரூபாய் கொடுத்து ஒரு புது கீ போர்ட் வாங்கியிருந்தார். அதில் அவர் விதவிதமாக வாசித்தபோது வியந்து போனேன். சிறிது நாட்களுக்குப் பிறகு அவர் வீட்டுக்குப் போனபோது வேறு கீ போர்ட் ஒன்று இருந்தது. பழையது விற்றுவிட்டு ரூபாய் 35,000 கொடுத்து புதியது வாங்கியிருந்தார். அதைவிட சில கூடுதல் எஃபெக்டுகள், வசதிகள் இருக்கின்றன என வாசித்துக் காட்டினார். அப்படியென்றால் இதுதான் கீ போர்டுகளிலேயே சூப்பரா என்றேன். அதற்கு நண்பர் "இல்லை 60,000 ரூபாயில் இதைவிட சில கூடுதல் நுணுக்கங்கள், வசதிகள் உண்டு. அவை இதில் கிடையாது" என்றார்.

இப்படியே ஒரு லட்சம், இரண்டு லட்சம் என பல லட்சம் வரை கீ போர்டுகள் உள்ளனவாம். அப்போதுதான் அதை உருவாக்கியவனின் அருமை எனக்குத் தெரிந்தது. ஒவ்வொன்றிலும் ஒரு சிறு குறையை, அதாவது வசதியின்மையை வைத்துக்கொண்டே செல்கிறான். அவனது அபாரமான மூளையை எண்ணி ஒரு நிமிடம் என்னையும் மறந்து வியந்தேன்.

கடவுள் படைத்த மனிதனுக்கே இவ்வளவு நுணுக்கமாக மூளை வேலை செய்கிறதென்றால், அந்தக் கடவுளுக்கு எவ்வளவு நுணுக்கம் தெரிந்திருக்க வேண்டும். கீ போர்டு விஷயம் புலப்பட்டவுடன் மொத்த வாழ்க்கையும் புரிந்துவிட்டது.

சாதாரண சைக்கிள் ஓட்டும் சராசரி மனிதனிலிருந்து, ஆகாய விமானத்தை ஓட்டும் பெரிய பைலட் வரை கடவுளை வணங்கக் கோயிலுக்கு வருகிறார்கள் என்றால், அந்தந்த ரேஞ்சுக்குத் தகுந்தபடி ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் ஒரு குறையை வைத்து இருப்பது புலனாகிறது அல்லவா ?

கஷ்டப்படாத மனிதன், தோல்வி காணாத மனிதன் கவலை இல்லாத மனிதன் இவ்வுலகில் இல்லவே இல்லை. சரி அப்படி என்றால் என்னதான் செய்வது? நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. நிலவைப் பற்றி ஒரு கவிதை எழுதினேன். பிறகுதான் எனக்கே ஒரு தெளிவு வந்தது.

நிலவு அழுது புரள்வதில்லை
நாளை அமாவாசை
வருகிறதே என்று;
தேம்பி அழுவதில்லை
நாளை தேய்பிறை
துவங்குகிறதே என்று;
வளர்ந்து தேய்ந்து
மறைந்து
மீண்டும் தலை தூக்கும்
நிலவை விட சிறந்த
ஆசான் நமக்கு வேறு
யார் ?

பவுர்ணமி என்று
பல்லிளிக்காதே – அது
தேய்பிறைக்கு அச்சாரம்!
அமாவாசை என்று
அலட்சியப் படுத்தாதே – அது
வளர்பிறைக்கு அஸ்திவாரம்!

சுமைகளை, சுகங்களாக நினைக்கும் பக்குவம் வந்து விட்டால் போதும். சுமைகள் நாளடைவில் மறைந்தே

போகும். அதற்கு ஒரே வழி பக்திதான். "அது சரி நீங்கள் பாலா பீடத்தில் இருந்துகொண்டு சுமைகளை சுகங்களாக நினைத்துக் கொள்ளுங்கள் என்று சுலபமாக கூறிவிட்டீர்கள். அந்த சுமைகள் உங்களுக்கு வந்தால்தானே தெரியும்" என்று நீங்கள் கேட்பது எனக்கும் கேட்கிறது.

எனது தம்பியோடு சேர்ந்து பாலாவுக்கு பூஜைகள் செய்யும் எனது பெரியப்பாவாகட்டும், இல்லை இந்தப் புத்தகம் எழுதிக் கொண்டிருக்கும் நானாகட்டும், எங்களுக்கு உள்ள சுமைகளை பட்டியல் போட்டால் அது சீனப் பெருஞ்சுவர் போல நீண்டு கொண்டே போகும். இருந்தாலும் பாலாவின் துணையோடு அந்தச் சுமைகளை அடிக்கடி கீழே இறக்கி வைத்து விடுகிறோம்.

வாழ்க்கையில் நாமே நமக்கு ஏற்றிக்கொள்ளும் சுமைகள்தான் அதிகம். அது சுகமாகத் தெரியவில்லையென்றால் தூக்கமுடியாத அளவுக்கு சுமைகளைத் தூக்கிக் கொண்டு நாம் ஏன் அலைய வேண்டும். இதற்கெல்லாம் ஒரே வழிதான்.

வாருங்கள் பாலா பீடத்திற்கு. பாருங்கள் பாலாவின் பூஜைகளை. இறக்குங்கள் உங்கள் சுமைகளை. மறந்திடுங்கள் மனக் கவலைகளை. பயத்தை விடுங்கள். பாலாவின் அருள் உங்களுக்கு பரிபூரணமாகக் கிட்டும். எதையும் தாங்கும் சக்திதனை பாலா உங்களுக்கு நிச்சயம் தருவாள்.

5

மூட நம்பிக்கை அல்ல முழு நம்பிக்கை!

நாளும் கோளும் ஏது? கொஞ்சி மகிழும் பாலா
ஆளும் பீடம் வந்தால் பிணிகள் வாராது கொடும்
தேளும் அவ்விடம் விடம் நீக்கி தேன் சுரக்கும்!
மூளும் துயர் முணுமுணுத்து நமைவிட்டு நீங்கும்.

–பாலா அந்தாதி

ஒரு இரவு வேளை. பாலா பீடத்தின் கதவு தட்டப்படுகிறது. எனது தந்தையார் கதவைத் திறந்து பார்க்க கையில் குழந்தையோடு ஓர் அம்மையார். அந்த அம்மையார் பாலாவின் பரம பக்தை. பக்கத்து ஊரைச் சேர்ந்தவர். அந்த அம்மையாரின் பேத்திதான் அந்தக் குழந்தை. கடைசி பஸ்ஸை தவறவிட்டதால் இரவு குழந்தையோடு பாலா பீடத்தில் தங்க அனுமதி வேண்டினார். என் தந்தையும் சரி என்று கூறினார். பாலாவின் சன்னதிக்கு எதிரே இருந்த மண்டபத்தில் அந்த அம்மையார் படுத்துக் கொண்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரே சத்தம். வீட்டிற்கு முன் கூட்டம் கூடிவிட்டது. “அந்தப் பொம்பளை குழந்தை யோட உள்ள போனத நான் பாத்தேன்.” என்றார் கூட்டத்தில் ஒருவர். சத்தம் கேட்டு எனது தந்தையார் கதவைத் திறந்து, “என்ன கூட்டம்?” என்று விசாரிக்க,

"சாமி அந்த குழந்தை ரொம்ப சீரியஸ். நெமிலியில் வைத்தியம் பண்ண முடியாது. அரக்கோணம் இல்ல மெட்ராஸுக்கு கொண்டு போயிடுங்கன்னு டாக்டர் சொல்லிட்டார். நாங்க கஷ்டப்பட்டு கார் ஏற்பாடு பண்ணிட்டு பாத்தா, அந்தம்மா தன் பாட்டுக்கு குழந்தையை தூக்கிட்டு இங்க வந்துட்டாங்க..."

வந்தவர் சொல்லச் சொல்ல விஷயத்தின் விபரீதம் அப்போதுதான் எங்கள் அனைவருக்கும் புரிய ஆரம்பித்தது. உள்ளே சென்று பார்த்தால் மூச்சு பேச்சில்லாமல் குழந்தை துவண்டு படுத்திருக்கிறது. குழந்தையின் பக்கத்திலே அந்த அம்மையாரோ நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்க, அலறியடித்தபடி அந்த அம்மையாரை எழுப்பி விஷயத்தைக் கூறினோம்.

கண்ணைக் கசக்கியபடி எழுந்த அந்த அம்மையார் "இந்தக் குழந்தய எங்கயும் அனுப்ப மாட்டேன். இது அவ கொடுத்த குழந்தை. இங்க வந்த பிறகுதான் என் பொண்ணுக்கு கல்யாணம் ஆச்சி. இந்தக் குழந்தை பொறந்தது. பாலா உசிரக் கொடுத்தாலும் சரி. எடுத்தாலும் சரி. இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன்"

அந்த அம்மையாரின் தீர்க்கமான பதில் எங்களுக்கு ஆச்சர்யத்தை உண்டு பண்ணினாலும், உள்ளுக்குள் கொஞ்சம் பயமும் இருந்தது. வந்தவர்கள் அந்த அம்மை யாரை திட்டிக்கொண்டே சென்றுவிட இரவு கழிந்தது.

அதிகாலைச் சூரியன் அவசர அவசரமாக வெளியே வர, அசைவற்றுக் கிடந்த அந்தப் பச்சிளம் குழந்தை மெல்ல கை கால்களை அசைத்தது. கண்களைத் திறந்து பார்த்தது. மெல்லச் சிரித்தது. வீட்டிலிருந்தவர்களுக்கோ என்ன சொல்வதென்றே தெரியவில்லை. வாய் பேச நினைத்தும் வார்த்தைகள் வரவில்லை.

அந்த அம்மையாரோ "இதெல்லாம் இந்த இடத்துல, இவ முன்னாடி சர்வ சாதாரணம். இதுக்குப் போயி பிரமிச்சுப் போய் நின்னுட்டீங்களே" எனச் சொன்னபடி குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்ப, எங்களுக்கெல்லாம் பெருத்த குழப்பம்.

அந்த ஓர் இரவில் பாலா புரிந்த அற்புதத்தை எண்ணி வியப்பதா? இல்லை, பாலாதான் கதி என்று மற்றவர்களை புறக்கணித்துவிட்டு, அவள் சன்னதி ஒன்றே துணை .என முழுமூச்சோடு அந்த இரவை அமைதியோடு கழித்த அந்த அம்மையாரின் பக்தியைக் கண்டு வியப்பதா?

சிலபேர் கூறலாம். இது அந்த அம்மையாரின் மூட நம்பிக்கை என்று. நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் புரியும். அதன் பெயர் மூடநம்பிக்கையா? இல்லை இல்லவே இல்லை. அதுதான் முழு நம்பிக்கை. ஆம். அந்த அம்மையார், பாலாவின் மீது கொண்ட நம்பிக்கைதான் முழு நம்பிக்கை. நம்மில் எத்தனை பேர் இது மாதிரி முழு நம்பிக்கையோடு கடவுளை வணங்குகிறோம்.

முழு ஈடுபாடு கொண்டு, நம்பிக்கையோடு எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் வெற்றி நிச்சயம். அது படிப்பானாலும் சரி. இல்லை பக்தியானாலும் சரி. பலன் மட்டும் நிச்சயம்.

அளித்துக் கொண்டிருப்பவனுக்குப் பெயரே ஆண்டவன். அது இன்பமோ, இன்னலோ அதைக் கொடுத்துக் கொண்டிருப்பவனுக்குப் பெயர்தான் இறைவன். இன்பத்தைக் கொடுக்கும் போது இறைவனைக் கண்டு இளிக்கும் நாம், இன்னலைக் கொடுத்துவிட்டால் பழிக்கிறோம். எத்தனை பேருக்கு அந்த இன்னலையும் இன்பமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இருக்கிறது?

ஒரு குருவும், அவரது சிஷ்யர்களும் தேசம் விட்டு தேசம் யாத்திரைச் சென்று கொண்டிருந்தனர். ஒரு நாள் அவர்களுக்கு உண்பதற்கு காய், கனிகள் எதுவுமே கிடைக்க வில்லை. இரவும் வந்து விட்டது. படுக்கும் முன் குருவும் சீடர்களும் பிரார்த்தனை செய்வது வழக்கம். "இறைவா... இன்று எம்க்குத் தேவையானவற்றைக் கொடுத்தமைக்கு மிக்க நன்றி" என குரு பிரார்த்திக்க பக்கத்திலிருந்த சிஷ்யன், "குருவே இன்று நமக்கு இறைவன் என்ன கொடுத்து விட்டான்? நீங்கள் நன்றி கூறிக் கொண்டிருக்கிறீர்கள்?" எனக் கேட்டான்.

அதற்கு அந்த குரு, "இறைவன், இன்று நமக்கு நல்ல பசியைக் கொடுத்திருக்கிறான். அதற்கு நன்றி சொல்ல வேண்டாமா?" என்று கேட்டார். சிஷ்யர்கள் அனைவரும் அதை ஆமோதித்தனர். என்ன ஓர் அருமையான விளக்கம். இந்த நிலைமைக்கு நாம் வந்துவிட்டால் பிறகு துன்பங்களும் துயரங்களும் நம்மை என்ன செய்யும்?

மீண்டும் பாலா பீடத்திற்கு வருகிறேன். பாலா மீது முழு நம்பிக்கை வைத்த அதே அம்மையார் மீண்டும் ஒரு முறை தன் பேத்தியோடு கோயிலுக்கு வந்தார். இந்த முறை குழந்தையின் கண்களில் ஒன்று கோவைப்பழம் போல் சிவந்திருந்தது. பிரசாதம் கொடுத்தபடி, "என்ன குழந்தை கண்ணு சிவந்திருக்கு?" என்று என் தந்தையார் கேட்டார். வந்திருந்தவர்களும் அதே கேள்வியை அந்த அம்மையா ரிடம் கேட்டனர்.

அந்த அம்மையாரோ மிகவும் சாதாரணமாக "குழந்தைக் கண்ண கோழி குத்திடுச்சு" என்று கூறினார். தந்தையோ பதட்டத்துடன் "ஆஸ்பத்திரிக்கு போனீங்களா? டாக்டர் என்ன சொன்னாரு?" என்று கேட்க, "அதுதான் இங்க வந்துட்டேனே! அங்க எதுக்கு? இந்தக் குங்குமம்தான்

மருந்து. பாலாதான் டாக்டர்" என்று சிரித்தபடியே அந்த அம்மையார் குழந்தையோடு சென்று விட்டார்.

எனது தந்தையோ வீட்டில் சத்தம் போட்டார். "என்ன அந்தப் பொம்பளை எதுக்கெடுத்தாலும் டாக்டர் கிட்ட போகாம, இங்க வந்து பிரசாதம் வாங்கிட்டு போறாங்க. பக்தி இருக்கவேண்டியதுதான். இப்படியா? அப்புறம் குழந்தைக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா யார் பதில் சொல்றது?" என்று கோபப்பட்டார். எங்களுக்கே அந்தப் பெண்மணி மீது கோபம் வந்தது. அடுத்த முறை அதாவது இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அந்த அம்மையார் குழநதையோடு பாலா பீடத்திற்கு வந்தார். குழந்தை நன்றாக இருந்தது. கண்ணில் கோழி குத்தியதற்கான அடையாளமே தெரியவில்லை. எங்கள் அனைவருக்கும் இந்த முறையும் வாயடைத்துப் போனது.

இந்த அளவுக்கு, அதுவும் இந்தக் கலிகாலத்தில் பக்தி செலுத்த, பாலாவின் மீது நம்பிக்கை வைத்த லட்சத்தில் ஒருவரால்தான் முடியும். இதற்குப் பெயர்தான் முழு நம்பிக்கை.

6

விபரீதம் அல்ல விளையாட்டு!

பிடித்தவள், ஒருவரைப் பிடித்துவிட்டால் பிடிவாதமாய் நடிப்பவள்
துடித்தவள் நம் துயர் கண்டு, துன்பம் நிறை கதைகளை
முடித்தவள்! முடித்தபின் ஒன்றுமே தெரியாதது போல
நடித்தவள், நம் மூச்சவள் என்று சொன்னால் மிகை அன்று!

–பாலா அந்தாதி

நமது விஷயத்தில் விளையாட்டு என்பது விபரீதம் ஆகலாம். ஆனால் பாலாவின் செயல்கள் ஒவ்வொன்றும் விபரீதமாகத் தோன்றும். பிறகுதான் தெரியும். அவை யெல்லாமே அவள் நிகழ்த்தும் விளையாட்டுகள் என்று. மனிதனுக்குச் சுயநலம் இருந்தது. இருக்கிறது. இன்னும் இருக்கும். மூன்று காலத்திலும் சுயநலம் என்பது மாறாத ஒன்றாக மனிதனுக்கு இருக்கிறது.

சரி, கடவுளுக்குச் சுயநலம் இருக்கிறதா? இருக்காது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் பாலாவிற்கு பயங்கர சுயநலம் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? உண்மையும் அதுதான். பாலாவிற்கு ஒருவரைப் பிடித்து விட்டால், ஏதாவது சில்மிஷம் செய்து (அவள்தான் குழந்தை ஆயிற்றே) தன்னுடன் இருக்கச் செய்திடுவாள்.

நமக்கு வேண்டப்பட்ட உறவினர் மிகவும் நெருக்க மானவர், பிடித்தமானவர் வந்துவிட்டால் அவரை

நம்முடன் இரண்டு நாட்களாவது தங்கி விட்டுச் செல்லுமாறு கூறுவோம். அவரோ அந்த நிமிஷமே ஊருக்குச் செல்ல வேண்டும் என முரண்டு பிடிப்பார். உடனே நாம் நமது கைவரிசையைக் காட்டத் துவங்குகிறோம். அவரது பையை எடுத்து ஒளித்து வைத்திடுவோம். அவர் பையைத் தேடித் தேடி பிறகு ஒரு வழியாகக் கண்டுபிடித்து வாசலுக்கு வந்தால், அங்கு அவரது செருப்பு காணாமல் போயிருக்கும். அதுவும் நமது திருவிளையாடலே,. வந்தவர் நம்மோடு தங்கும்படி ஏதேதோ வேலைகள் செய்து அவரை ஒரு வழி பண்ணி விடுவோம்.

ஆம். இதே வழிமுறையைப் பாலாவும் ஃபாலோ செய்திருக்கிறாள் என்று சொன்னால் ஆச்சர்யமாக இருக்கும். அவளது விளையாட்டில் அநேகர் இடம் பெற்றிருந்தாலும் அடிக்கடி இடம் பெற்ற ஒரு நபர், பாலா உபதேசம் வாங்கிக்கொண்டு இந்த நான்காவது தலைமுறையில் பாலாவுக்குப் பூஜைகள் செய்து வரும் எனது தம்பி மோகன்தான்.

பாலா நம்மோடு ஆடும் சதுரங்க ஆட்டத்தில், அவள் காய்களை நகர்த்தும் அழகினைக் கண்டு நாம் பிரமித்துப் போய்விடுவோம். ஒரு வழியாக நாம் சுதாரித்துக் கொண்டு, சுய நினைவுக்குத் திரும்பும்போது நம்மைச் சுற்றிலும் நாலா புறமும், நகரமுடியாத அளவுக்கு செக் வைத்திருப்பாள். பிறகென்ன! ஆட்டம் பாலாவுக்குச் சாதகமாக, நாம் அவள் பாதங்களில் சாஷ்டாங்கமாக, விழுந்து சரண்டர் ஆக வேண்டியதுதான். பாலா நம்மோடு விளையாடும் சதுரங்கப் போட்டியில் நமக்கு ஏற்படும் தோல்விக்கு நிகரான சந்தோஷம், நமக்கு வாழ்நாளில் வேறெதிலும் கிடைக்காது.

சரி விஷயத்துக்கு வருகிறேன். பக்கத்து ஊரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பத்தாம் வகுப்பு படிக்கும்

தனது மகளோடு வாராவாரம் பாலாவின் பூஜையில் வந்து கலந்து கொள்வார். பத்தாம் வகுப்புத் தேர்வுகள் முடிந்து முடிவுகள் வெளியாயின. அந்தப் பெண்மணி தனது மகளை அழைத்துக்கொண்டு பாலா பீடத்திற்கு வந்து எனது தாயாரிடம் பத்து நிமிடம் புலம்பித் தீர்த்துவிட்டார்.

“ஏம்மா... இது நியாயமா? ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அவ பூஜையில் கலந்துகிட்டேன். எத்தனைத் தடவை கற்பூரம் ஏத்தியிருப்பேன். கவசம் சொல்லியிருப்பேன். என் பொண்ணு ஒவ்வொரு பரிட்சைக்கு முன்னாடியும் இங்கு வந்துதானே பிரசாதம் வாங்கிட்டுப் போனா. எல்லாப் பேப்பர்லயும் பாலா துணை, பாலா துணைன்னு எழுதுன என் பொண்ணு பத்தாம் கிளாஸ் பெயிலாயிட்டு வந்து நிக்கிறாளே! இது நியாயமா? இது பாலாவுக்கே அடுக்குமா?”

அந்த அம்மையாரின் புலம்பலைப் பொறுமையாக கேட்ட எனது தாயார், அம்மையாரிடம் ஒன்று கூறினார். பாலாவுக்குத் தான் செய்ததை பட்டியல் போட்டுக் காண்பித்த அந்த அம்மையார், எனது தாயார் கூறிய பதிலைக் கேட்டு மறு பேச்சு பேசாமல், தன் மகளை அழைத்துக்கொண்டு ஊருக்குச் சென்றுவிட்டார்.

எனது தாயார் அப்படி என்னதான் சொல்லியிருப் பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

“பாலாவுக்குத் தினமும் பூஜை பண்ற என் பையனே பத்தாம் கிளாஸ்ல ஒரு சப்ஜெக்ட்ல பெயிலாயிட்டாம்மா!”

இந்த பதில்தான் அந்த அம்மையாரின் வாயை அடைத்தது. மோகனும் அந்த வருடம் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். பாலா உபதேசம் அவன் எப்போது வாங்கிக் கொண்டானோ, அப்போதிலிருந்தே அவனுக்குப் பல சோதனைகள் ஆரம்பமாயின. அடிக்கடி



பார் புகழும் பாலா பீடத்தில் பரமஹம்ச ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகள் நிகழ்த்திய கோடி பெறும் கோ பூஜை. உடனிருப்பவர் ஸ்ரீ பரத்வாஜ சுவாமிகள்



அன்னை பாலாவின் "ஆடிவெள்ளி ஊஞ்சல் சேவை" இந்த நூலின் ஆசிரியர் பி. வெங்கட்கிரிதர், பூஜைகள் புரியும் அவரது தம்பி மோகன கிருஷ்ணன், அவரது அன்னை நாகலட்சுமி, அவரது தந்தை கவிஞர் நெமிலி எழில்மணி ஆகியோர்.

உடல் ஆரோக்யம் கெடும். பரிட்சை சமயம் உடம்புக்கு வரும். சரியாகப் படிக்க முடியாது.

கொஞ்சம் நஞ்சமல்ல பாலா அவனை ஆட்டி வைத்தது. விபரீதமான அவளது விளையாட்டுகள் எல்லாம் அப்போது எங்களுக்குப் புரியவில்லை. இடம் விட்டு இடம் பெயர்தல் ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் கட்டாயம் ஏற்படும். அதாவது பிறந்த இடத்திலிருந்து திருமணம் முடிந்து பிறகு மாமியார் வீடென்னும் புகுந்த வீட்டிற்குச் செல்வார்கள். ஆண்கள் இந்த விஷயத்தில் விதி விலக்கு. ஆனால் படிப்பு மற்றும் வேலை விஷயமாகச் சொந்த ஊரை விட்டு வெளியூர் செல்ல வேண்டியிருக்கும்.

கல்லூரிப் படிப்பு மற்றும் மேல் படிப்புக்கென மேலை நாடு செல்லுதல் அல்லது வேலை கிடைத்து வெளியூர் செல்வது இவையெல்லாம் தவிர்க்க முடியாதது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் மோகன் நெமிலியை விட்டு வெளியேச் செல்ல வேண்டும் என்றால் மேற்சொன்ன விஷயங்கள்தான் காரணமாக இருக்க முடியும். பாலா இங்குதான் தன் சுயநலத்தை அழகுறக் காட்டினாள்.

மோகனின் படிப்பு விஷயத்தில் ஏகப்பட்ட விளையாட்டுக்கள் விளையாடினாள். பத்தாவது முடித்து, பல இன்னல்களுக்கிடையில் +2 பாஸ் செய்து பூந்தமல்லி அருகே உள்ள பாலிடெக்னிக்கில் சேரலாம் என முடிவானது.

ஆனால் அவனை பாலா போகவிடவில்லை. ஏதாவது ஒரு தடங்கலை (நாம் பையை ஒளித்து வைத்தது போல, செருப்பை மறைத்து வைத்தது போல) செய்து கொண்டே இருந்தாள். அவனுக்காவது கோபம் வர வேண்டாமா? “நாம் இவ்வளவு பூஜைகள் செய்கிறோம், நமக்கு ஏன் இவ்வளவு சோதனைகள்” என்று. அவன்

அதைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. பாலா ஒரேயடியாக இழுத்துப் பிடிக்காமல், கொஞ்சம் விட்டுக் கொடுத்து அவனை அரக்கோணத்தில் ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸில் சேர அனுமதித்தாள்.

ஒரு வழியாக அதன் பிறகு கம்ப்யூட்டர் டிப்ளமோவை முடித்தான். கிட்டதட்ட அவன் டிப்ளமோ முடித்து இரண்டு வருடம் ஆகிறது. இன்றுவரை அவனுக்கு ஒரு வேலை கிடைக்கவில்லை. எத்தனை பயோ-டேட்டாக் கள், அப்ளிகேஷன்கள், சிபாரிசுக் கடிதங்கள், அவ்வளவு ஏன்? சில கம்பெனிகளின் எம்.டிக்கள் மற்றும் ஜெனரல் மேனேஜர்கள் கூட பாலா பீடத்திற்கு வந்து சென்றார்கள், இன்னும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

பாலா அவனை தன் பக்கத்திலிருந்து இன்னும் ஒரு இஞ்ச் கூட அசையவிடவில்லை. அவள் விளையாட்டின் முடிவு இன்றுவரை, இந்த நிமிடம் வரை தெரியவில்லை. எனது தாய்க்கு நாங்கள் இரண்டு பேர்தான் வாரிசு. எங்களில் யாராவது ஒருவர் டாக்டரோ, இஞ்சினியரோ ஆக வேண்டும் என நினைத்த என் தாயின் கனவு பலிக்கவில்லை. நான் B.Sc., டிகிரியோடு படிப்புக்கு குட்பை சொல்லிவிட்டேன். மோகன் விஷயம் உங்களுக்கேத் தெரியும்.

பெரிய பட்டங்கள், பதவிகள் பெறவில்லையே என்ற என் தாயாரின் வருத்தத்திற்கு நான் சொன்ன ஒரே பதில்,

"ஆயிரம் பட்டங்கள், ஆயிரம் பதவிகள் அவைய னைத்தும் அவள் பக்கத்திலிருப்பதற்கு ஈடாகுமா? ஆயிரம் ஜென்மங்கள் செய்த புண்ணியம், இந்த ஜென்மத்தில் பாலா வந்த பீடத்தில் பிறந்திருப்பது. இந்தப் பெருமை எவருக்குக் கிட்டும்?"

7

அன்புக்கு அளவு தேவையில்லை!

நிறைந்தவள், அன்பு கொண்ட மனத்தில் நிரந்தரமாய்
உறைந்தவள்! பண்ட புத்திரரை அழித்த பின் பாதி
புராணத்தில்
மறைந்தவள், உலகத்து தெய்வங்களில் உருவிலும் வயதிலும்
குறைந்தவள் குறைகள் அனைத்தையும் குறைவின்றித்
தீர்த்தவள்!

–பாலா அந்தாதி

உலகில் உள்ள எல்லாவற்றுக்கும் ஓர் அளவு உண்டு. ஆனால் அன்புக்கு மட்டும் அளவு இல்லை. அன்பைத் தருவதானாலும் - இல்லை பெறுவதானாலும் அளவு என்பது இல்லவே இல்லை. அப்படி இருக்கும்போது அன்பின் வடிவான ஸ்ரீ பாலாவின் அளவு சுண்டுவிரல் தான். ஆனால் பாலா நம்மீது செலுத்தும் அன்பிற்கோ, அல்லது பாலா மீது நாம் செலுத்தும் அன்பிற்கோ அளவுதான் ஏது?

பொதுவாக தெய்வங்கள் எனக்கு இது வேண்டும் என கேட்பதில்லை. நாம்தான் அன்பு மிகுதியால் ஆசை கொண்டு எல்லாவற்றையும் செய்கிறோம். இது உலக நியதி. ஆனால் நாம் வணங்கும் தெய்வங்களில் விதி விலக்கு என்றால் அது பாலாதான்.

பாலா கேட்டதைக் கொடுப்பவள். கேட்டுப் பெறுபவள். கனவிலே சென்று உரிமையோடு கேட்கும் ஒரே குழந்தை

தெய்வம் பாலாதான். பொதுவாக குழந்தைகள் எதைக் கேட்டாலும், சாக்கு, போக்குச் சொல்லாமல் வாங்கித் தந்து விடுவோம். அன்பு கொண்ட குழந்தைகள் மனதில் கள்ளம் கபடமில்லை. அதுதான் காரணம்.

சென்னையைச் சேர்ந்த ப்ரீதம் எண்டர்பிரைசஸ் உரிமையாளர் திரு. சூரிய நாராயணன் அவர்கள் கனவிலே சென்று "எனக்கு ஒரு கிரீடம் செய்து கொண்டு வருகிறாயா" என பாலா கேட்டிருக்கிறாள். மறுநாள் ஆசையோடும், அவசரத்தோடும் சின்னதாகத் தங்கத்திலே ஒரு கிரீடம் தயார் செய்து அவர் வீட்டுக்கு கொண்டு சென்றார். அவர் துணைவியார்,

"ஏங்க அவசரப்பட்டு அளவில்லாம இவ்வளவு சின்னதா சுண்டு விரல்ல போடுற மாதிரி இத்தனூன்டு கிரீடம் செஞ்சு கொண்டு வந்துட்டீங்க?" என வருத்தப் பட்டார்.

இருவரும் புறப்பட்டு நெமிலி வந்தனர். விஷயத்தை என் தந்தையிடம் கூறினர். எனது தந்தை அந்தக் கிரீடத்தைப் பாலாவுக்கு அணிவிக்க கச்சிதமாகப் பொருந்தியது. வந்தவர்களுக்கோ பெருமகிழ்ச்சி. அன்புக்கு அளவு தேவையில்லை என்பது எவ்வளவு பொருத்தமாக அமைந்தது? எல்லாமே அவள் செயல்.

இதற்கு நேர் எதிரான விஷயம் ஒன்றும் அவள் சன்னதியில் நடந்தது. காஞ்சிபுரத்து அன்பர் ஒருவர், மிகவும் நல்ல நண்பர். பாலாவை நினைக்காத நேரமே கிடையாது. பாலாவின் மீது பயங்கரமான பக்தி கொண்டவர். அவருக்கு ஓர் ஆசை வந்தது. பாலாவுக்கு வெள்ளி ஊஞ்சல் செய்யலாம் என முடிவெடுத்தார். இதுவரை யாருமே செய்யாத அளவுக்கு அம்சமாகவும், அதி அற்புதமாகவும் செய்ய நினைத்தார். அதற்காக பாலாவின் உருவத்தை அளவெடுத்துக் கொடுக்குமாறு கூறினார்.

உலகினைக் காக்க உருவெடுத்தவள் பாலா! அவள் உருவத்தை நாம் அளவெடுக்க முடியுமா?

ஒவ்வொரு முறையும், அந்த நண்பர் நெமிலிக்கு வரும் போதும், திரும்பிச் செல்லும்போது பாலாவின் அளவு தன்னை இஞ்ச் கணக்கில் எடுத்துத் தரும்படி கூறினார். அன்புக்கு அளவு தேவையில்லை என்பதை அவர் அந்த நேரத்தில் உணரவில்லை. இஞ்ச் கணக்கில் அளக்கக்கூடிய இறைவியா பாலா? பார்த்தாள். அவருடன் விளையாட நினைத்தாள்.

சென்னையைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் கனவிலே சென்று "அழகிய வெள்ளி ஊஞ்சல் ஒன்றை அவசரமாகச் செய்து கொண்டு வா" என அன்புக் கட்டளையிட அந்த பெண்மணிக்கோ அளவிலாத ஆனந்தம். அடுத்த முறை அவர் பாலா பீடத்துக்கு வரும்போது அழகிய வேலைப் பாடுகள் நிறைந்த அந்த வெள்ளி ஊஞ்சலோடு வந்தார்.

பீடத்திலிருந்து பாலாவை எடுத்து அந்த வெள்ளி ஊஞ்சலின் மையத்தில் வைக்க, ஆர்டர் கொடுத்துச் செய்திருந்தாலும் இந்த அளவுக்குப் பொருந்தியிருக்காது என்று அனைவரும் கூறினர். அந்தப் பெண்மணி தனக்கு வந்த அந்த தெய்விகக் கனவை பெருமை பொங்கக் கூறினார். எனது தந்தையார் பாலாவுக்கு கிரீடம் வந்த விதத்தைப் பற்றிக் கூறினார். அவர்களுக்கு அது இன்னொரு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. உடன் வந்தவர்களுக்கோ ஒரே ஆச்சர்யம்.

"வண்ண உடை மின்னவே
சின்ன இடை தோன்றுமே!
ஊஞ்சலுக்கும் ஆசை வந்து
உன்னைக் கண்டு ஆடுமே!
வந்து உன்னைப் பார்த்தால் போதும்
கவிதை வந்து பொங்குமே!

வார்த்தை வந்து வணங்கி நின்று
வாழ்த்தி உன்னைப் பாடுமே!
நீதான் எங்கள் வீடு தேடி வந்த சொந்தம்
பாலா... பாலா... பாலா... பாலா...
பாலா உன் பார்வை போதும்
தினந்தோறும் துயர் தீரும்!
பாடும் சங்கீதம் யாவும்
உனைச்சேரும் வினை மாறும்!
ஊஞ்சலில் வந்தாயம்மா லாலி... லாலி...
உன் புகழ் சொன்னேனம்மா லாலி... லாலி...

பின்னணியில் இந்தப் பாடல் ஒலிக்க, பாலா முன்னும், பின்னும் மெதுவாக ஊஞ்சலில் ஆட, அந்த ஊஞ்சல் கொண்டு வந்த பெண்மணியின் கண்களில் நீர் கசிந்தது. உடன் வந்தவர்கள் கண்களிலும் நீர் துளிர்த்தது.

நமக்குத் தேவையான ஆயிரம் கேட்கலாம் அவளிடம். அது சாதாரணம். அவளுக்குத் தேவையென அவள் நம்மிடம் கேட்பது அசாதாரணம். குழந்தை வடிவிலே அவள் கனவிலே தோன்றி எனக்கு இது வேண்டும் என உரிமையோடு கேட்கும் தருணம், மோட்சத்திற்கும் மேலான இணையில்லா இன்பத்தை அளிக்கும் ஓர் இனிய தருணம்.

உங்களுக்கு ஒரு சந்தேகம் வரலாம். "பாலா என்ன கனவிலே வந்து விலையுயர்ந்தவற்றைத்தான் கேட்பாளா என்று" இல்லவே இல்லை. பாலா எப்போது யாரிடம் என்ன கேட்பாள் என்பதை யாராலும் திட்டமிட்டுக் கூற முடியாது. அதற்கு ஒரு சம்பவம் சாட்சி. பூஜை நடந்து கொண்டிருக்கிறது. வெளியூர் அன்பர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். வருபவர்கள் பீடத்தில் உள்ள தட்டுகளில் பூ, பழம். தேங்காய் வைப்பார்கள். இது வாடிக்கை.

அன்று சென்னையிலிருந்து வந்த அன்பர் ஒருவர் தட்டுகளில் விதவிதமாக பிஸ்கட்டுகளை வைத்துக்

கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் வேலூரிலிருந்து வந்த மற்றொரு அன்பர் தட்டு நிறைய விதவிதமான சாக்லெட்டுகளை பரப்பினார். பூஜை முடிந்ததும். தீர்த்தம், பஞ்சாமிர்தம் கொடுத்த கையோடு பிஸ்கட்டுகளையும், சாக்லெட்டுகளையும் கொடுக்க அனைவர் முகத்திலும் திகைப்பு.

சென்னை அன்பர் முதலில் வந்து "சார் ராத்திரி கனவுல, ஒரு சின்னக் குழந்தை வந்து நாளைக்கு வர்றப்ப எனக்கு பிஸ்கட் வாங்கிட்டு வா'ன்னு கேட்டது சார். அதனால்தான் பூ, பழம், வாங்காம பிஸ்கட் வாங்கிட்டு வந்தேன்" என்று சொல்ல,

பக்கத்திலிருந்த வேலூர் அன்பர் "சார் என் கனவுல சாக்லெட் கேட்டா சார்" என ஆச்சர்யத்தோடு கூறினார்.

எங்கள் அனைவருக்கும் ஒரே இன்ப அதிர்ச்சி. யாராலும் மறக்க முடியாத சம்பவம் இது. அன்று முதல் பாலா பீடத்திற்கு தேங்காய், பூ, பழத்தோடு சாக்லெட்டுகளும், பிஸ்கட்டுகளும் வர ஆரம்பித்தன. பாலா! அவளைத் தேடி வரும் நமக்குத் தேவைகள் தீரும்! அவளுக்குத் தேவையானவை அவளையேத் தேடி வரும்!

ஆம். இப்பொழுதெல்லாம் பாலா கேட்டாலும், கேட்காவிட்டாலும் வருகின்ற பக்தர்கள் குழந்தைக்கு என்ன பிடிக்குமோ அதை எல்லாம் வாங்கி வர ஆரம்பித்து விட்டனர். கடைசியாக ஓர் அம்மையார் தங்க நிறத்தில் மின்னுகின்ற குழந்தைகள் அணியக்கூடிய சிறிய சைஸ் காலணிகளை கொண்டு வந்து வைத்தார்.

பரவசமூட்டும் அந்த பாலா பீடத்துக்கு வருபவர்கள் தங்கள் குழந்தையைப் பார்க்க வருவது போலத்தான் வருகிறார்கள்.

அவர்கள் காட்டும் அன்புக்கு அளவு என்பது தேவையில்லாத ஒன்று.

8

ஆற்றலுக்கு உருவம் தேவையில்லை!

கொடுத்தவள் மகிழ்வுடனே, இன்னல் பலவும் இமைப்
பொழுதில்
தடுத்தவள், தரணி எங்கும் புகழ்ப் பாடத் தக்கதோர்
அவதாரம்
எடுத்தவள்! அன்பையும் அருளையும் அழகிய ஆடை போல
உடுத்தவள்! உண்மையான பக்தரின் கனவிலே வந்து
உதிப்பவள்!

–பாலா அந்தாதி

ஆற்றலுக்கு உருவம் தேவையில்லை. உருவத்தைப் பொறுத்தோ, உயரத்தைப் பொறுத்தோ ஆற்றல் அமைவதில்லை. ஆ.யிரம் கண்கள், ஆயிரம் கைகள் கொண்ட காளிதேவியின் ஆற்றல் ஒன்பது வயது நிறைந்த பிஞ்சுக் குழந்தை பாலாவிடமும் உள்ளது என்றால் யாராவது மறுப்பார்களா? ஆனால் அந்தக் காளிதேவியை யும் ஒரே இடத்தில் நிற்க வைக்க, உட்கார வைக்க ஒரு பரிசுத்தமான பக்தனால் முடியும்.

பக்தனுக்கு கட்டுப்பட்டது தெய்வம். சிவனைத் தூற்றுவதைவிட சிவனடியாரை தூற்றுவது மிக மிகக் கொடிய பாவம், என்பதை நாம் படித்திருக்கிறோம். எல்லா தெய்வங்களும் பக்தன் சொற்படி கேட்கும். விஷ்ணு பக்தர் ஒருவரைக் கோயிலில் இரவு தங்கக்கூடாது என்று சிலர்

கூற அவரோ"எனக்கே இங்க இடமில்ல, உனக்கு மட்டும் என்ன ஸ்பெஷலா" என்ற தொனியில் ஒரு பார்வை பெருமாளைப் பார்த்துவிட்டு விடுவிடுவென வெளியே வர உள்ளேயிருந்த பெருமாளும் வெளியே வந்து விட்டாராம்.

மேற்சொன்ன பட்டியலில் விதிவிலக்கு என்றால் அது பாலாதான். ஆம் அவள் இஷ்டப்படிதான் நாம் ஆட வேண்டும். அவள் சொற்படிதான் நாம் கேட்க வேண்டும். நாம் அன்புடன் சொன்னாலும் இல்லை அதட்டிச் சொன்னாலும் "நில்" என்று சொன்னால் உட்காருவாள். "உட்கார்" என்று சொன்னால் "ஓடுவாள்". அந்தச் சின்னக் குழந்தையான குறும்புக்காரி பாலாவை நாம் திருப்திப்படுத்தி, அவள் மனத்தில் ஓர் இடம் பிடித்தால் போதும்.

இந்த உலகிலேயே மிக மிக பாக்கியசாலிகள் என்ற பட்டியலில் நமது பெயர் நிலையாக இடம் பெற்று விடும்.

இன்று உலகினையே ஆட்டிப் படைக்கும் உன்னத மனிதர் சூப்பர் ஸ்டார் திரு. ரஜினிகாந்த் அவர்களாகட்டும், இந்தியாவையே தனது இசையால் கலக்கிக் கொண்டிருக்கும் இசைப்புயல் திரு. ஏ.ஆர். ரஹ்மான் அவர்களாகட்டும், இந்த இருவரின் இமாலயப் புகழுக்கு என்ன காரணம்?

என்னடா... பாலாவைப் பற்றி எழுதி வந்தவன் திடீரென்று ரஜினி பற்றியும் ரஹ்மான் பற்றியும் எழுதுகிறானே என்று நீங்கள் யோசிக்கலாம். காரணமின்றி எதையும் நான் சொல்லவுமாட்டேன். எழுதவுமாட்டேன். அற்புதமான நடிகர்கள் ஆயிரம் பேர் இருந்தாலும் அவர்களுக்குக் கிடைக்காத பேரும் புகழும் திரு. ரஜினி காந்த் அவர்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது. மற்றவர்கள் எல்லோரும் நடித்தார்கள். ஆனால் திரு. ரஜினி

காந்த் அவர்கள் மட்டுமே குழந்தைகளை திருப்திப் படுத்தி, அவர்கள் மனத்தில் இடம் பிடித்தார்.

சும்மாவா பாடினார். "சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா சின்னக் குழந்தையும் சொல்லும்" என்று. அதே சமயம் திரையுலகில் உள்ள நபர்களில் ஆன்மிகத்தில் ஓர் அற்புதமான இடத்தைத் தொட்டவர் திரு. ரஜினி என்பது மறுக்க முடியாத உண்மை. ஆற்றலுக்கு உருவம் தேவையில்லை என்பது சரிதானே!

அதேபோல திரு. ஏ.ஆர். ரஹ்மான். ஆற்றலுக்கு உருவம் தேவையில்லை என்பது இவருக்குப் பொருந்தும். இசைமேதைகள் பலர் உருவானது இந்தத் தமிழகத்தில் தான். அப்படியிருக்க ஏ.ஆர். ரஹ்மானுக்கு மட்டும் எப்படிப் புகழ் கடல் தாண்டியும் சென்று ஒரு கலக்கு கலக்குகிறது.

பிறந்து ஒரு வருடம் பத்து நாட்களே ஆன எனது நண்பரின் அக்கா குழந்தை "முஸ்தபா முஸ்தபா... டோன்ட் ஒர்ரி முஸ்தபா" என்று பாடுவதைப் பக்கத்திலிருந்து கேட்டுப் பிரமித்துப் போனேன்.

"ம்மா" என்ற ஒரு வார்த்தைத் தவிர வேறு வார்த்தைப் பேசாத அந்தக் குழந்தை "முஸ்தபா" என்று பாடுகிறது என்றால் திரு. ரஹ்மான் அவர்களின் திறமையை நாம் என்னவென்று கூறுவது. பாட்டுக்குப் பெரியவர்கள் தலையாட்டுவது சாதாரணம். ஆனால் அந்தப் பாடல் ஒலிக்கு முன்பே வரும் ஆரம்ப இசையைக் கேட்டு, குழந்தை கள் சந்தோஷத்தில் எகிறிக் குதிக்கின்றன. குதூகலிக்கின்றன என்றால் குழந்தைகளை எந்த அளவுக்கு ரஹ்மான் திருப்தி படுத்தியிருப்பார் என்று புரிகிறதல்லவா.

இவரும் ஆன்மிகத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இந்த இருவரைப் போல குழந்தைகள் மனத்தில் இடம்

பிடித்தவர் வேறு யாரும் இல்லை. இவர்களின் இமாலயப் புகழுக்கு அடிப்படைக் காரணம் புரிகிறதல்லவா!

பெரியவர்களைத் திருப்திப் படுத்துவது சாதாரணம். சிறிய குழந்தைகளைத் திருப்திப்படுத்தி அவர்கள் மனத்தில் இடம் பிடிப்பது மிக மிகக் கடினம். "குழந்தையும் தெய்வமும் ஒன்று" என்று சும்மாவா கூறினார்கள். அப்படியிருக்க தெய்வக் குழந்தையான, குழந்தை தெய்வமான பாலாவை நாம் திருப்திப்படுத்தி அவள் மனத்தில் இடம் பிடித்தால்...

அப்பப்பா... பலன்களை பட்டியல் இட்டு மாள்வே மாளாது! ஆற்றலுக்கும் உருவத்துக்கும் ஏது சம்பந்தம்?

ஆற்றலுக்கு உருவம் தேவையில்லை.

9

பரபரப்பூட்டும் பாலா ரிகார்டிங்!

போகும் பாதையெல்லாம் உன் நினைவுதானடி அது நீங்கின்
பாகும் வேம்பாகும், பாலும் நஞ்சாகும் வேதனையில் மனம்
வேகும் உன் அழகு முகம் காண ஆவல் மிக அதிக
மாகும் மனம் நிலை கொள்ளாமல் அலை பாயும்!

– பாலா அந்தாதி

பரபரப்பூட்டும் "ஒன் டே கிரிக்கெட் மேட்ச்" பார்த்த அனுபவம் உங்களுக்கு உண்டா? அதுவும் "டை" ஆன மேட்ச் என்றால் பரபரப்புக்குப் பஞ்சமே இருக்காது. அதே கதைதான் பாலாவின் ரிகார்டிங்கும். "மதுதேவா சூப்பர் ஹிட்ஸ்" என்ற இசைக்குழு நடத்தி வரும் திரு எம். மது என்பவர் எங்கள் குடும்ப நண்பர். அருமையான குரல் வளம் கொண்டவர். திரைப்பட மெட்டில் ஒரு பத்து பாடல்களை நான் எழுத அவர் பாடுவதாக ஏற்பாடு.

ஸ்டூடியோ என்றால் செலவு அதிகம். ஆகவே வீட்டிலேயே பாடல்கள் பதிவு செய்து கொள்ளலாம் என முடிவானது. பாலா இருப்பது வீட்டில். அவள் பாடல்கள் பதிவானதும் ஒரு வீட்டில் என அப்போது தெரியவில்லை. இப்போது தெரிகிறது. ரிகார்டிங் செய்ய வேண்டிய நாள் வந்தது. முதல் இரண்டு பாடல்கள் பதிவானது மது பாடினார். அவரது தம்பி ரஜினிகாந்த் இசை சேர்ப்பு

வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கீ போர்ட் வாசித்தார்.

அதன் பிறகு பாட வேண்டியப் பாடல்கள் அனைத்தும் பெண் பாடகியோடு சேர்ந்து பாட வேண்டியப் பாடல்கள். மது சொல்லி வைத்திருந்த பெண் பாடகி கடைசி நேரத்தில் காலை வாரி விட, பாடகியைத் தேடி அவர் சென்னையை ஒரு நகர்வலமே வந்தார். நாற்பது ரூபாய்க்கு போன் கால் எகிறியது. சொல்லி வைத்த மாதிரி ஒவ்வொரு பாடகியும் ஒவ்வொரு வேலை நிமித்தமாக ஒவ்வொரு இடத்துக்கு சென்று விட, பாடல்கள் பாட வேண்டியவர் ரோடு ரோடாகத் தேடிக் கொண்டிருந்தார்.

பகல் 12 மணிக்கு ஆரம்பித்த தேடல் மாலை 5 மணி வரை தொடர்ந்தது. 5 மணிக்குச் சுகன்யா என்ற ஒரு பாடகி போனில் வசமாகச் சிக்கினார். அவர் வந்து ரிகார்டிங் துவங்க ஆறு மணியானது. வீட்டிலே ரிகார்டிங் என்பதால் எல்லாவற்றையும் ஒரே டேக்கில் பாடவேண்டும். தவறு செய்தால் முதலிலிருந்து மீண்டும் பாடவேண்டும். கடைசிப் பாடல் பாடி முடிக்கும் போது மணி பன்னிரெண்டு.

ஒரு வழியாக எல்லாம் முடிந்தது. படுக்கும்போது மணி இரண்டு. பாடகர் மதுவின் கால்கள் மரத்துப் போயின. கொஞ்ச நஞ்சமல்ல அலைச்சல். அயோடெக்ஸ் டப்பியில் பாதி அவரது கால்களுக்கு மருந்தாக ஆனது. எது எப்படியோ, பாடல்கள் அனைத்தும் அற்புதம் என பாராட்டு கிடைத்தது.

இந்த பாடகிகளுக்காகப் பட்ட அவஸ்தைகளுக்குப் பிராயச்சித்தமாக இரண்டு பாடகிகளை பாலா எனக்கு அமைத்துக் கொடுத்தாள். ஆர். சுதா, ஆர். லலிதா என்ற இருவருமே எனது தூரத்து சொந்தம். சென்னையில் வசிப்பவர்கள். சகோதரி முறை வேண்டும். சிறு வயது முதலே பாலா பீடத்திற்கு வந்து செல்பவர்கள். நாட்டியம்

ஆடத் தெரிந்ததால் நவராத்திரி விழாவில் வருடா வருடம் வந்து ஆடுவார்கள்.

இந்த இருவரும் பாலா சுப்ரபாதம், ஸ்துதி & போற்றி மற்றும் பாடல்களை பாடவேண்டும் என பாலா நினைத்தாள் போலும். இவர்கள் இருவரோடு பாலா என்னை பரிச்சயம் கொள்ள வைத்தாள். பாசமலர், அண்ணன் ஒரு கோயில் ரேஞ்சுக்கு எங்கள் சகோதர பாசம் வளர்ந்தது. அடுத்த ரிகார்டிங்கில் இவர்கள் இருவரும் பாட முடிவானது. இந்த முறை பாடகி பிரச்சினை இல்லாததால் ரிகார்டிங் பிரச்சினை இருக்காது என தப்புக் கணக்கு போட்டேன்.

ரிகார்டிங் செய்ய தேதி குறித்த நாளில், வேலூரைச் சேர்ந்த ரிகார்டிங் ஆர்ட்டிஸ்ட் கார்த்திக் கொஞ்சத்துக்கும் வரவில்லை. மீண்டும் டென்ஷன். டெண்டுல்கர் அவுட்டான இண்டியன் டீம் போல ஆகிவிட்டது நிலைமை. ஒரு மணிக்கு மேல் கார்த்திக் நுழைய. ஏதோ ராபின்சிங் மட்டையோடு கம்பீரமாக உள்ளே நுழைந்த மாதிரி ஒரு தெம்பு. ஒரு வழியாக சாப்பிட்டு முடித்துவிட்டு எல்லாவற்றையும் தயார் செய்ய மணி 4 ஆனது. மழை வருவது போலிருந்தது. கருமேகம் சூழ்ந்து கொண்டது. கரண்ட் போனால் அவ்வளவுதான்.

அது மட்டுமல்ல. சுப்ரபாதம், ஸ்துதி, போற்றி எல்லாம் 108 வரிகள் கொண்டது. எல்லாம் ஒரே டேக்கில் பாடியாக வேண்டும். மது அவர்கள் அப்போதுதான் சாவகாசமாக ஒரு பாடலுக்கு பின்னணி இசை தயார் செய்து கொண்டிருந்தார். அவர் தம்பி ரஜினியோ ஒவ்வொருவருக்கும் நோட்ஸ் எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தார். (கோனார் நோட்ஸ் அல்ல மியூசிக் நோட்ஸ்)

என் புத்திக்கு எட்டவில்லை. இன்று இந்தியா ஜெயிக்கும் என்று... அதாவது ரிகார்டிங் நடக்கும் என்று. "அம்மா நீயாச்சு உன் ரிகார்டிங் ஆச்சு. ஆளை விடு" எனச் சொல்லி ஹைப்பர் டென்ஷனில் ஆறு மணிக்கு நான் வெளியே வந்துவிட்டேன். என்ன ஆச்சர்யம். ஒவ்வொரு பாடலும் ஒரே டேக்கில் ஓவர். 9.30 மணிக்கு மொத்த ரிகார்டிங்கும் ஓவர். என்னால் நம்பவே முடியவில்லை.

வேலூர் கார்த்தியாகட்டும், பாடிய மது, சுதா, லலிதா வாகட்டும், கீ போர்ட் வாசித்து இசையமைத்துக் கொடுத்த ரஜினியாகட்டும் யாரும் சோடை போகவில்லை. இல்லை சோடை போக விடுவாளா பாலா? எல்லோருக்கும் நல்ல பெயர். கேஸட்டும் திருப்தியாக வந்தது.

இருந்தாலும் பாலா ரிகார்டிங் என்றால் அது ஒரு தனி பரபரப்புதான்.

10

பரிட்சையின்றி பாலாவின் தேர்வு!

செய்தல் யாவும் அவள் செய்வித்தல் ஆகும் வான்மழை
பெய்தல் கூட வாலையவள் விருப்பமாகும். வஞ்சகர் சிரம்
கொய்தல் அவளுக்கு ஒரு விளையாட்டாகும், அழகு துணி
நெய்தல் போல நமை சீர் படுத்துதல் அவள் கடமையாகும்!

–பாலா அந்தாதி

தேர்வு என்பது மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒன்று. குழந்தை பிறக்கு முன்னே நர்ஸிங் ஹோமை தேர்வு செய்வதிலிருந்து, அந்தக் குழந்தை பிறந்து வளர்ந்து வாழ்ந்து இறக்கும் தருவாயில் இருந்தாலும் தனது பெற்றோர்களுக்கு "ஓல்ட் ஏஜ் ஹோம்" தேர்வு செய்வது வரை எல்லாமே தேர்வுதான். மண்ணில் வந்து பிறந்த மனிதன், அதே மண்ணில் சென்று மறையும் வரை ஒவ்வொன்றையும் தேர்வு செய்து கொண்டே இருக்கிறான். ஆனால் தேர்வு செய்யாமல் அவனால் வாழவே முடியாது.

சரி நாம் தேர்வு செய்வது இருக்கட்டும். அது சாதாரணம். நம்மைக் கடவுள் தேர்வு செய்தால் எப்படி இருக்கும். இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? என நீங்கள் கேட்கலாம். அது சரி நான் சொன்னால்தானே உங்களுக்குத் தெரியும். தெய்வங்களில் வேறுபட்டது பாலா என சொல்லியிருக்கிறேன். அந்த பாலாவின் தேர்வு

இருக்கிறதே... அப்பப்பா புல்லரிக்க வைக்கும் புனிதமான சமாசாரம்.

ஒரு துறையில் ஆயிரம் பேர் இருக்கலாம். அதில் ஒரே ஒரு நபரிடம் மட்டும் விஷயத்தைக் கூறவேண்டும். அவரை மட்டும் அழைத்துச் செல்ல வேண்டும். ஆனால் அவர் பின்னே மற்ற அனைவரும் வர வேண்டும். அந்தளவுக்கு அந்த ஒரு நபர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர். ஆனால் வெளிப்பார்வைக்கு இவர்தான் என்று நம்மால் ஊகிக்க முடியாத அளவுக்கு அந்த நபர் மிகவும் சாதாரணமாக இருப்பார். அவரை, அந்த நபரை கண்டுபிடிக்கும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டால் நாம் திண்டாடி திக்குமுக்காடி போக வேண்டியதுதான்.

ஆனால் பாலா அப்படிப்பட்ட நபர்களை தன் பீடத்திற்கு அழைத்து வந்து, அருமையான பொறுப்புகளை அழகாக பிரித்துக் கொடுத்தாள். எங்களுக்கு நல்ல இதயங்களை காட்டிக் கொடுத்தாள்.

திரு. டி லோகசிகாமணி என்பவர், போரூர் சக்தி நகரில் வசிப்பவர். தொலைக்காட்சி நிலையத்தில் (சென்னை தூர்தர்ஷன்) முக்கிய அங்கம் வகிக்கும் இவர் பாலாவின் செல்லப் பிள்ளை. பாலாவின் அற்புதங்களை உணர்வுபூர்வமாக உணர்ந்து கொள்ளும் உண்மையான மனிதர். இவர் மூலமாக, இவரது துறையிலிருந்து பாலா பீடத்திற்கு வந்து அருள் பெற்றவர்கள் பல பேர். சிரிப்பை உதட்டிலிருந்து துவக்காமல் உள்ளத்திலிருந்து துவக்கும் உன்னதமான மனிதர். இவரைப் பார்க்கும் போதெல்லாம் இவர் லோகசிகாமணி அல்ல யோகசிகாமணி என்றே என் மனத்தில் தோன்றும்.

அடுத்து தொலைபேசி அமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கும் திரு. ரவீந்திரன் என்பவர். கீழ்ப்பாக்கத்தில் டெலிபோன் குவார்ட்டர்ஸில் வசிப்பவர். இவர் வீட்டில்

தாம்பூலம் பெற்றுச் செல்லும் அனைவரும் அதில் பாலாவின் புகைப்படத்தைக் கண்டு பிரமிப்படைவர். பாலாவின் பெருமைகளை பாசமோடு பலரிடம் எடுத்துச் சொல்லி, பாலா பீடத்துக்கு அழைத்து வந்து அவர்களுக்கு பரவசமூட்டிய பரிசுத்தமான மனிதர். மிக மிக எளிமையானவர்.

ஒரு புறம் தொலைபேசி. மறுபுறம் தொலைக்காட்சி. நடுவிலே பாலாவின் அரசாட்சி. அது காணக் கண் கொள்ளா அருங்காட்சி.

பாலாவின் அடுத்தத் தேர்வு. காஞ்சி காமாட்சி அம்மன் கோயில் ஸ்தானிகம் திரு. பாபு. அவர் எப்போதிலிருந்து நெமிலி வர ஆரம்பித்தார் என எனக்கு நினைவு இல்லை. காரணம் அவர் பிறந்ததிலிருந்து எங்களோடு இருப்பது போன்ற ஓர் உணர்வை சிறிது காலத்திலேயே ஏற்படுத்தி விட்டதால் இந்தக் குழப்பம். இவர் மூலம் பாலா பீடத்திற்கு வந்து பலன் அடைந்தவர்கள் பட்டியல் படு நீளம்.

பாலா என்ற ஒரு தெய்வக்குழந்தை "பாபு" என்ற ஒரு கள்ளம் கபடமற்ற குழந்தையைக் கொண்டு வந்து எங்கள் குடும்பத்தில் சேர்த்து விட்டதாகத்தான் நாங்கள் கருதுகிறோம்.

அடுத்தவர் அரிமா சேகர். பெயரில் மட்டுமல்ல. பார்ப்பதற்கும் கர்ஜிக்கும் சிங்கம் போலவே கம்பீரமானத் தோற்றம் கொண்டவர். சென்னையில் வசிக்கும் இவரை அடிக்கடி டிடி2ல் தேன்துளியில் பார்த்திருக்கலாம். நண்பர் லோகசிகாமணி மூலம் நெமிலிக்கு பரிச்சயமானவர். விசா கார்டு, சிட்டி பேங்க் கார்டு போன்ற பல கார்டுகளைவிட பல மடங்கு உயர்ந்து பாலாவின் கிரீன் கார்டு பெற்ற ஒரே நபர். பாலாவிடம் எங்களுக்கு பொது வழி என்றால் இவருக்கு மட்டும் சிறப்பு வழி.

முதலில் பாலாபீடம் வந்தபோது கொஞ்சம் ஒதுங்கியே நின்றவர், அது மட்டுமல்ல பெண் தெய்வங்கள் மீது நம்பிக்கையற்று இருந்தவர், கடவுளே நேரில் வந்தாலும் கொஞ்சம் எடக்கு முடக்கான கேள்விகளைக் கேட்கக் கூடிய ஆசாமி. பார்த்தாள் பாலா. அவளே வலியச் சென்று அவர் மடி மீது ஏறி உட்கார்ந்து கொள்ள, இன்று தன் பெயரிலிருந்த LIONஐ எடுத்துவிட்டு பாலா. சேகர் என்று மாற்றிக் கொண்டாரென்றால் அவருக்கும் பாலாவுக்கும் எப்பேர்பட்ட ஒரு பிணைப்பு இருக்கும் என்பதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

சமாதியடைந்த காஞ்சிப் பெரியவாள், நெமிலி பாலா பீடத்தில் தினமும் அபிஷேகம், அர்ச்சனை செய்வதை கனவிலே அடிக்கடி கண்டு களித்த அற்புத பாக்கியசாலி. அதையெல்லாம் விட பாலாவின் ஆசியோடும், உத்தரவோடும் பாலா பீடத்தின் கட்டிடப் பணியில் முக்கிய பங்கு வகிக்கும் அதிர்ஷ்டசாலி.

பாலாவின் தேர்வு முடிந்துவிடவில்லை. அது தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. பாலா தேர்வு செய்த இந்த நால்வருக்கும் ஒரே ஓர் ஒற்றுமைதான். நால்வரும் வெவ்வேறு துறையிலிருந்தாலும், இந்த நால்வருக்கும் கள்ளம் கபடமற்ற பிள்ளை உள்ளம் என்றால் அது மிகையல்ல. குழந்தை உள்ளம் கொண்ட இவர்களை, குழந்தையான பாலா பரிட்சை யின்றி தேர்வு செய்ததில் ஆச்சர்யமொன்றும் இல்லையே ?

11

பணிவும் பணிந்திடும் பணிவு!

தடைகள் வரினும் தயங்கேன், கொலுசொலிக்க ஓடிவரும் கொடி
இடை பூங்கொடியே உனை மறவேன் வாரி வழங்கும் உன்
கொடை குணத்தைப் புகழ்வேன் வயிரம்போல் மின்னும் வண்ண
உடை அணியும் வஞ்சியுனை வாழ்நாள் முழுதும் பணிவேன்!

–பாலா அந்தாதி

ஆன்மிகம் கற்றுக் கொடுக்கும் பாடங்களில் மிகவும் முக்கியமானது பணிவும், அடக்கமும்தான். இவ்விரண்டு பண்புகளும் படித்துப் பட்டம் வாங்குவதால் மட்டும் வந்து விடாது. தமிழிலும், தெலுங்கிலும் "பவ்யம்" எனும் ஒரு வார்த்தை உண்டு. அதை உச்சரிக்கும் போதே ஒரு வித 'பவ்யம்' தோன்றும். இந்த ஒழுக்கம், அடக்கம், பணிவு, பக்தி, பவ்யம் இவையனைத்தையும் ஒரே இடத்தில், ஒரே மனத்தில் நிலை நிறுத்த முடியுமா? இத்தனைப் பண்புகளை யும் ஒரு சேரப் பெற முடியுமா?

இவையெல்லாம் அழகாக எழுதுவதற்குத்தான் சாத்தியம். வாழ்க்கை நடைமுறைக்குச் சாத்தியமல்ல என்று கொஞ்ச காலத்துக்கு முன் வரை நான் நினைத்திருந்தேன். என்னுடைய எண்ணமெல்லாம் தவிடு பொடியானது. அதற்கு முக்கியக் காரணம் வளசரவாக்கம் சுவாமிஜி.

நாங்கள் அவரை அப்படித்தான் அழைப்போம். கடந்த ஒன்றரை வருடமாக நெமிலிக்கு தடங்கல் இல்லாமல் தொடர்ச்சியாக வந்து சென்று கொண்டிருக்கும் ஒரே மனிதர் இவர்தான்!

இதிலென்ன ஆச்சர்யம் என்கிறீர்களா? நிறைய உண்டு. இப்பொழுது நான் எழுதுகின்ற விஷயம் உங்களுக்கு மிகையாகத் தோன்றலாம். நம்ப முடியாமல் இருக்கலாம். ஆனால் அதுதான் அப்பட்டமான உண்மை. "பாலா" இந்த இரண்டு எழுத்துக்குள்ள ஆற்றலை இது வரை வரையறுத்துக் கூறவில்லை. கூறவும் முடியாது. அளவிலா ஆற்றல் கொண்ட அந்தக் குழந்தைத் தெய்வத்திடம் தினையளவு திமிர் இருந்தால் கூட அவ்வளவுதான். உள்ளே நுழைய முடியாது. பணிவு இல்லாதவர்களை, அவர்கள் பெரிய ஞானியாகவே இருந்தாலும் கூட பக்கத்தில் சேர்க்க மாட்டாள். முற்றும் துறந்த முனியேயானாலும், பல கற்றும் தெளிந்த கவியே ஆனாலும் கர்வத்தோடு அங்கு நுழைந்தால் மீண்டும் மறுமுறை நெமிலி வருவது கனவில் கூட நடவாத காரியமாகி விடும்.

மற்ற கடவுள்களை கைப்பையில் அடைக்கும் வல்லமை பெற்ற மகா முனியானாலும், அவள் முன் மண்டியிட்டேத் தீரவேண்டும். பாலா வைத்ததுதான் சட்டம். பாலா விளையாடப் பிறந்தவள். அவள் விளையாட்டில் அவள் மட்டுமே விளையாடுவாள். அவளோடு நாம் விளையாட நினைத்தாலோ, அவளைப் பரிட்சித்துப் பார்த்தாலோ நிச்சயம் தோல்வியோடு பெருத்த அவமானம் உறுதி.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், பாலா விளையாட ஆரம்பிக்கும்போதே, நிச்சயம் நம்மையும் உடன் விளையாட அழைப்பாள். அதாவது பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலை ஆட்டுவது

போல. நிச்சயம் தோல்விதான் ஏற்படும் என்று தெரிந்தாலும், அடக்கமோடும் பய பக்தியோடும் விளையாட ஆரம்பித்தால், நமக்கு ஏற்படும் தோல்வியே பெருத்த மகிழ்ச்சியை ஏற்படுத்தும். இந்த விஷயத்தை நான் சிலரிடம் கூறியபோது அவர்கள் "பாலா என்ன வீடியோ கேமா ஆடுகிறாள்" என்று கிண்டல் செய்துள்ளனர்.

இதை எழுத்து பூர்வமாக என்னால் உணர்த்த முடியாது. ஆனால் உணர்வுபூர்வமாக அனைவருமே உணர முடியும். பாலா பீடத்தில் அனைத்துமே பாலாதான். அவ்விடத்தில் அவள் ஒப்புதலின்றி சிறு உப்பும் சுவை தராது. அந்த இடத்தில் வந்து நான் செல்வாக்கு மிகுந்தவன். மிகப் பெரியவன் என்ற நினைப்பு வந்தாலே போதும், அடுத்தபடியாக அவர்களுக்கு முகவரியே இல்லாமல் செய்து விடுவாள். "என்னடா இவன் மந்திரவாதியும், அரசியல்வாதியும் மிரட்டுவது போல மிரட்டுகிறானே" என்று எண்ண வேண்டாம்.

இது மிரட்டல் அல்ல. ஒரு சின்ன எச்சரிக்கை அவ்வளவுதான். அகங்காரம், அகம்பாவம், வீண் கர்வம் மற்றும் வரட்டு கவுரவம் இவற்றை மூட்டை கட்டி ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு இல்லை தூக்கி எறிந்து விட்டு, அவளிடம் வந்தால் நம்மைவிட பாக்கியசாலி இவ்வுலகத்தில் யாருமில்லை.

சென்னையைச் சேர்ந்த அன்பர் ஒருவர் வீட்டுக்கு வந்த போது பேச்சு வாக்கில், "நான் முருக பக்தன். என் பொண்ணுக்கு கல்யாணம் நடக்காம தள்ளிட்டே போனது. நான் முருகனை வாய்க்கு வந்தபடி கண்டபடி திட்டினேன். என் பொண்ணுக்கு கல்யாணம் நடந்தது. நீங்களும் ஏதாவது செய்யலேன்னா பாலாவை கண்டபடித் திட்டுங்க" எனப் பெருமிதம் பொங்க எங்களிடம் கூறினார்.

முருகன் என்னமோ இவர் திட்டுகளுக்கு பயந்து தான் கல்யாணத்தை நடத்தி வைத்தது மாதிரி, அவர் பேசியதைக் கேட்ட எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "நீ என்ன பெரிசா செய்திட்டே?" என்று யாராவது ஒருவர் வந்து பாலாவிடம் கேட்டுப் பார்க்கட்டுமே! அவ்வளவு தான் அடுத்த நிமிடமே செய்ய வேண்டியதைச் செய்து அவர்களை பீஸ் போன பல்பாக செய்து விடுவாள். மற்ற தெய்வங்களை வேண்டுமானாலும் குறை கூறலாம். ஆனால் "பாலா" ஒரு குழந்தை! அவளைக் குறை கூறுதல், நம் கண்களை நாமே குத்திக் கொள்வதற்குச் சமம்.

சரி விஷயத்துக்கு வருகிறேன். அப்பேர்பட்ட பாலா பீடத்துக்கு வளசரவாக்கத்திலிருந்து சில வருடங்களுக்கு முன்பு சுவாமிஜி வர ஆரம்பித்தார். இப்போது அவர் எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கத்தினராகி விட்டார். பாலாவுக்குப் பிடித்தமானவராகிவிட்டார். அதற்கு முக்கிய காரணம் சிறிது கூட அகம்பாவமோ, கர்வமோ இன்றி சகஜமாக, ஒரு சாதாரண மனிதராக அவர் பழகுவதுதான். இன்றைய புதிய கட்டிடத்தில் உருவான பாலா பீடத்தில் அவரது பங்களிப்பும் ஒத்துழைப்பும் ஏராளம்.

"நான் செய்கிறேன். இது என்னால் முடியும். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்" இது போல பேசுவது தவறாகாது, பாலாவுக்கு ஏதாவது செய்ய நினைப்பவர்கள் இது போல் பேசியிருக்கிறார்கள். ஆனால் கட்டடத் திருப்பணி ஆரம்பித்த வேளையில் சுவாமிஜி என்னிடமும் என் தந்தையாரிடமும் இவ்வாறு கூறினார்.

"அவளுக்கு தொண்டு செய்யற வாய்ப்பை, அவகிட்ட கேட்டு எனக்கு வாங்கிக் கொடுங்க. ஒரு பத்து பைசா அவளுக்கு செலவு பண்றதுன்னா கூட, அவளுக்கு பிடிக்கலேன்னா தூக்கி எறிஞ்சுட்டு போயிடுவா! எப்பேர்ப் பட்ட லட்சாதிபதியானாலும் கோடீஸ்வரன் ஆனாலும்

"நான் செய்யறேன்" என்று கொஞ்சம் தற்பெருமையா சொன்னாக்கூட "நீ என்ன எனக்கு பண்றதுன்னு" ஒரே பார்வையிலே உதறி தள்ளிட்டுப் போயிடுவா. அதனால உங்க பணியிலே என்னையும் ஒருத்தனா சேர்த்துக்குங்க"

என்ன ஒரு பணிவு என்று என் மனம் ஆச்சர்யப் பட்டது. அதனால், இன்றும் அவர் நினைத்த மாத்திரத்தில் நெமிலி வந்து செல்கிறார். வந்தால் அருள்வாக்குச் சொல்வது, கழுத்தை நிமிர்த்தி ஒரு கம்பீரப் பார்வை பார்ப்பது இப்படி எதுவுமே கிடையாது. வருவார் வந்தவுடன் ஒரு மணி நேரம் தியானம் செய்வார். தீபாராதனை நடக்கும். பிறகு அனைவரிடமும் சகஜமாகப் பேசிவிட்டு கிளம்பி விடுவார். தன் வாழ்நாட்களை மாணவ மாணவிகளுக்கு கல்வி மற்றும் ஆன்மிகம் கற்றுக் கொடுப்பதிலும், தியானம் செய்வதிலும் கழிக்கிறார்,

சரி இவராவது பல கற்றுத் தெளிந்த, முற்றும் துறந்த ஞானி. பணிவாகக் காட்சி தருகிறார். எளிமையாக நடந்து கொள்கிறார் எனலாம். ஆனால் அவரிடம் படிக்கும் மாணவ மாணவிகள். அப்பப்பா... இளைய சமுதாயமே இப்படி மாறிவிட்டால் எப்படி இருக்கும் என்று நான் கற்பனை பண்ணும் அளவுக்கு அப்படி ஒரு பயபக்தி + பணிவு. அவரிடம் கற்றுத் தேர்ந்து மேல் படிப்பு முடித்து பெரிய பெரிய கம்பெனிகளில் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கும் பலர் அவரிடம் பேசும் பேச்சும், நடந்து கொள்ளும் முறையும் எனக்கு பேராச்சர்யத்தை உண்டு பண்ணியுள்ளது.

எனக்கு ஒரே ஒரு பெருமை என்னவென்றால் சிதறிக் கிடக்கும் பல நல்ல உள்ளங்களை பாலா தேர்வு செய்து எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்ததுதான். பலப்பல நல்ல உள்ளங்களோடு பேசிப் பழகி உறவாட அன்னை பாலா, அருமைக் குழந்தை பாலாதான் காரணம் என்றால் அது மிகையாகாது.

12

கனவிலே கேட்பவள் கண்ணெதிரிலே கேட்டால்...

உண்மை சொல்வேன் கேளுக நீவிர், நிஜத்தில் உள்ளமதில்
வெண்மை கொண்டு இவ் வுலகத்தை ஆள வந்த சிறுமி
திண்மை நிறை பாலா தன் சிறு விழிக்குப் பூகும்
கண்மை கண்டால் போதும் கடுந்துயரும் காணாமல் போகும்!

–பாலா அந்தாதி

பாலா! கேட்டதைக் கொடுப்பவள். தனக்கு வேண்டியதை கனவு வாயிலாகக் கேட்டுப் பெறுபவள். காஸ்ட்லி வெள்ளி ஊஞ்சல் முதல், காட்பரிஸ் சாக்லெட் வரை எது வேண்டுமானாலும் தன் பக்தர்களிடம் சென்று உரிமையோடு கேட்டுப் பெறுவது அவள் வாடிக்கை! கடவுளுக்குப் பிறர் சொல்லிச் செய்வது, இல்லையென்றால் தானே வேண்டிக் கொண்டு செய்வது, இந்த இரண்டும் தான் இன்று எல்லாக் கோயில்களிலும் நடக்கும் நடைமுறை!

நெமிலி மட்டுமே இதில் விதிவிலக்கு. யார் என்னிடம் வந்தாலும் எதுவும் அவரிடம் கேட்கக் கூடாது என்பது உத்தரவு. ஆம் பாலா இட்ட மிக கண்டிப்பான உத்தரவு! ஆகவே பீடத்திலிருக்கும் நாங்கள் யார் வந்தாலும் எதுவும் கேட்பதில்லை! ஆனால் பாலாவோ தனக்கு வேண்டியதை

தானே கேட்டுப் பெற்றுக் கொள்வாள். பாலாவின் பக்தர்களுக்கும், பாலாவுக்கும் கனவுதான் மிகப் பெரிய பாலம்.

"நான் கனவில் மட்டுந்தான் வந்து கேட்பேன் என்று யார் சொன்னது. கண்ணெதிரே வந்து நின்றும் கேட்பேன்" என்று சொல்வது போல் ஒரு சம்பவம். சென்னையில் திருமணத்திற்கு வந்திருந்த ஒரு கோஷ்டி "கிஷ்கிந்தா செல்லலாமா? இல்லை எம்.ஜி.எம். செல்லலாமா" என யோசிக்க, குழந்தைகளை மகிழ வைக்கும் இடத்திற்குச் செல்வதைவிட, குழந்தையாய் இருந்து வருபவர்களை மகிழ வைக்கும் பாலா பீடம் செல்லலாம் என முடிவெடுத்தனர்,. இது வரை அவர்கள் பாலா பீடத்திற்கே வந்ததில்லை.

டாக்ஸி ஒன்று ஏற்பாடு செய்து கொண்டு திருமணம் முடிந்த கையோடு நெமிலி நோக்கிப் புறப்பட்டனர். மாலை 3 மணியளவில் நெமிலி வந்து சேர்ந்தனர். அப்பா வெளியூர் சென்றிருந்ததால் நான்தான் அவர்களை வரவேற்று உபசரித்தேன். வந்தவர்களில் அக்கா, தங்கை இருவர். இருவருமே பாலா உபதேசம் பெற்றவர்கள். ஞானபூமியில் "நெமிலியைப் பற்றி வந்த கட்டுரையைப் படித்து எப்படியாவது நெமிலி சென்றே தீர வேண்டும் என்று பல தடைகளை மீறி வந்தவர்கள் என்ற விஷயத்தைக் கேள்விப் பட்டேன்.

அக்காள் கோவையைச் சேர்ந்தவர். நகைக்கடை வைத்திருப்பவர். தங்கை பெங்களூரைச் சேர்ந்தவர். அவரது கணவர் மெஷினரி டூல்ஸ் கடை வைத்திருப்பவர். இருவரும் தத்தம் கணவன்மார்களோடும், குழந்தைகளுடனும் வந்திருந்தனர். நான் இந்த விஷயத்தை எல்லாம் முதலில் தெரிந்து கொள்ளவில்லை. வந்தவர்களிடம் பாலாவைப் பற்றியும், பாலா பீடத்தைப் பற்றியும் விரிவாகக் கூறினேன். கனவு மூலம் அவள் கேட்டுப் பெற்ற கிரீடம், வெள்ளி

ஊஞ்சல் போன்ற விஷயங்களைச் சொல்லச் சொல்ல வந்தவர்கள் கண் கலங்கி நெகிழ்ந்து போயினர்.

பாலாவுக்குத் தீபாராதனை முடிந்தது. பிரசாதங்கள் கொடுத்தேன். அக்கா, தங்கை இருவரும் பாலாவுக்கு எதிரே அமர்ந்தபடி கண்ணை மூடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். என் தாயார் சிறிது நேரம் கழித்து அவர்களுக்குக் காபி கலந்து கொடுத்தார். அப்போது அவ் விருவரும் ஆனந்தக் கண்ணீரோடு கூறிய விஷயம் மெய் சிலிர்க்க வைத்தது. இது நாள் வரை கனவிலே வந்து தனக்கு இது வேண்டுமென ஆசையோடும், உரிமையோடும் கேட்ட பாலா, முதன் முதலாக அவ்விருவரிடமும், தனித்தனியே பக்கத்தில் வந்து நின்று, கண்ணை மூடியிருக்கும் சமயம் கட்டளையிட்ட அந்த நேரம், இருவரின் கண்களிலிருந்தும் தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டியதாம்.

கண்ணைத் திறந்து இருவரும், ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு தங்களுக்கு ஏற்பட்ட அந்த அற்புத அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள, இருவருக்குமே ஏகப்பட்ட வியப்பு. ஆம்.... சின்னஞ்சிறு குழந்தையாம் அன்னை பாலா, சிறு குழந்தை வடிவில் பீடத்திலிருந்து இறங்கி வந்து, அதுவும் எப்படி ஒரே ஒரு ஜட்டி அணிந்த நிலையில் மேலாடை இல்லாமல், ஆசை ஆசையாக பெங்களூரைச் சேர்ந்த தங்கையிடம், "எனக்குப் பட்டுப் பாவாடை வாங்கித் தர்றியா" எனக் கேட்டிருக்கிறாள். அதே சமயம் கோவையைச் சேர்ந்த அக்காளிடம், "எனக்கு தங்கத்துல, கல் பதிச்ச சின்னப் பாவாடை செய்து தர்றியா?" என வாஞ்சையோடு கேட்டிருக்கிறாள்.

இதில் ஆச்சர்யப்பட வேண்டிய விஷயங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. பல உண்டு. இது கனவல்ல என்பது ஊர்ஜிதமாகிறது. இருவருமே தூங்கவில்லை. மனமுருக கண்ணை மூடிய நிலையில் பாலாமுன் அமர்ந்திருந்தனர்.

சரி ஏதோ ஒருவித பிரமையாக இருக்குமோ என்றால் அதுவுமில்லை. காரணம், ஒரே சமயத்தில் இருவருக்கும் ஒரே மாதிரி பிரமை தோன்ற சாத்தியக் கூறுகள் இல்லை. அப்படியே இருந்தாலும் இருவரிடமும் ஒரே மாதிரிப் பட்டுப் பாவாடை கேட்டிருக்கலாம். அதை விடுத்து ஒருவரிடம் பட்டுப் பாவாடையும், மற்றொருவரிடம் தங்கத்தில் பாவாடையும் கேட்டது எப்படி?

சரி.. அப்படி என்றால், கனவுமில்லை, பிரமையு மில்லை. பிறகு நேரில் வந்துதான் பாலா இதைக் கேட்டிருப்பாள் என்பதற்கு என்ன ஆதாரம்? இருக்கிறது. சில மனோதத்துவ நிபுணர்கள் சிலரை ஆழ் நிலை தூக்கத்துக்குக் கொண்டு சென்று அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்பார்கள். அப்போது சம்பந்தப்பட்ட நபர்கள் தங்கள் வாழ்வில் நடந்த சம்பவங்களை விரிவாகக் கூறுவார்கள். அவர்கள் ஆழ் மனத்தில் தங்கியிருக்கும் சில விஷயங்கள் கூட வெளிவரும்!

இப்போது கூறுங்கள். சம்பந்தப்பட்ட நபருக்கு ஏற்பட்டது கனவா? இல்லை பிரமையா? இரண்டுமில்லை. அந்த நிபுணரின் திறமை அது. இது முழுக்க முழுக்க நிஜம். அதே போலத்தான் சகோதரிகள் இருவரும் ஆழ்நிலைத் தியானத்தில் இருந்த போது மனோதத்துவ நிபுணர் வந்து கேட்பது போல பாலா முதலில் ஒரு சகோதரியிடம் இன்னது வேண்டும் என்று கேட்டுவிட்டு பிறகு பக்கத்திலி ருக்கும் மற்றொரு சகோதரியிடம் எனக்கு இன்னது வேண்டும் எனக் கேட்டிருக்கிறாள்.

என்ன ஓர் அற்புதமான பாக்கியம். அதுவும் எடுத்த எடுப்பில். இதுவரை பாலா பீடத்திற்கு வராதவர்கள். முதன் முதலில் வந்தபோதே இந்த ஒப்பற்ற லீலையை பாலா அவர்களிடீம் புரிந்திருக்கிறாள் என்றால் ஒரு நிமிடம் எல்லாமே ஸ்தம்பித்துப் போனது போன்ற பிரமை.

சகோதரிகள் இருவருக்கும் இதைவிட ஆச்சர்யம் என்னவென்றால் அவரவர் தகுதிக்குத் தக்கபடி பாலா ஒருவரிடம் பட்டுப் பாவாடையும், நகைக் கடை வைத்திருப்பவரிடம் சின்னஞ்சிறிய தங்கப் பாவாடையும் கேட்டாளே என்பதுதான். இதில் மற்றொரு ஆச்சர்யம் கோவையைச் சேர்ந்த அம்மணியிடம் தங்கப் பாவாடை கேட்டதோடல்லாமல் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்ன டிஸைன், அதை எப்படிப் பொருத்த வேண்டும் என்பதை ஓர் ஆசிரியர் மாணவனுக்கு விளக்குவது போல சொல்லிய அந்த நிகழ்ச்சி மனதிற்கு மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்துவது உறுதி.

அது மட்டுமின்றி, உடன் வந்திருந்த தங்கையின் கணவருக்கு 'பாலாவுக்கு ஒரு பளிங்கு மண்டபம் போல் சலவைக்கல்லிலே ஒரு மண்டபம் செய்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியுள்ளது. அடுத்த மாதமே பளிங்கு மண்டபமும், பட்டுப் பாவாடையும் பெங்களூரிலிருந்து வந்து விட்டது. அதே போல் கோவையைச் சேர்ந்த பொற் கொல்லர் பாலாவை நேரிலே பார்க்காமலேயே கனகச்சித மாக, பாலா கொடுத்த டிஸைனைக் கொண்டு அதி அற்புதமாக வடிவமைக்க, அதுவும் விரைவில் பாலா பீட,த்தை அடைந்தது.

அற்புதமானத் தங்கப் பாவாடை அலங்காரம், பாலாவைப் பார்த்தால் விக்கிரஹம் மாதிரியே தெரியவில்லை. இரண்டு பக்கமும் கைகள் அமைத்து வடிவமைக்கப்பட்ட அந்தத் தங்கப் பாவாடையை அணிந்த பின் பாலா ஒரு சிறிய பெண்ணாகவே காட்சி அளித்தாள். "காணக் கண் கோடி வேண்டும்" என்ற வாக்கியம் இந்த இடத்திற்கு மிக்க பொருத்தம். ஒரு முறை நினைத்துப் பாருங்கள். கலி முத்திய இந்தக் கலிகாலத்தில் இதெல்லாம் எப்படி?

அப்பப்பா... கலியுகத் தெய்வம் ஸ்ரீ பாலா, கண்கண்ட தெய்வம் ஸ்ரீ பாலா என்பது மறுக்க முடியாத உண்மை.

13

சிறிய உள்ளமதில் சீரிய பக்திவெள்ளம்!

ஆக்கும் பொருளுக்கும் ஆணிவேர் நீயன்றோ – எந்த
நாக்கும் நன்றி சொல்லும் நர்த்தகி நீயன்றோ – எந்த
நோக்கும் இன்றி நோற்றலு மின்றி வந்தேன் உன் அமுத
வாக்கும் அற்புத வாய்ப்பும் எனை உலகுக்கு உணர்த்தியது!

–பாலா அந்தாதி

பக்தி மார்க்கம் என்பது இந்தக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவது கண்கூடு. பெரியவர்களுக்கே ஏதாவது பிரச்னை என்றால்தான் கால்கள் கோயில் பக்கம் நாடுகிறது. படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கோ பரிட்சை ரிசல்ட் வரும்போதுதான் கோயிலின் ஞாபகம் வருகிறது. மற்றபடி இன்றைய சிறுவர் சிறுமிகளை பயமுறுத்தி வைப்பதற்குத்தான் பக்தி பயன்படுகிறது. அதே சமயம் சிறுவர்கள் நெஞ்சில் கடவுளைப் பற்றிய எண்ணம் ஆழமாகப் பதிந்து விட்டால், அவர்களை வேறு எந்த சக்தியாலும் அசைக்க முடியாது.

வேலூரைச் சேர்ந்த சிறுவன் ஒருவனின் பக்தி என்னை வியப்படையச் செய்தது. அவ்வளவு சிறிய வயதில் அப்படிப்பட்ட ஒரு கடவுள் நம்பிக்கை எப்படி அவனுள் ஏற்பட்டது என்றே எனக்குப் புரியவில்லை. இருமல், ஜலதோஷத்தில் ஆரம்பித்து எப்பேர்ப்பட்ட ஜுரம்

வந்தாலும், உடனே அவன் தன் தாயை அழைத்து "அம்மா எனக்கு பாலா குங்குமம் சீக்கிரம் நெத்தியிலே வச்சு விடு" என்றுதான் சொல்வானாம்.

காலை பல் தேய்ப்பதிலிருந்து, பள்ளிச் சென்று திரும்பும் வரை எப்போதும் பாலா பற்றிய பேச்சுதான். அவன் வயதுச் சிறுவர்கள் "பிரபு தேவாவுக்கு" இந்த டிரஸ் சூப்பர், அந்த டிரஸ் சூப்பர் என்று சண்டை போட்டுக் கொண்டிருக்க, இவனோ பாலாவுக்குப் பச்சைக் கலர் பாவாடை சூப்பர் என்பானாம்.

தூக்கத்தில் உளறும்போதுகூட பாலா பற்றிய பேச்சு இருக்குமாம். அதைவிட பெரிய ஆச்சர்யம் வீடியோ கேம் ஆடும்போது ஓர் ஆட்டத்தில் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொண்டேச் செல்லவேண்டும், அப்படிச் செல்லும் போது 10000 பாயிண்ட் எடுத்துவிட்டால் 'சேவர்' என்று ஒன்று வரும். அது எதிரிகளின் தாக்குதலிலிருந்து நம்மைப் பத்திரமாக அழைத்துச் செல்லும்.

அந்த "சேவர்" என்ற ஒன்றுக்கு இந்தச் சிறுவன் "பாலா" என்று பெயர் வைத்துவிட்டான். ஆட்டம் ஆடும் போது "இன்னும் 300 பாயிண்ட் எடுத்தா போதும் "பாலா" வந்துடுவா. அப்புறம் "பாலா" என்னை சேஃபா கூட்டிட்டு போயிடுவா." என்று ஆடிக்கொண்டிருப்பவன், 1000 பாயிண்ட் எடுத்துவிட்டால் "பாலா"வே நேரில் வந்து விட்டதுபோல ஒரு சந்தோஷக் கூச்சலிடுவானாம். அந்த சிறுவனின் பக்திக்கு ஈடு இணை ஏது?

நாமெல்லாம் வாழ்க்கையை ஒரு விளையாட்டாக நினைத்து அவ நம்பிக்கையோடு, அவள் மேல் நம்பிக்கை வைக்காமல் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், ஒரு விளையாட்டையே நம்பிக்கையோடு, பாலாவை தன்னோடு இணைத்துக் கொண்டு ஆடும் அந்த சிறுவனின் மனப் பக்குவத்தை என்னவென்று கூறுவது. அது

மட்டுமல்ல. நாம் வெறும் சம்பிரதாயங்களை பக்தி எனக் கூறிக்கொண்டு அலைகிறோம்.

நம்மில் பலரும் சடங்குகளையும், சம்பிரதாயங்களை யும் கடைபிடிக்கிறோமே ஒழிய, மனிதாபிமானம், மனித நேயம் போன்ற பல குணங்களை கைவிட்டு விடுகிறோம். தூய பக்தி என்பது தீய குணங்கள் இல்லாத பக்தி எனப் பொருள்படும். பரிசுத்தமான பக்தி என்பது பாவம் செய்யாத பக்தி எனப் பொருள்படும்.

மனத்தளவில் பக்குவம் வராமல் மகத்தான நிலையை நம்மால் அடையவே முடியாது. சில சிறுவர்கள் அடைந்துள்ள மனப் பக்குவத்தைக் கூடப் பெரியவர்கள் அடையவில்லையே என நினைக்கும்போது வருத்தமாகத் தான் உள்ளது. ஆனால் அதுதான் உண்மை. திரைப்பட மெட்டில் பாலாவின் ஒன்பது பாடல்கள் எழுதி கேஸட்டாக வெளியிட்டோம். பாடல்கள் திரைப்பட மெட்டில் அமைந்திருந்தாலும் பாடல் வரிகள் ஒவ்வொன்றும் பட்டை தீட்டிய வரை வரிகள் போல் ஜொலித்தது.

கேஸட் வெளியான நான்காவது மாதம் சென்னையி லிருந்து வந்த ஒரு கடிதம் கண்டு மிகவும் வேதனை அடைந்தேன். "என்ன சார் கேஸட் இது. ஒரே சினிமா குப்பை. சகிக்கலை. தூக்கி தூர எறிஞ்சுட்டேன்." கடிதத்தின் இந்த வரிகள் மனத்தை ரணமாக்கியது. அதேபோல் மற்றொரு பெண்மணி பாலா பீடம் வந்திருந்தார். டேப் ரிகார்டரில் கேஸட் ஒலித்துக் கொண்டிருந்தது.

"நெமிலியிலே ஒரு பீடம்தான்
நெஞ்சம் மகிழ்ந்திடும் பாடத்தான்
நேற்றல்ல இன்றல்ல என்றும்தான்
அருள் வாரி வழங்கிடும் அன்னைதான்
அன்னையின் அருகினில் அன்பு இருக்குது

அனுதினமும் அது நம்மை இழுக்குது
பார்வையிலே ஒரு பாசம் இருக்குது
பாடிவிட்டால் நம் பாவம் பறக்குது!"

"ஒருவன் ஒருவன் முதலாளி உலகில் மற்றவன் தொழிலாளி" எனும் பாடலின் மெட்டிலமைந்த மேற் கண்ட பாடல் ஒலித்தபோது அந்த அம்மையார் "அந்த பாட்டை நிறுத்துப்பா. ரஜினி ஞாபகம்தான் வருது. பாலா ஞாபகம் மறந்து போயிடுது" என்று சொன்னார். பாடலைப் பாதியில் நிறுத்திய நான் அன்றே ஒரு முடிவு செய்தேன். "இனி இந்த கேஸட்டை விற்பனைக்கே வைக்க வேண்டாம். வருபவர்களால் வருத்தம்தான் மிஞ்சுகிறது" என நினைத்து மிச்சமிருந்த கேஸட்டுகளை உள்ளே எடுத்து வைத்து விட்டேன்.

அப்போதிலிருந்து அந்தப் பாடலைப் போடுவதைக் கூட நிறுத்தி விட்டேன். சில மாதங்கள் கழித்து சென்னையிலிருந்து ஒரு பெரியவரும் அவரது பேரனும் வந்திருந்தனர். தீபாராதனை முடிந்த கையோடு அவர் திரைப்பட மெட்டிலமைந்த பாலாவின் அந்த கேஸட் வேண்டும் என்றார். அவ்வளவு அக்கறையோடு கேட்டதால் நானும் நடந்த சம்பவங்களை அவரிடம் கூறினேன். அவ்வளவுதான் அவருக்கு வந்ததே கோபம்.

"ஏண்டாப்பா, கோயிலுக்குப் போறவன் பஞ்ச லோகத்துல இருக்கற விக்ரஹத்தைப் பாத்துட்டு பரமேஸ்வரன் ஞாபகம் வரலே பாலு ஜுவல்லர்ஸ் ஞாபகம்தான் வருதுன்னு சொன்னா அவன் பைத்தியக் காரன்!

அதே மாதிரி கல்லுல செதுக்கி வச்ச கடவுள் விக்கிரஹத்தை பாத்துட்டு எனக்கு கடவுள் ஞாபகம் வரலே கல்லுதான் ஞாபகத்துக்கு வருதுன்னு சொல்றவன் கடைஞ் செடுத்த மடையன். இசைங்கறது பொதுவான ஒண்ணு.

கடவுள் எனக்கு கர்நாடக இசைதான் ரொம்பப் பிடிக்கும். சினிமா இசை பிடிக்காதுன்னு இவங்க கிட்ட வந்து தனியாச் சொல்லிட்டுப் போனாரா?

கடவுள் பேரச் சொல்லி அட்டூழியம் பண்ற போலி சாமியாருங்களை விட, சினிமாவுல நடிக்கற ரஜினி, கமல் எவ்வளவோ தேவலை. இதோ என் பேரன் இருக்கானே! டி,வி.ல ரஜினி நடிச்ச ‘ஒருவன் ஒருவன் முதலாளி,’ பாட்டைப் போட்டா, அந்த சத்தத்தைக் குறைச்சுட்டு, “நெமிலியிலே ஒரு பீடந்தான் நெஞ்சம் மகிழ்ந்திடும் பாடத்தான்”னுட்டு சத்தம் போட்டு பாடுவான். வெளியே எங்கியாவது போறப்ப ரேடியோவுல அந்த பாட்டு போட்டா “தாத்தா நெமிலி பாட்டு தாத்தா, பாலா பாட்டு”ன்னு சந்தோஷப்படுவான்.

அவ்வளவு ஏன் போன வாரம் ஒரு பாட்டு போட்டான். நல்ல பாட்டு... என்ன பாட்டு அது” பேரனிடம் கேட்க “முத்து மணி மாலை பாட்டு தாத்தா” சிறுவன் பளிச்சென்று பதில் கூற பெரியவர் மீண்டும் தொடர்ந்தார்.

“ஆம்... முத்துமணி மாலை. விஜய்காந்த் பாட்டு. டேய் அதுல ரெண்டாவது பேரா பாடினியே அதப்பாடு” எனச் சொல்ல, உடனே சிறுவன் பாட ஆரம்பித்தான்.

“அன்புதான் அவளின் மந்திரம்
இல்லையே தந்திரம்!
காக்குமே அவளின் எந்திரம்
காவலும் நிரந்தரம்!
அன்னை வந்து சேர்ந்த
அந்தப் பீடத்தில்
பாடல் ஒன்றுதானே வேதமந்திரம்!”

அந்தச் சிறுவன் ராகமோடு பாட எனக்கே இன்ப அதிர்ச்சியாக இருந்தது. பெரியவர் மீண்டும் தொடர்ந்தார்.

"பாத்தியா, ரெண்டாம் கிளாஸ் படிக்கிற பையன் இவ்வளவு ஸ்பஷ்டமா பாடறான்னா என்ன காரணம். அவ அவனுக்காக எழுதிகிட்ட பாட்டு. பேனா பிடிச்சது மட்டும் தான் நீ. இந்த சினிமா பாட்டைக்கூட அவதான் செலக்ட் பண்ணியிருக்கா. உனக்குப் பிடிச்சு, எனக்குப் பிடிச்சு என்ன ஆகப்போவுது. அது அவளுக்குப் பிடிச்சிருக்கு! அவளை மாதிரி இருக்கற குழந்தைகளுக்குப் பிடிச்சிருக்கு" எனச் சொன்னவர், ஏற்கெனவே வாங்கிச் சென்ற கேஸட்டை அவரது உறவினர்கள் கேட்டு, பிடித்துப்போய், பிடிவாதமாக எடுத்துச் சென்றுவிட மற்றொரு கேஸட்டை கேட்டு வாங்கிச் சென்றார்.

அவர் சென்ற ஒரு மணி நேரத்திற்கு எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சிற்பி உளி கொண்டு சிலையைச் செதுக்க, அந்த சிலையைப் பார்த்து ஆயிரம் பேர் ஆயிரம் விமர்சனம் கூறலாம். அதற்காக அந்த உளி வருத்தப் படுவதோ, சந்தோஷப்படுவதோ இல்லையே. அதுபோல பாலாவின் கையில் நான் ஒரு கருவி அவ்வளவுதான் என்று ஒரு தெளிவு ஏற்பட்டது. அதே சமயம் மற்றொரு உண்மை புலப்பட்டது.

"பாலா பாடலைக் கேட்கும் போது ரஜினி ஞாபகம் வருகின்ற அந்த அம்மையாரின் பக்குவம் எங்கே? ரஜினி பாடல் ஒலிக்கும் போது பாலா ஞாபகம் வரும் அந்தச் சிறுவனின் மனப் பக்குவம் எங்கே?"

அந்தச் சிறுவர்களுக்கு உள்ள மனப்பக்குவம் கூட நமக்கு வரவில்லையென்றால் பிறகு பெரியவர்கள் என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்லாமற் போய்விடும்.

14

முழு நிலவில் பிறந்திட்ட முழு நிலவு!

பெண்ணவள் பேறுகளை அள்ளித் தரும் பெரியவள், அழகுக்
கண்ணவள், கலைகளை சொல்லித்தரும் கலைமகள், இசைப்
பண்ணவள் இசையில் விருப்பம் கொண்டவள் நிலவு போன்ற
தண்ணவள் தன்னிகரில்லா தன்மை கொண்ட தாயவள்!

–பாலா அந்தாதி

சவாலாக ஒரு காரியத்தைச் செய்வதில் பெரியவர்களைவிடக் குழந்தைகள் படு சமர்த்தர்கள். ஏதாவது ஒரு காரியத்தை முடியாது என்று ஒரு குழந்தையிடம் சொல்லிப் பாருங்கள். அந்தக் குழந்தை அதை நிச்சயம் முடித்துக் காட்டும். பெரியவர்கள்கூட பாதியில் பின் வாங்கி விடுவார்கள். இல்லை தயக்கம் காட்டுவார்கள். சவால் என்று வரும்போது ஒரு சிலரே அதை சாதித்துக் காட்டுவார்கள். ஆனால் குழந்தைகள் அப்படியில்லை. அதிலும் தெய்வக் குழந்தை பாலா, எல்லாவற்றையும் ஒரு சவாலாகவேச் செய்து முடிப்பாள்.

ஒரு நாள் சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த திரு. சங்கர் என்பவர் தன் துணைவியாரோடு நெமிலி பாலா பீடம் வந்தார். கற்பூரத் தீபாராதனை முடிந்த பிறகு, என் தந்தையாரிடம் தங்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து விட்டதாகவும் மீண்டும் குழந்தைப் பேறு உண்டாக சென்னையைச் சேர்ந்த அன்பர் ஒருவர் நெமிலி பாலா

பீடம் சென்று வரச் சொன்னதாகவும் கூறியிருக்கிறார்கள். என் தந்தை என்னைக் கூப்பிட்டு அவர்கள் விஷயத்தைக் கூறி கரு உருவாக்கும் "பாலா"வின் பிரத்யேக புகைப்படத்தை அவர்களுக்கு ஒன்று தரச் சொன்னார்.

இரண்டு குழந்தை பிறந்து இறந்துபோன என் சகோதரிக்கு எடுத்துக் கொடுத்த புகைப்படம் அது. பிறகு மூன்றாவது குழந்தை நல்லபடியாகப் பிறந்தது. அந்த புகைப் படத்தைக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தேன்.

தம்பதிகள் சென்னை திரும்பினர். வருடங்கள் சென்றன. அழகிய பெண் குழந்தையோடு அந்தத் தம்பதிகள் பாலாபீடம் வந்தனர். குழந்தைக்கு பாலா என்றே பெயர் வைத்திருந்தனர். அவர்களுக்குப் பரம சந்தோஷம். எனக்கும் சந்தோஷம். பிறகு இந்த விவரத்தை இதே புத்தகத்தில் வேறொரு அத்தியாயத்தில் மேலோட்ட மாக நான்கு வரிகளில் எழுதி முடித்துவிட்டேன்.

மொத்த புத்தகத்தையும் ஒன்பது நாட்களில் எழுதி முடித்த என்னால் அதை உடனே பதிப்பகத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை. அதே சமயம் புத்தகம் முழுமையடையாதது போல ஒரு சந்தேகம் எனக்கு. ஓரே குழப்பமாக இருந்தது. "பரவசமூட்டும் பாலா பீடம்" எனும் இப்புத்தகம் 99% முடிந்த நிலையில் அப்படியே நின்று போனது. என்ன காரணம் என்றும் புரியவில்லை. ஓரிரு மாதங்கள் சென்றது. பாலாவே ஒவ்வொரு முடிச்சாக அவிழ்த்தாள்.

சங்கர் தம்பதிகளுக்கு குழந்தை பிறந்ததை நான் சர்வ சாதாரணமாக எழுதிவிட்டேன். அதன் பின்னணியில் பாலாவின் அதி அற்புத லீலை ஒன்று நிகழ்ந்தது எனக்குத் தெரியாமற் போனது. பாலா சவாலாக ஏற்று சாதித்துக் காட்டிய அந்த அசாதாரணமான காரியத்தை நான் சாதாரணமாக எழுதினால் நன்றாகவா இருக்கும். அதனால் அதை அவளே நிறுத்தி வைத்து, கால நேரம் கூடி

வந்தபோது அதை அவளே எனக்கு உணர்த்திவைத்து, புத்தகத்தை அவளே அழகுற முடித்து வைத்தாள்.

பாலாவுக்குப் பௌர்ணமி பூஜைகள் ஒரு சமயம் செய்து வந்தோம். பிறகு அது பாதியில் நின்று போனது. புத்தாண்டு மற்றும் நவராத்திரி பூஜைகளோடு வெள்ளிக் கிழமை பூஜைகள் மட்டும் நடைபெற்று வந்தன. 97ஆம் வருடம் சித்திரா பௌர்ணமியில் தொடங்கி ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி பூஜை செய்யலாம் என்று முடிவானது. சித்திரா பௌர்ணமிக்கு 10 நாட்கள் இருக்கும் பொழுது சென்னையைச் சேர்ந்த சங்கர் தம்பதிகள் குழந்தையோடு மீண்டும் பாலா பீடம் வந்தனர். உடன் சங்கரின் தாய் தந்தையும் வந்திருந்தனர். அப்போது சங்கரின் தந்தையார் திரு. K.G. அருணாச்சலம் அவர்கள் கூறிய விஷயம் கேட்டு நான் உறைந்து போனேன். நெமிலி வருவதற்கு முன் சங்கர் தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்துபோன விஷயத்தை அவர் சொல்லச் சொல்ல அதிர்ச்சியில் நான் ஸ்தம்பித்துப் போனேன்.

"முதலில் ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்திருக் கிறது. மூன்று வருடம், மூன்று மாதம் வரை உயிருடன் இருந்து ஒரு பௌர்ணமி நாளில் இறந்து போயிருக்கிறது. இரண்டாவதும் ஓர் ஆண் குழந்தையே பிறக்க, அந்தக் குழந்தை இரண்டு வருடம், இரண்டு மாதம் வரை உயிருடன் இருந்து ஒரு பௌர்ணமி நாளில் இறந்து போயிருக்கிறது. மூன்றாவதாக ஓர் ஆண் குழந்தையே பிறக்க, அந்தக் குழந்தை ஒரு வருடம், ஒரு மாதம் வரை உயிருடன் இருந்து வழக்கம் போல அதே பௌர்ணமி நாளில் இறந்து போயிருக்கிறது.

மூன்றும் ஆண் குழந்தைகள். மூன்றுமே சொல்லி வைத்த மாதிரி பௌர்ணமியன்று இறந்து போனது. என்ன ஒரு கொடுமையான சம்பவம். படிக்கும் நமக்கே இவ்வளவு

கஷ்டமாக இருந்தால் பத்து மாதம் சுமந்து, பத்தியம் இருந்து பெற்றத் தாய்க்கு எவ்வளவு கஷ்டம் இருந்திருக்கும். அந்தக் குடும்பத்தினரின் மனம் என்ன பாடுபட்டிருக்கும். மூன்று குழந்தைகளும் இறந்து போனதற்கு என்ன காரணம் என்று மருத்துவர் குழு ஒன்று முடியை பிய்த்துக் கொள்ளும் அளவுக்கு மிகவும் தீவிரமாக ஆலோசனை நடத்தியது.

"இறந்து போன மூன்றுமே ஆண் குழந்தைகள் என்பதால் அடுத்தக் குழந்தை ஒரு வேளை பெண்ணாகப் பிறந்தால் இதில் ஏதாவது மாற்றங்கள் வர வாய்ப்பிருக்கிறது. கரு உருவானவுடன் டிஷ்யூ டெஸ்ட் ஒன்று செய்து ஏதாவது பிரச்னை என்றால் ஒரு சில லட்சங்கள் செலவு செய்து அதை ஆரம்பக் கட்டத்திலேயே சரி செய்ய முயற்சிக்கிறோம்" என்று கூறியுள்ளனர்.

மருத்துவர்கள் சொன்ன ரிசல்டுக்குப் பிறகுதான் அவர்கள் பாலாபீடம் வந்தனர். மருத்துவர்கள் நடவடிக்கை எடுக்கு முன்னரே பாலாவின் நடவடிக்கை ஆரம்பமானது. கருவாக அவளே உருவெடுத்தாள். ஸ்கேன் செய்து பார்த்ததில் "பெண் குழந்தை" என்று தெரிந்தவுடன் எல்லோருக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

என்ன விந்தை! பெண் குழந்தை என்று தெரிந்தவுடன் அழிக்க முற்படும் இந்தக் காலத்தில் "பெண் குழந்தை" என்று தெரிந்த பிறகு ஆனந்தப்படும் நிலை.

அனைத்திற்கும் காரணம் பாலாவாயிற்றே. கருவைப் பரிசோதனை செய்து பார்த்தவுடன் எந்தப் பிரச்னையும் இல்லை என்று தெரிந்தது. பெற்றவர்களுக்கும், மற்றவர் களுக்கும் மனது நிம்மதியடைந்தது. பிறகு மாதங்கள் செல்லச் செல்ல அழகிய பெண் குழந்தை (பாலாவின் ஜெராக்ஸ் காப்பி என்றே வைத்துக் கொள்ளலாம்) பிறந்தது. மருத்துவர்கள் ஒரு ஆறு மாதம் வரை குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவும் என்று கூறியிருக் கிறார்கள்.

காரணம் இதற்கு முன் இறந்த மூன்று குழந்தைகளுமே ஆறாவது மாதம் தொடங்கும்போது உடம்பில் இரத்தம் கெட்டுப் படிப்படியாக உடல் நிலை குன்றி பிறகு இறந்து போனது. விஞ்ஞானத்தாலேயே கணிக்க முடியாத அளவுக்கு மருத்துவர்களுக்கே இது ஒரு பெருத்த சவாலாக இருந்தது.

இதைக் கருத்தில் கொண்டுதான் மருத்துவர்கள் அவ்வாறு கூறியிருந்தனர். மருத்துவர்கள் சொன்ன மாதிரி ஆறு மாதம் வரை குழந்தையை வெளியே எங்கும் எடுத்துச் செல்லாமல் மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டனர். பிறகு பிரச்னை எதுவுமில்லை என்று தெரிந்தவுடன், அவர்கள் குழந்தையோடு முதலில் வீட்டை விட்டுப் புறப்பட்ட இடம் “பாலா பீடம்” என்று நான் எழுதித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டும் என்றில்லை. ஆனால் அவர்கள் வந்த போது நான் இல்லை. பிறகு இந்தப் புத்தகத்தில் எழுதும்போது இதை சாதாரண விஷயம் போல் நான்கு வரிகளில் எழுதிவிட்டேன்.

மூன்று குழந்தைகள் பிறந்து ஒவ்வொன்றாக அதுவும் பௌர்ணமி நாளில் சொல்லி வைத்த மாதிரி இறந்த பின் நான்காவது குழந்தையாகப் பாலா பிறந்து, பெற்றவர் மனத்திலும் மற்றவர் மனத்திலும் பாலை வார்த்தது ஓர் அற்புதந்தான் என்றாலும், அதிலும் ஓர் அதி அற்புதம் என்ன தெரியுமா?

பாலா குழந்தையாக அவதரித்தது ஒரு பௌர்ணமி நாளில் தான். இதைக் கேள்விப்பட்டதும் நரன் பிரமித்துப் போனேன். ஒவ்வொரு குழந்தையும் பௌர்ணமியில் இறக்க, பாலாவோ அதை சவாலாக ஏற்று ஒரு பௌர்ணமி நாளில் வந்து பிறந்தாள் என்றால், என்ன ஓர் அற்புதமான லீலை அது!

முழு நிலவில் பிறந்திட்ட அந்த முழு நிலவான பாலாவின் அளவு விரல் அளவுதான் என்றாலும் உண்மையில் அது விந்திய மலையின் அளவு.

15

கட்டிடம் கட்ட கனவிலே உத்தரவு!

மாயும் சமயம் உனைக்காண மனம் அலை பாயும் – அன்று
நீயும் வர வேண்டும் – எனைக் காண வந்தால் எந்த
நோயும் வாராது நீங்கும், எமனையே வெற்றி கொள்ளும்
தாயும் நீயே இந்தக் குவலயம் காக்க வந்த சேயே!

–பாலா அந்தாதி

பாலா ஆற்றினிலிருந்து வந்து அய்யரவர்கள் வீட்டை அடைந்து நெமிலியில் ஆட்சிப் புரிந்தது அன்று. அதன் பிறகு மூன்றாம் தலைமுறையில் சிறிது காலம் காவேரிப் பாக்கத்தில் இருந்துவிட்டு பிறகு நான்காம் தலைமுறை தொடக்கத்தில் மீண்டும் நெமிலி திரும்பி தனக்கென ஓர் இடத்தை தேர்வு செய்து அந்த இடத்தில் பாலாபீடத்தை அமைத்துக்கொண்டு பார் புகழ ஆட்சி புரிவது இன்று.

ஓடு வேய்ந்த கூரை வீட்டின் கூடத்தில், நடு நாயகமாக இருந்துகொண்டு நவராத்திரி பூஜைகளை ஏற்றுக் கொண்ட அன்னை பாலா தனக்குக் கோபுரம் வேண்டாம், வருபவர்களை கோபுரம் ஆக்குவேன் என்று அருள்வாக்குச் சொன்னவள்! பாலா மணி மண்டபத்திற்கு, ஒரு கச்சேரி ஏற்பாடு செய்து நிதி வசூல் செய்யலாம் என நினைத்தபோது, எனக்கென யாரிடமும் பிச்சை வாங்க வேண்டாம் எனக் கோபமாகக் கூறியவள்! இன்று வரை தனக்கு என்ன வேண்டும் என்பதைக் கனவு வாயிலாக என்

தாயாரிடம் கேட்பவள்! பக்தர்களின் பல நாள் வேண்டுதல் களுக்கு இப்போதுதான் பச்சைக் கொடி காட்டினாள்.

அதிலும் ஏகப்பட்ட கண்டிஷன்கள். பாலா இருக்கும் ஓட்டு வீட்டை தளமாக மாற்ற, அன்னதான ஹால் தயார் செய்ய பல நாள் யோசனை செய்யப்பட்டது. அவள் இருப்பிடத்தை மாற்ற அவளது உத்தரவு அவசியமாயிற்றே. பாலா நேரில் பேசுவதென்றால் நாம் இந்த கடடிட யோசனை பற்றிக் கேட்டு விடலாம். அவள் பேசுவது கனவில். பாலா கனவிலே வந்து இதைச் செய், அதைச் செய் என்று உத்தரவு போடுவாள். சில சமயம் இதைச் செய்யாதே அதைச் செய்யாதே என உத்தரவு போடுவாள். பாலாவின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

இதை இப்படிச் செய்யலாமே என்ற யோசனை நமக்குள் எழும். அன்று இரவே பாலா கனவில் வந்து அது வேண்டாம் என சொல்லிவிட்டுப் போய்விடுவாள். இது போல என் தந்தைக்கு ஒன்றல்ல ரெண்டல்ல பல அனுபவங்கள். இந்த நிலையில் "கட்டிட வேலை துவக்கலாம் என பாலா உத்தரவு வந்தது. கையில் பணமில்லையே என்ற கவலை வேண்டாம் நான் கட்டி முடித்துக் கொள்வேன்!" பல நாள் காத்திருந்து பெறப்பட்ட இந்த உத்தரவால் எங்கள் அனைவருக்கும் ஏக மகிழ்ச்சி. எல்லோரும் கலந்து பேசினார்கள்! கட்டிட வேலை துவங்க நல்ல நாள் குறித்துக் கொடுக்குமாறு பாலா நவராத்திரி வைபவங்களில் கலந்து கொள்ளும் செஞ்சி அகரம் குப்புசாமி சாஸ்திரிகளிடம் கேட்கப்பட்டது.

ஜனவரி புத்தாண்டு பூஜை, பாலா ஹோமம் ஆகியவை பாலா பீடத்தில் சிறப்பாக நடக்கும். அதிக கூட்டம் இருக்கும். அதனால் 97ஆம் வருடம் ஜனவரி முதல் தேதி பூஜை முடிந்தவுடன் நாள் குறித்துத் தரச் சொன்னோம். அவரோ பொங்கல் எல்லாம் கழித்து

ஜனவரி 19 என நாள் குறித்துக் கொடுத்தார். 96ஆம் வருடம் அக்டோபர் மாதம் சாஸ்திரிகள் தேதி குறித்துக் கொடுத்துவிட்டுச் சென்றார். நவம்பர் மாத இறுதியில் என் தாயார் கனவில் வந்த பாலா “அடுத்த வியாழக்கிழமை கட்டிட வேலைக்காக அஸ்திவாரம் போடச் சொல்” என இரண்டு மூன்று தடவை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டுச் செல்ல எல்லாருக்கும் குழப்பம்.

காரணம் கனவு வந்தது திங்கட்கிழமை. இருப்பதோ செவ்வாய், புதன் இரண்டு நாட்கள்தான். வியாழக்கிழமை கட்டிட வேலை துவக்கச் சொல்லி உத்தரவு. வெள்ளிக் கிழமை கட்டிடம் கட்டும் மேஸ்திரி சபரி மலைக்குச் செல்கிறார். எல்லா டென்ஷனும் ஒன்றானது. வியாழன்று ஒரு கல்லை வைத்து பூஜை போட்டு, ஓர் இடத்தில் சிறிது மண்ணைத் தோண்டி எடுத்து கட்டிட வேலைக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. மறுநாள் மேஸ்திரி மலைக்குச் சென்றார். அவர் ஊர் திரும்பிய கொஞ்ச நாளில் அவரது தாயார் இறந்துவிட்டார்.

பாலாவின் கணிப்பை எண்ணி அனைவரும் வியந்தனர். கொள்ளி வைத்த கையோடு அவர் கடவுள் வேலையைத் துவக்க சங்கடப்படுவார். காரியம் முடிந்த கையோடு கடவுள் காரியத்தைத் துவக்க வேண்டாம் என நினைத்துத்தான் பாலா அவசரமாக வேறு ஒரு தேதியை தேர்வு செய்து கொடுத்தாள் போலும். அது மட்டுமல்ல 97ஆம் வருடம் ஜனவரி மாதம் 19ஆம் தேதி கட்டிட மேஸ்திரி ஊரிலேயே இல்லை. நாங்கள் மட்டும் பாலாவை பாலா பீடத்திலிருந்து எடுத்து வந்து முன் பக்க அறையில் வைத்தோம்.

மறுநாள் மேஸ்திரி வர வேலைகள் தொடர்ந்தன. முதலில் எட்டு தூண்கள் எழுப்பப்பட்டு அதன் மீது தளம் அமைத்து, அதன் மேல் மற்றொரு தளம் போடப்பட்டு புதிய கட்டடம் உருவானது. ஏப்ரல் மாதம் தமிழ்ப்

புத்தாண்டில் "புதிய பாலா பீடத்திறப்பு விழா" வைத்துக் கொள்ளலாம் என முடிவானது. ஆனால் குறிப்பிட்ட நாளில் சில கட்டிட வேலைகள் பாக்கியிருந்ததால் தேதி மாற்றம் செய்யப்பட்டு மே மாதம் 18ஆம் தேதி ஞாயிறன்று வைத்துக் கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கட்டடத் திருப்பணியில் முக்கிய அங்கம் வகிக்கும் சிலருக்கும் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் 18ஆம் தேதி நெமிலிக்கு வர இயலாத அளவுக்கு வேலைப் பளு இருந்ததால் "நாங்கள் இல்லையென்றாலும் பரவாயில்லை, விழாவைச் சிறப்புற நடத்துங்கள்" என அவர்களிடமிருந்து தகவல் வந்தது. தந்தையாருக்கோ "அவர்கள் கட்டிடப் பணியில் முழு அங்கம் வகித்தவர்கள், அவர்கள் இல்லாமல் எப்படி இதை நடத்துவது. விழாவை மே மாதம் 18ஆம் தேதியிலிருந்து 25ஆம் தேதி வைத்துக் கொள்ளலாமா" என்ற எண்ணம் ஏற்பட்டது.

நான் காலண்டரைப் பார்த்து, "ஜூன் 1ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை முகூர்த்த நாள் எனப் போட்டிருக்கிறது. அன்றே திறப்பு விழாவை வைத்துக் கொள்ளலாமே" என யோசனை தெரிவிக்க, அன்றைய தபாலில் வந்திருந்த சாஸ்திரிகளின் கடிதம் அதை ஊர்ஜிதப்படுத்தியது.

அவரோ "மே 18ஆம் தேதி நான் ஊரில் இல்லை. வெளியூர் வேலைக்குச் செல்கிறேன். என்னால் வர இயலாமைக்கு வருந்துகிறேன். அந்தத் தேதிதான் முடிவான தேதி என்றால் அன்று விழாவை நடத்துங்கள். அந்தத் தேதி முடிவாகாத பட்சத்தில் வேறு தேதியில் விழாவை நடத்துவதாக இருந்தால் ஜூன் 1ஆம் தேதி நன்றாக இருக்கிறது. அன்று எனக்கு வேறு வேலைகள் ஏதும் இல்லை. நான் வந்திருந்து சிறப்பாக செய்து முடிக்கிறேன்" என்று எழுதியிருந்தார்.

அனைவரும் ஒரு மனதாக ஜூன் 1ஆம் தேதியே சரியான தேதி என முடிவு செய்து, மளமளவெனத் திறப்பு விழாவுக்கான ஆயத்தப் பணிகளில் இறங்கினோம்.

எனக்கு மட்டும் ஒரே ஒரு விஷயம் புலப்படவில்லை. இது மாதிரியான விழாக்கள் பாலா பீடத்தில் பல நடந்துள்ளன. ஒரு தேதி குறிப்போம். அந்த நாளில் விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்துவிடும். "இந்த முறை மட்டும் ஏன் இவ்வளவு குழப்பங்களும் தடைகளும் வந்தன" என்று எனக்குப் புரியவில்லை. முதலில் ஏப்ரல் 14ஆம் தேதி முடிவானது. பிறகு அது மே 18ஆம் தேதி என மாற்றப்பட்டது. அதுவும் தள்ளிப்போய் மே 25 என்று முடிவாக கடைசியில் ஜூன் 1ஆம் தேதி வந்து நின்றது.

அழைப்பிதழ்கள் தயாராயின. "புதிய பாலா பீட கட்டிடத் திறப்பு விழா மற்றும் அன்னதான மண்டபத் திறப்பு விழா" என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பாலா பீடத் திறப்பு விழாவிற்கு திரு. வளசரவாக்கம் சுவாமிஜி என்றும், அன்னதான மண்டபத் திறப்பு விழாவிற்கு சென்னையைச் சேர்ந்த திரு. பாலா சேகர் என்றும் ஏற்கனவே முடிவாகியிருந்தது. விழா நெருங்கு வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக எனது தாயாருக்கு ஒரு கனவு வந்தது. கனவிலே யாரோ ஒரு நபர் உயிருக்குப் பயந்து ஓடி வருகிறார். அவரை ஓர் எருமை மாடு துரத்திக் கொண்டே வருகிறது. முடிவில் ஓடி வந்த நபர் பாலா பீடத்தின் முன் வந்து நிற்க, வெளியே நின்று கொண்டிருந்த எனது தாயார் அந்த நபரை உள்ளே போகச் சொல்லிவிட்டு, வெளியே நின்றிருந்த மற்றொரு நபரிடம் அந்த மாட்டைப் பிடித்து நிறுத்துங்கள் எனக் கூச்சலிடுகிறார்.

ஓடி வந்த நபர் பதட்டத்துடன் உள்ளே சென்றுவிட துரத்தி வந்த எருமையை வாசலில் இருந்த நபர் இறுகப்

பிடித்தபடி "இனி அவர் உசிருக்கு எந்த ஆபத்தும் இல்லை" என்று சொன்னபடி அந்த எருமை மாட்டைத் தரதரவென்று இழுத்துச் செல்கிறார். காலை எழுந்தவுடன் எனது தந்தையாரிடம் கனவைப் பற்றிக் கூறிய தாயார் "நமக்கு நெருக்கமானவங்க யாரோ ஒருத்தரோட உசிர பாலா காப்பாத்திட்டா" என்று கூறினார். பிறகு விழா நாள் வந்தது.

"சின்னச் சின்ன அடியெடுத்து பாலா நீ வாராய்!
ஜல் ஜல் என மணியொலிக்க பாலா நீ வாராய்!"

எனும் நண்பர் T.P. பாலசாயி அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்பப் பாலாவை முன்பக்க அறையிலிருந்து புதிய கட்டிடத்தில் அமைந்த பாலா பீடத்திற்கு அழைத்து வந்தோம். சாஸ்திரிகள் ஹோமங்களை சிறப்புறச் செய்ய திரு. வளசரவாக்கம் சுவாமிஜி அவர்கள் முன்னின்று திறப்பு விழா, சிறப்பு விழாவாக நடத்திக் கொடுத்தார்.

பத்து மணியளவில் "புதிய அன்னதான மண்டபத்தை" திரு பாலா. சேகர் அவர்கள் திறந்து வைத்தார். திறப்பு விழா நடந்த கையோடு, அந்த புதிய அன்னதான மண்டபத்திலேயே ஒரு சிறிய பாராட்டு விழா நடத்தினோம். அனைவரும் குழுமியிருக்க எனது தந்தையார் கட்டிடத் திருப்பணியில் முக்கியப் பங்கு வகித்த திரு பாலா. சேகரைப் பாராட்டிப் பேசி அனைவருக்கும் நன்றி கூறி, திரு. பாலா. சேகரைப் பேச அழைத்தார். திரு. பாலா. சேகர் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லச் சொல்ல வந்திருந்த அனைவரும் மூச்சு விடுவதைக் கூட மறந்து ஸ்தம்பித்து நின்றனர். அவர் பேசியதை அப்படியே இதோ உங்களுக்காக எழுதுகிறேன்.

"நான் இந்த திறப்பு விழாவுக்கு வருவேனோ மாட்டேனோ அப்படின்னு நேத்து ராத்திரி வரைக்கும் எனக்குச் சந்தேகம் இருந்தது. நான் சொன்னா நீங்க நம்பமாட்டீங்க. கிளி ஜோசியத்துலேர்ந்து பெரிய பெரிய

அரசியல்வாதிகளுக்கு ஜோசியம் கணிக்கற பெரிய பெரிய ஜோசியர்கள் வரைக்கும், கைரேகையிலிருந்து நாடி ஜோசியம் வரைக்கும் எல்லாத்துலயும் எனக்கு ஆயுட்காலம் முடியற தேதி 1997ஆம் வருஷம் மே மாசம் 31ஆம் தேதின்னு சொல்லிட்டாங்க. நானே இதை முதல்ல நம்பல. போகப் போக என் கையைப் பாத்தவங்க, ஜாதகத்தைப் பாத்தவங்க எல்லாருமே ஒட்டுமொத்தமா 97ஆம் வருஷம் மே 31ஆம் தேதி என் வாழ்நாளோட கடைசி தேதின்னு சொன்னப்புறம் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல. அப்புறம் ஒரு வழியா செய்ய வேண்டிய நல்ல காரியங்களை எல்லாம் செஞ்சு முடிச்சேன். உயில்லேர்ந்து எல்லாத்தையும் ரெடி பண்ணி வச்சிட்டேன்.

என்னோட பேங்க் பேலன்ஸ், எனக்குச் சேர வேண்டிய பணம் அப்படி இப்படி எல்லாத்தையும் ஒரு வழியா செட்டில் பண்ணி முடிச்சேன். இந்த விஷயத்தை எல்லாம் யார்கிட்டயும் சொல்லாம, மனசுக்குள்ளேயே வச்சிப் பூட்டி வச்சிருந்தேன். எழில்மணி சார் ஏப்ரல் மாசத்துல மண்டபத் திறப்பு விழான்னு என்கிட்ட சொல்லியிருந்தார். சரி போறதுக்கு முன்னாடி ஒரு நல்ல காரியத்தைப் பாத்துட்டு, அதுல பங்கெடுத்துகிட்டு போகலாம்னு சந்தோஷப்பட்டேன். அவர் அடுத்த லெட்டர்ல மே மாசம் 18ஆம் தேதி திறப்பு விழான்னு எழுதியிருந்தார்.

அடுத்த வாரம் பாத்தா ஜூன் 1ஆம் தேதி ‘திறப்பு விழா’ன்னு போட்டு, அதுல என் பேரையும் போட்டு பத்திரிகை வந்தது. எனக்கு பக்குன்னு ஆயிப்போச்சி. என்னடா இது மே 31ஆம் தேதியோட என் கதை முடியப் போகுது. மறு நாள் திறப்பு விழான்னா எப்படி? எனக்கு பயமாயிடுச்சி. தொலைக்காட்சில வேலை செய்யற என்னோட நண்பர் திரு. லோக சிகாமணிச் சாருக்கு

ஃபோன் செஞ்சு எல்லா விஷயத்தையும் சொல்லிட்டேன். அவரோ "என்ன இது பைத்தியகாரத்தனம்னு கண்டபடி திட்டிட்டு, 31ஆம் தேதி சாகப் போறேன்னா எதுக்கு ஜூன் 1ஆம் தேதி அன்னதான மண்டபத் திறப்பு விழாவுல பாலா. சேகர்ன்னு உன் பேரை "பாலா" பிரிண்ட் பண்ணியிருக்கா. உனக்குச் சாவு இல்லங்கறத அவளேத் தீர்மானம் பண்ணிட்டா. எதுக்கு வீணா பயப்படறே! நாம எல்லாரும் திறப்பு விழாவுக்கு நெமிலிக்குப் போறோம் அவ்வளவு தான்னு" சொல்லிப் போனை வெச்சிட்டார்.

இதோ இப்ப உங்க முன்னாடி நான் நின்னு பேசிக் கிட்டிருக்கேன்னா, அதுக்கு பாலா எனக்கு கொடுத்த உயிர்ப்பிச்சைதான் காரணம். நான் நேத்தே சாக வேண்டியவன்."

திரு. பாலா. சேகர் சொல்லச் சொல்ல எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. அன்று என் தாயார் சொன்ன கனவைப் பற்றி நினைத்துப் பார்த்தேன். இந்தக் கலியுகத்தில் இதுவெல்லாம் சாத்தியமா? மனம் படபடத்தது.

உடனே எனது தந்தை திரு. எழில்மணி அவர்கள், என் தாயாருக்கு வந்த அந்தக் கனவைப் பற்றிச் சொல்ல வந்திருந்த அனைவரது கண்களிலும் நீர் கசிந்தது. மீண்டும் பாலா ஒரு சவாலை நிகழ்த்திக் காட்டியதாகத்தான் இதை உணர்கிறேன்.

"உனக்கு யாருடா தேதி குறிக்கிறது. என்னோட பிள்ளைக்குத் தேதி குறிக்க நீங்கள்ளாம் யாருடா? நான் குறிச்சுத் தர்றேன். ஒண்ணாம் தேதி அவன் அன்னதான மண்டபத்தைத் திறப்பான்" என செவிட்டில் அறைந்தது போல பாலா நிகழ்த்திய அந்த அற்புதத்தை வாழ்நாள் உள்ளவரை யாராலும் மறக்கவே முடியாது.

16

பாவங்கள் நீக்கும் பாலாவின் தீர்த்தம்!

சேயும் தாயும் ஆன தெய்வம் உனை எந்த
வாயும் புகன்றால் புன்மைகள் நீங்கும் புதுமைகள் ஓங்கும்
தீயும் உன்னிடம் தித்திப்பாய் மாறும் ஒரு சிறு
ஈயும் உன் பார்வை பட்டால் ஓங்கி நிற்கும் இமயமாகும்!

–பாலா அந்தாதி

பாவம் அப்படி என்றால் என்ன? இதுதான் பாவம் என்று வரையறுத்துக் கூறமுடியுமா? இல்லை இதுதான் பாவம் என்று பட்டியல் போட்டுத்தான் மாளுமா? எது எப்படியோ பாவம் செய்யாத மனிதன் இந்த உலகத்தில் உண்டா? கிடையாது. கிடையவே கிடையாது. புண்ணியம் செய்தவர்கள் பல கோடி பேர் இருக்கலாம். ஆனால் பாவம் செய்யாதவர்கள் பத்து பேர்கூட இருக்க முடியாது.

பாவம் செய்யாதவர்கள் என்று சில ஞானிகளை நாம் முன்னுதாரணம் காட்டலாம். ஆனால் அவர்கள் அதை ஒத்துக் கொள்ளமாட்டார்கள். அது அவர்கள் மனசாட்சிக்குத் தெரியும். உங்கள் ஊரில் ஒரு பெரிய மனிதர் இருக்கலாம். அவர் செய்யும் தான தர்மங்களை கண்டு ஊரே வியக்கலாம். அடடா இவர் மனிதர் அல்ல கடவுள் என்று நீங்களும் மனத்தில் நினைக்கலாம். ஆனால் அவரோ ஏதோ ஒரு பாவச் செயலைச் செய்துவிட்டு, மன

வேதனைக்குட்பட்டு வருந்தி திருந்தி அதிலிருந்து மீண்டு நல்ல வழியில் இறங்கியிருக்கலாம்.

அன்றைய அருணகிரிநாதரிலிருந்து இன்றைய அருப்புக்கோட்டை ராமநாதன் வரை ஏதோ ஒரு பாவச் செயலைச் செய்யாமல் இருந்திருக்க மாட்டார்கள். தனது பாவச் செயலை நினைத்து வருந்தி பிறகு திருந்தி வாழும் மனிதனுக்குப் பெயர்தான் ஞானி. பிறந்த நாள் முதல் மண்ணில் மறையும் நாள் வரை ஒருவன் எந்தவிதப் பாவமோ, குற்றமோ, தீச் செயலையோப் புரியாமல் இருக்கிறான் என்றால் அவன் பெயர்... மன்னிக்கவும் அதன் பெயர் மரம். ஆம் மரம்தான். தன் பாட்டுக்கு விதைத்தது முளைத்து தழைத்து கிளைத்து நிலைத்து பின் களைத்து பூமியில் விழும். மனிதன் அப்படி அல்லவே.

ஆகவேதான் பாவங்களைப் போக்க வேண்டி கடவுளை வணங்குகிறோம்.

நான்கு பேர் வெளியே சென்று மீண்டும் வீடு திரும்புகிறார்கள் என வைத்துக் கொள்வோம். அந்த நான்கு பேரும் காலைக் கழுவிக் கொண்டு உள்ளே வருகிறார்கள். அந்த நால்வரில் ஒருவர் கால்கள் மட்டும் மற்றவர் கால்களைவிடப் பளிச்சென இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? நானே சொல்கிறேன். வெளியே சென்ற நால்வரில், அந்த ஒருவர் மட்டும் மிதிக்கக் கூடாத ஒன்றை மிதித்துவிட்டார். அந்த அருவருப்பில் கால்களை வழியேற தேய்த்துக் கொண்டே வந்தவர், வீட்டில் தண்ணீர் கொண்டு மற்றவர்களைவிடச் சிரத்தையாக, கவனமாக தனது இரண்டு கால்களையும் இரண்டு மூன்று முறை நன்கு கழுவியதால் மற்றவர் கால்களைவிட இவரது கால்கள் பளிச்சென்று இருந்தது.

இதுவேதான் வாழ்க்கையும், ஒரு நிமிடம் மனம் நிலை தடுமாறி ஒரு சிறிய பாவச் செயலை செய்தாலும்

அதற்காகப் பலமுறை மனம் வருந்தி, திருந்தி இனி இதுபோல செய்யக்கூடாது என முடிவெடுப்பவனுக்கு பெயர்தான் ஞானி. ஆம். புறத்தூய்மைக்கு நீர் எவ்வாறு பயன்படுகிறதோ, அதுபோல அகத்தூய்மைக்கு அன்னை பாலாவின் அருட் தீர்த்தம் பயன்படுகிறது.

கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்ட கொள்ளை அழகு வாய்ந்த பிள்ளையாம் பாலாவின் மீது பட்டு வரும் பாலானது நம் பாவம் நீக்கும் தீர்த்தமாக மாறுவதில் வியப்பொன்றும் இல்லையே!?

* * *

குறிப்பு

இதுவரை பாலா பீடத்தைப் பற்றியும், அங்கு நடந்த சில சுவையானச் சம்பவங்கள் பற்றியும் கூறிவந்தேன். இனி இந்தப் புத்தகம் எவ்வாறு உருவானது, அதன் சோகமான பின்னணி என்ன? என்பதை வரும் அத்தியாயங்களில் கூற விருக்கிறேன். அவை சோக இழையால் பின்னப்பட்டவை. வாருங்கள் அதையும் பார்த்துவிடுவோம்.

17

கனவு பலித்தது கவலை பிறந்தது!

பூணுவர் கவசமாய்ப் பூங்கொடி உன் கவசத்தை பூவுலகில்
காணுவர் காணக் கிடைக்கா பேற னைத்தும் கண்டபின்
ஏணுவர் ஏதின்மை இன்றி உன்னை ஏத்துவர் பின்பு
நாணுவர் நாத்திகம் பேசியதை எண்ணி நா கூசுவர்!

– பாலா அந்தாதி

குழந்தை. பலரது வாழ்வில் கனவாகிப்போன ஒன்று. சிலரது வாழ்வில் கவலையாகிப் போவதுமுண்டு. தாய்மை எனும் தன்னிகரில்லா பதவியினை எண்ணிக் கவலையோடு காத்திருக்கும் பெண்கள் ஏராளம். திருமணம் ஆகி 13 வருடங்கள் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்த எனது மூத்தச் சகோதரி சுஜாதா என்பவருக்கு கர்ப்பம் உண்டானது. எல்லோருக்கும் மிகவும் சந்தோஷம்.

சுஜாதா வேறு யாருமல்ல. எனது தம்பி மோகனுக்கு கார்டியனாக இருந்து பாலாவுக்கு பூஜைகள் செய்துவரும் எனது பெரியப்பா திரு. வீரராகவன் அவர்களின் மூத்தக் குமாரத்தி. சுஜாதாவுக்குத் திருமணமே தாமதமாக நடந்தது. அதன்பிறகு இப்போதுதான் பாலாவின் அருளால் கரு உண்டானது. அவளது கணவர் சந்திரசேகருக்கும் மிகுந்த சந்தோஷம். ஊத்தங்கரை, தர்மபுரி போன்ற இடங்களில் வேலை நிமித்தமாகத் தனிக்குடித்தனம் சென்ற இந்த

தம்பதிகள் சென்னைக்கு வந்தவுடன் இந்த சந்தோஷச் செய்தியினை அறிவித்தனர்.

எனது மாமா சந்திரசேகருக்கு வடபழனியில் வேலை கிடைத்ததால் பூந்தமல்லியில் குடியேறினர். இந்த நிலையில் ஒரு வருத்தமான செய்தியை சுமந்துகொண்டு சந்திரசேகர் நெமிலி வந்தார். “குழந்தை எப்படியிருக்குன்னு ஸ்கேன் எடுத்துப் பார்த்தோம். ஸ்கேன் ரிசல்ட் திருப்தியில்லை. அபார்ஷன் பண்ணிடறது நல்லதுன்னு சொல்றாங்க. சுஜாதாகிட்ட இன்னும் இந்த விஷயம் பத்தி சொல்லலை. அவ தாங்கமாட்டா... என்ன பண்றதுன்னு தெரியலை” கண்களில் நீர் துளிக்க அவர் சொன்ன விஷயம் கேட்டு அனைவரும் பதறிப் போயினர்.

“அப்படி எல்லாம் ஒண்ணும் ஆயிடாது. இத்தனை வருஷம் கழிச்சு அவளா கொடுத்தக் குழந்தை அதுக்கு ஒண்ணும் ஆகாது. நீங்க கவலையேப் படாதீங்க” என்று அனைவரும் ஆறுதல் கூறினர். எனது தாயார் என்னிடம் வந்து “நீ முன்ன மாதிரி ஜபம் செஞ்சு அவளுக்காகப் பாலாகிட்ட பிரார்த்தனை பண்ணிக்க” என்று கூறினார். எனது இளைய சகோதரி இந்திராவுக்காக (மற்றொரு பெரியப்பா மகள்) நான் 48 நாள் ஜபம் இருந்து ஒரு பிரத்யேகமான பாலாவின் புகைப்படத்தைக் கொடுத்தேன்.

காரணம் அந்தச் சகோதரிக்கு பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளும் இறந்துவிட்டதால் அந்த ஃபோட்டோவைக் கொடுத்தேன். மூன்றாவதாகப் பிறந்த பெண் குழந்தை நிலைத்தது. மனம் மகிழ்ச்சியால் திளைத்தது. அதை மனதில் வைத்துத்தான் எனது தாயார் என்னிடம் அவ்வாறு கூறினார். நானும் சரி என்று கூறினேன்.

சந்திரசேகர் மாமா கனத்த இதயத்தோடு சென்னை சென்றார். நானும் ஒரு வாரம் எங்கும் செல்லாமல் ஜபம் செய்வதை ஆரம்பிக்கலாம் என முடிவு செய்தேன். அன்று

மாலை எனக்கு காலில் அடிபட்டது. பயங்கர வலி. நடக்கவே முடியவில்லை. கால் பந்துபோல் வீங்கிவிட்டது. இரவு முழுக்க மரண அவஸ்தை. மாத்திரை மருந்துகள் உட்கொண்டேன். மறுநாள் பரவாயில்லை. தடி ஒன்றை ஊன்றி நடக்க ஆரம்பித்தேன். பிறகு மாலையிலிருந்து தடியில்லாமல் விந்தி விந்தி நடக்க ஆரம்பித்தேன்.

நெமிலியை விட்டு எங்கும் செல்லக்கூடாது என்று இருந்தவன், காலில் அடிபட்டிருந்தும், அடுத்த நாளே திடீரென்று சென்னைக்கு கிளம்பிவிட்டேன். வீட்டிலிருந்த வர்கள் "இப்போது எதற்காக சென்னை செல்கிறாய்? கால் சரியாகட்டும்" எனத் தடுத்தும் கேளாமல் சென்னைக்குப் புறப்பட்டேன். நேராக கொளப்பாக்கம் வந்தேன். பூஜைகள் செய்யும் பெரியப்பாவான சுஜாதாவின் அப்பா வீரராகவன் அவர்கள் குடும்பத்தோடு வசிப்பது கொளப்பாக்கத்தில் தான்.

நெமிலிக்கும் கொளப்பாக்கத்திற்கும் ஒரு அதிசயமான ஒற்றுமை. ஆம் அங்கே 22, பாலாபீடம். இங்கே கொளப்பாக்கத்தில் 22, பாலா இல்லம். எனது பெரியப்பா, பெரியம்மா, மற்றும் அவரது மகன்களான ஹரி, புவனாவோடு நானும் ஒரு மகனாக சென்னை வந்தால் இவர்கள் வீட்டில்தான் தங்குவேன். இன்னும் சொல்லப் போனால் பாதி நாள் நெமிலியில் இருப்பேன். பாதி நாள் இங்கு இருப்பேன். வீட்டில் நுழைந்தவுடன் என்னை எதிர்கொண்டது சுஜாதாதான்.

மறுநாள் காலை சுஜாதாவை அழைத்துக்கொண்டு கடைசி செக்கப்புக்காக அடையாறில் உள்ள மருத்துவ மனைக்கு செல்லப் போவதாக மாமா கூறினார். "ஓஹோ இவர்களோடு செல்லத்தான் பாலா என்னை நெமிலி யிலிருந்து அழைத்து வந்தாளா?" என மனதில் ஒரு பொறி தட்டியது.

மறுநாள் அதிகாலை எழுந்து பாலா இல்லத்திலே என் ஜபத்தை ஆரம்பித்தேன். பாலாவின் குழந்தைப் பேறு அளிக்கும் பிரத்யேகப் புகைப்படத்தை வைத்துக்கொண்டு கர்ப்பரக்ஷாம்பிகை ஸ்தோத்திரம் படித்தேன். “குழந்தை வேண்டும் என்ற அவர்கள் கனவு பலித்தது. உடன் கவலையும் பிறந்தது. நீதானம்மா எந்தக் குறையுமின்றி அவர்களைக் காத்து, கருவில் இருந்த குறைகளைப் போக்கி, குழப்பத்தை நீக்கி காத்தருள வேண்டும்” என பாலாவை மனமுருக வேண்டினேன்.

18

கவலை தந்த கருவுடன் கண்ணீர் யாத்திரை!

இருந்திடு நாளெலாம் இடைவிடாது அவள் பெயரை
ஆகாரமாய்
அருந்திடு, அலையும் நெஞ்சுக்கு அமைதி தர பாலா
கவசமெனும்
மருந்திடு பின்பு மறந்திடு மற்றவற்றை உன்னையே
அவளுக்கு
விருந்திடு வியக்க வைக்கும் அற்புதம் காண விரைந்திடு!

– பாலா அந்தாதி

காலை உணவு முடித்துக்கொண்டு அக்கா, மாமா மற்றும் பெரியம்மாவோடு நானும் சேர்ந்து கொண்டு நால்வராகப் புறப்பட்டோம். மாமாவின் தம்பி மனைவி ராஜேஸ்வரி என்பவர் மருத்துவமனையில் டெலிஃபோன் ஆப்பரேட்டராக பணிபுரிகிறார். அவரது வீடு சைதாப்பேட்டையில். நாங்கள் நால்வரும் சைதாப் பேட்டை சென்று அவரையும் அழைத்துக்கொண்டு அடையாறில் இருக்கும் மருத்துவமனைக்குச் சென்றோம். லேடி டாக்டர் அறைக்குள் அக்கா, பெரியம்மா, ராஜேஸ்வரி மூவரும் செல்ல நானும் மாமாவும் வராண்டாவில் உள்ள பெஞ்சில் உட்கார்ந்தோம்.

"ஏன் மாமா... இவங்க பழைய ஸ்கேன் ரிபோர்ட்டைப் பார்த்துட்டு ரிசல்ட் சொல்வாங்களா... இல்ல புதுசா ஸ்கேன் எடுக்கச் சொல்வாங்களா?" என மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தேன். எனக்கு ஒரு நப்பாசை. "புதுசா ஸ்கேன் செய்து பார்த்து குழந்தை நன்றாக இருக்கிறது நோ ப்ராப்ளம் அபார்ஷன் செய்ய வேண்டாம்" என்று சொன்னால். நினைக்கவே சந்தோஷமாக இருந்தது. ஆனால் அவரோ "இல்லை... ஏற்கனவே ரெண்டு தடவை ஸ்கேன் எடுத்தாச்சி இனி எடுக்க மாட்டாங்க" எனச் சொல்ல என் ஆசை நிராசையானது.

லேடி டாக்டர் வந்தார். எல்லாவற்றையும் பார்த்தார். சுஜாதா அக்காவிற்கு இன்னமும் விஷயம் தெரியாது. ஏதோ செக்கப்பிற்காக வந்திருக்கிறோம் என்றுதான் தெரியும். சுஜாதாவிடம் பக்குவமாக அந்த விஷயத்தை லேடி டாக்டர் எடுத்துச் சொன்னார். அவ்வளவுதான் தன்னையும் மறந்து அழ ஆரம்பித்தாள். வெளியே அழைத்து வந்துவிட்டோம். எனக்கு என்ன சொல்வ தென்றே தெரியவில்லை. எப்படித் தேற்றுவது என்றும் புரிய வில்லை.

"இதோபார்... 13 வருஷமா குழந்தை இல்லாத உன்னை எத்தனையோ பேர் உன் காது படவே மலடின்னு சொல்லியிருக்காங்க. உன் வயத்துலயும் கரு உருவாக்கி நீ மலடி இல்லைன்னு பாலா நிரூபிச்சுட்டா. இந்த கரு தங்கலைன்னா யார் செஞ்ச பாவமோ என்னமோ? விட்டுத்தள்ளு. இனிமே குழந்தையே பொறக்காதுன்னு டாக்டர் சொல்லலையே. கூடியச் சீக்கிரம் இன்னொரு குழந்தை பொறக்காமலா போயிடும். எல்லாம் நல்லதுக்குத்தான்." ஏதோ எனக்குத் தெரிந்த வரையில் அவளைச் சமாதானப்படுத்தினேன்.

லேடி டாக்டரிடம் பேசிவிட்டு வந்த மாமா "இன்னொரு வாட்டி எதுக்கும் ஸ்கேன் எடுத்துப் பாக்கச்

சொன்னாங்க அந்த லேடி டாக்டர்" என்று சொன்னவுடன் என் கண்களின் ஓரத்தில் கண்ணீர் திரண்டது. "பாலா ஏதோ செய்யப் போறா" என உள்மனது கூறியது.

"நாளைக்கு இங்க மறுபடியும் வரச்சொன்னாங்க. வந்தா ஒரு லெட்டர் தர்றாங்களாம். அத எடுத்துக்கிட்டு கோபாலபுரத்துல இருக்கிற மெடிஸ்கேன் சென்டர்ல ஸ்கேன் எடுத்துக்கச் சொன்னாங்க" அவர் சொல்லச் சொல்ல எனக்கு நம்பிக்கையோடு கண்ணில் நீரும் துளிர்த்து, ஓர் எதிர்பார்ப்பு உண்டானது.

அதற்குள் உள்ளேயிருந்து வந்த ராஜேஸ்வரி "அந்த ரிபோர்ட்ஸ் எல்லாம் கொடுங்க. இப்பவே லெட்டர் எழுதித் கொடுத்துடறாங்களாம். நாளைக்கு இங்க வர வேணாம். நேரா மெடிஸ்கேனுக்குப் போயிடலாம். எனக்கு இடம் தெரியும்" எனச் சொல்லி விட்டு உள்ளே சென்றார்.

கடவுள் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டு கை கழுவி விட மாட்டார். கை கொடுத்து உதவுவதற்கு யாரையாவது நியமிக்காமல் விடவும் மாட்டார். அப்படி கை கொடுத்து உதவத்தான் ராஜேஸ்வரி என்ற பெண்மணியைப் பாலா அனுப்பியிருப்பாளோ என எண்ணத் தோன்றியது. வீட்டில் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை. வீட்டு வேலைகள் ஏராளம். இதன் நடுவே தனது டெலிஃபோன் ஆப்பரேட்டர் வேலைக்கு மதியம் ஷிப்டுக்குச் செல்ல வேண்டும். இத்தனைக்கும் நடுவே அந்த மருத்துவமனையில் பம்பரம் என சுற்றிவருகிறார் என்றால் எனக்கு அந்த நிலையிலும் வியப்பு மேலிட்டது.

உள்ளே சென்றவர் பத்து நிமிடம் கழித்து வந்து "டாக்டரம்மா... இப்போவே மெடிஸ்கேனுக்குப் போய் ஸ்கேன் எடுத்துக்கச் சொன்னார். அவங்களுக்கு ஃபோன் பண்ணி நாம வரப் போறதையும் இன்ஃபார்ம் பண்ணிட்டாங்க. ஒரு லெட்டருக்கு ரெண்டு லெட்டரா

எழுதிக் கொடுத்திருக்காங்க." அவர் சொல்லச் சொல்ல என் கண்களிலிருந்து நீர் மெல்ல மெல்ல அதிகரித்தது. முதலில் சொன்னது என்ன? பிறகு படிப்படியாக நடந்தது என்ன? பாலாவை நினைத்து நினைத்து தேம்பினேன்!

அங்கு எடுக்கும் ஸ்கேன் ரிப்போர்ட் நார்மல் என்று வந்து விட வேண்டும். இன்று இரவே நான் நெமிலிக்கு ஓடோடி வந்து விடுகிறேன். எனது பிரார்த்தனையை அதிகப்படுத்திக் கொண்டே இருந்தேன். மருத்துவமனையை விட்டு 12.20க்கு அனைவரும் புறப்பட்டோம். வழியெல்லாம் காரணமின்றி கண்களில் நீர் தளும்பிக் கொண்டிருந்தது. ஒரு மணிக்கு மெடிஸ்கேன் சென்டர் வந்து விட்டோம்.

நவீன தொழில் நுட்ப வசதி கொண்ட அந்த ஆஸ்பத்திரியில் திரும்பிய பக்கமெல்லாம் தெய்வப் படங்கள். ஒவ்வொரு அறையிலும் சாமிப் படங்கள். ஆயிரம் கம்ப்யூட்டர் வசதி வந்தாலும் ஆண்டவன் மகிமை குறையப் போவதில்லை என மனத்தில் நினைத்துக் கொண்டேன். அங்கே வளைகாப்பு முடிந்த கையோடு வந்த மாதிரி ஏகப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள். அவர்கள் நடுவே எனது சகோதரி. மீண்டும் என் மனது பிரார்த்தனைக்குத் தாவியது.

சிறிது நேரம் கழித்து சுஜாதாவை அழைத்துச் சென் றார்கள். ஒவ்வொரு நிமிஷமும் யுகமாக கழிந்தது. ஒரு மணி நேரம் கழித்து சுஜாதா வெளியே வர, காத்திருந்த ஸ்பெஷலிஸ்ட் ஒருவர், அவளையும், அவளது கணவரையும் உள்ளே அழைத்துச் சென்று தனியறையில் அரைமணி நேரம் அவர்களது ஃபேமிலி ஹிஸ்டரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். எல்லாம் முடிந்தது. ரிசல்ட்டுக்காக ஆவலோடு காத்திருந்தேன். என்னுடைய அதிர்ஷ்டம் ரிசல்ட் நாளை தான் கிடைக்கும் எனக் கூறிவிட்டார்கள்.

இரவு அனைவரும் வீடு திரும்பினோம். நான் மட்டும் ரிசல்ட் வரவில்லையே என்ற ஏமாற்றத்தோடு வீடு

திரும்பினேன். வழியேற சுஜாதாவிற்கு ஆறுதல் கூறிக் கொண்டு வந்தேன். மறுநாள் காலை சந்திரசேகர் மட்டும் மெடிஸ்கேன் சென்றார். இரவு திரும்பியவர் ஸ்கேனிங் ரிப்போர்ட்டை என்னிடம் கொடுத்தார்.

எனது பிரார்த்தனை வீண் போக, நான் கட்டிய மனக் கோட்டை சுக்கு நூறாக உடைந்து சிதறியது.

19

பாலா இல்லத்தில் பாலாவுடன் ஒரு பனிப்போர்!

தாயே உனையன்றி யாருமில்லை தவிக்கும் நெஞ்சுக்கு
நீயே அரு மருந்து என நான் சொல்லத்தான் வேண்டுமோ
தீயே ஆயினும் உன்னிடத்தில் தீண்டுங்கால் அருவியாய்
குளிரும்
சேயே கலியுகத்தில் கண் கண்ட தெய்வம் நீயே எந்நாளும்!

– பாலா அந்தாதி

இரவு இமைகள் மூட மறந்தன. ஸ்கேனிங் ரிபோர்ட் ஞாபகம் வந்தது. குழந்தையின் மூளை வளர்ச்சி சரியில்லை. பின்புறம் தலையும் உடலும் இணையும் பகுதி சரியில்லை. கால்கள் சரியில்லை. பிறந்தாலும் பலனில்லை. அழித்தே ஆக வேண்டும். ஐந்து மாதம் ஆகிவிட்டதால் கருவுக்கு உயிர் வந்து விட்டது. அந்த சிறு ஜீவனை முதலில் அழித்து பிறகு வெளியே எடுக்க வேண்டும்.

என்ன கொடுமை இது? அழிக்கப்போகும் ஜீவனுக்காக மூன்று முறை ஸ்கேன் எடுத்து ஆயிரக் கணக்கில் பணம் செலவு. அந்தக் குழந்தையின் உயிரை எடுப்பதற்கும் ஆயிரக் கணக்கில் பணம் செலவாகும். பணம் போனாலும் பரவாயில்லை. இந்த விஞ்ஞானக் கொடுமைகளை எப்படி சகித்துக் கொள்வது? ஆயிரம் கனவுகளோடு இருந்த என் சகோதரியின் மனது என்ன பாடுபடும்?

நினைக்க நினைக்க நெஞ்சு கனத்தது. காலை எழுந்தவுடன் குளித்து முடித்தேன். பூஜையறைக்குள் சென்று உட்கார்ந்தேன். வாய் மட்டும் மந்திரங்களை முணுமுணுத்தது. நீ செய்தது நியாயமா? இதே கேள்வி மாறி மாறி என் நெஞ்சில் விஸ்வரூபம் எடுத்தது. சகட்டு மேனிக்குத் திட்டலாம் என்றால் குழந்தையான அவள் பிஞ்சு முகம் கெஞ்சும் பாவனையில் பார்க்கிறது.

நான் ஏன் உன்னை நினைக்க வேண்டும். நினைக்க மாட்டேன். உன் பெயரைக்கூடச் சொல்ல மாட்டேன். "பசித்தவனை விருந்து தருகிறேன் எனக் கூறி பத்து கிலோமீட்டர் நடக்க வைத்து இலையையும் போட்டு, நீரையும் வைத்து அடடா... உணவு தீர்ந்து விட்டது. நாளை இதே நேரத்துக்கு இங்கு வருகிறாயா?" எனக் கேட்டால் எப்படி இருக்கும்? நீ செய்ததும் அப்படித்தான் 13 வருடங்கள் குழந்தை இல்லாத அந்தத் தம்பதிகளுக்கு ஆசைக் காட்டி கருவை உண்டாக்கி, ஐந்து மாத கரு குழந்தையாகி அதற்கு உயிரும் வந்த நிலையில் அதை அழிக்க நாள் குறித்துக் கொடுத்திருக்கிறாய்!

இது எந்த விதத்தில் நியாயம்? ஏன் இப்படி சோதனை செய்கிறாய்? அந்தக் குழந்தை இல்லை என்று யார் அழுதது? ஒன் வே போல நான் மட்டும் கேட்டு கேட்டு ஓய்ந்து போனேன். ஐந்து நிமிடம் கழித்து நிதானத்துக்குத் திரும்பினேன். "என்னது பைத்தியக்காரத் தனம்? நேத்து ஆஸ்பத்திரியில் சுஜாதாவுக்கு நாம் என்ன சொன்னோம். இன்னிக்கு இப்படிப் புலம்பறோம்?

நேற்று நடந்தது "ஆக்ஷன் ரிப்ளே" போல மனத்திரையில் ஓடியது. "எத்தனையோ பேர் உன்னை உன் காது படவே மலடின்னு சொல்லியிருக்காங்க. உன் வயத்துலயும் கரு உருவாக்கி நீ மலடி இல்லன்னு நிரூபிச்சுட்டா. இந்தக் கரு தங்கலன்னா யார் செஞ்ச

பாவமோ? என்னமோ? விட்டுத்தள்ளு. இனிமே உனக்கு குழந்தையே பொறக்காதுன்னு டாக்டர் சொல்லலையே. நிச்சயம் உனக்கும் ஒரு வழி திறக்கும். குழந்தை பிறக்கும்" நான் அவளுக்கு சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் என் நினைவுக்கு வந்து பாலா முன் தலை குனிய வைத்தது.

அலமாரியின் ஓரத்திலிருந்த ஸ்தோத்திர மாலா புத்தகத்தை எடுத்தேன். அதில் உள்ளே வைக்கப் பட்டிருந்த பாலாவின் கரு உருவாக்கும் புகைப்படம் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது. சொல்லி வைத்தது மாதிரி ஒவ்வொரு சம்பவமும் சங்கிலித் தொடராக நினைவுக்கு வந்தது.

"குழந்தை இல்லாத எனது சகோதரிக்காகப் பாலா பீடத்திலிருந்த ப்ளைவுட்டில் வரையப்பட்ட பாலா படத்தை போட்டோ எடுத்தது. அந்த நெகட்டிவ்வில் வயிற்றுப் பகுதியில் கருப்பு நிற திட்டாக காட்சியளித்தது. அதை பிரிண்ட் எடுத்துக் கொடுத்தது. இரண்டு குழந்தை பிறந்து இறந்த அவளுக்கு மூன்றாவது பெண்குழந்தை நல்லபடியாக பிறந்தது. அது மட்டுமா மூன்று குழந்தைகள் இறந்து பிறந்த சென்னையைச் சேர்ந்த தம்பதிகளுக்கு நான்காவது குழந்தை நல்லபடியாக பிறந்தது. எனது பெரியப்பா மகன் சுஜாதாவின் தம்பி, ஹரி-கமலா தம்பதிகளுக்கு அந்தப் போட்டோவைத் தர, இப்போது 8 மாதக் கர்ப்பிணியாக கமலா இருப்பது. (அவர்களுக்கு 8 வருடமாகத் திருமணம் முடிந்து குழந்தைப் பேறு இல்லை.)"

இப்படி பாலா செய்த ஒவ்வொரு அற்புதமும் என் நினைவுக்கு வந்து அதுவும் ஒன்றன்பின் ஒன்றாக என் கன்னத்தில் பளார் பளார் என அறைந்து,

"நானா ஒண்ணும் செய்யலை, என்கிட்டயா பேசமாட்டே, என்னையா நினைக்க மாட்டே"

என சவுக்கால் அடிப்பது போன்ற பிரமை. அவ்வளவுதான் அழாமலே கண்ணிலிருந்து நீர் பொல பொலவென கொட்ட ஆரம்பித்தது.

வீட்டில் தந்தையோ, தாயோ நம்மைத் திட்டினால் எதிர்ப்பு காட்ட முடியாத நிலையில், பக்கத்தில் ஏதாவது புத்தகம் இருந்தால் அதைக் கையிலெடுத்து படிக்கவில்லை என்றாலும் கூட, பக்கங்களைப் புரட்டுவோம். நானும் அது போல கையிலிருந்த "ஸ்தோத்திர மாலா" புத்தகத்தைப் புரட்ட அதிலிருந்த "ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை ஸ்தோத்திரம்" கண்ணில் பட்டது. உடனே கைகள் பரபரத்தது, பேனா எடுத்து கடகடவென எழுத ஆரம்பித்தேன். திருமணம் ஆன பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் பாராயணம் செய்து பலன் பெறும் பொருட்டு அருமையான ஒன்பது பாடல்களில் அமைந்து என்னையே பிரமிப்பூட்டிய "ஸ்ரீ பாலா காப்பு" உருவானது.

"ஸ்ரீ பாலா காப்பு" உருவாகும் பொருட்டு பாலா செய்த ஒவ்வொரு லீலைகளையும் நினைத்துப் பார்த்து மெய் சிலிர்த்தேன். பாலாவுக்கும் எனக்கும் நடந்த பனிப்போரில் படுபயங்கர தோல்வி எனக்கு. இந்த தோல்விக்கு நிகரான சந்தோஷம் என் வாழ்நாளில் இதுவரை நான் அடைந்ததே இல்லை. காரணம் கிடைப்பதற்கரிய பொக்கிஷமான "ஸ்ரீ பாலா காப்பு" நமக்குக் கிடைத்ததே.

20

பல கோடி பெறும் பாலா காப்பு!

தடம் தெரியா அப்பாவி எனக்கு உன் விந்தை
நடம் புரியவில்லை நன்மை தீமை தெரியவில்லை இந்த
சடம் மண்ணிலே மறையுமுன் உன் அருளால் இதை
புடம் போட்ட தங்கமாய் மாற்றி விடு என் தாயே!

– பாலா அந்தாதி

சுஜாதாவை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்று அட்மிட் செய்தார்கள். வயிற்றில் வளர்ந்த அந்தப் பிஞ்சு ஜீவனை அழிக்க சிரிஞ்சு மூலம் நஞ்சினைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றினர். "இனி வலி எடுத்து, உயிரற்ற அந்த ஜீவனை வெளியே எடுக்க ஒரு வாரம், பத்து நாள் ஆனாலும் ஆகும்" எனச் சொல்லிவிட்டனர். "அப்படி வலி எடுக்கவில்லை என்றால், ஆபரேஷன் செய்து அதை வெளியே எடுப்போம்" எனக் கூறி சுஜாதாவை டிஸ்சார்ஜ் செய்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

அந்த உயிரற்ற ஜீவனைச் சுமக்கும் பெரிய ஜீவன் தனது வயிற்றைத் தொட்டுப் பார்க்கும் போதெல்லாம் என்ன பாடுபடும்? உயிரற்றச் சிறு ஜீவனை உள்ளே சுமந்து கொண்டு, வீட்டுக்குள் அடைந்து கிடப்பது எவ்வளவு பெரிய கொடுமை. நம்முடைய எதிரிக்குக்கூட இந்த மாதிரி நிலைமை வரவே கூடாது. பத்து நாட்கள் கழித்து, வீட்டைச் சுத்தம் செய்வது போல சுஜாதாவின் வயிற்றை



"கரு உருவாக்கும் பாலாவின் திருஉருவப் படம்"

சுத்தப்படுத்தி அனுப்ப, அதனால் ஏற்பட்ட வயிற்றெரிச்சல் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்தக் கொடூரமான சம்பவம் தான் இந்தப் புத்தகம் எழுதவே காரணம். "இதுதான், இந்த சிறு பிஞ்சு உயிர்தான் நாங்கள் உனக்கு முதலும் முடிவுமாகத் தரும் உயிர் பலி. இனி இது போன்ற சம்பவம் எந்தப் பெண்ணுக்குமே ஏற்படக் கூடாது என்பதற்காக, திருமணமான பெண்கள் தங்கள் வயிற்றில், கரு உருவாகி பேறுகாலம் முடிந்து குழந்தைப் பெறும் வரை அருகிலிருந்து நீதான் அனைத்தையும் செய்ய வேண்டும் எனச் சொல்லி எழுதியதுதான் பாலா காப்பு.

இது நாள் வரை குழந்தை இல்லாதவர்களுக்கும், குழந்தை பிறந்து பிறந்து இறந்து போனவர்களுக்கும் கருவுருவாக்கும் பாலாவின் திருவுருவப் படத்தைக் கொடுத்து, நீங்கள் எதுவும் வேண்ட வேண்டாம். தினமும் காலை மாலை இரு வேளை படத்தை மட்டும் பாருங்கள். உங்களுக்காக நான் வேண்டிக் கொள்கிறேன் எனச் சொல்லி வந்தேன். இப்போதுதான் பாலா, சம்பந்தப்பட்டவர்களே வேண்டிக் கொள்ளும் பொருட்டு "பாலா காப்பினை" கொடுத்திருக்கிறாள்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் படத்தைக் கொடுத்து, பாலா காப்பினைக் கொடுத்து வேண்டிக் கொள்ள செய்வது இயலாத காரியம். குறுகிய காலத்தில் எல்லோருக்கும் பலன் கிடைக்கும் பொருட்டு பாலாவின் அந்தப் பிரத்யேகப் படத்தையும் காப்பினையும் இதிலேயே இடம் பெறச் செய்து விட்டேன். இதுவும் பாலாவின் ஏற்பாடுதான். கடல் கடந்து உள்ள பக்தர்களுக்கும் கருணை புரிய பாலா செய்த லீலையாகத் தான் இதனை உணர்கிறேன்.

ஏதோ ஓர் அற்புதத்தை பாலா என் மூலம் நிகழ்த்தி மீண்டும் என்னை ஒரு கருவியாக ஆக்கியிருக்கிறாள். கடந்த கடைசி நான்கு அத்தியாயங்கள் படிக்கும் கர்ப்பிணிப் பெண்கள் கருவிலே எந்தக் குறை இருந்தாலும் அதை பாலா போக்கிவிடுவாள் என என் உள் மனம் கூறுகிறது.

பாலா இல்லத்தில் "பரவசமூட்டும் பாலா பீடம்" உருவாக பாலா என்னென்னவோ லீலைகள் புரிந்திருக்கிறாள். அவற்றை மனப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் உணர முடிகிறது. ஆனால் எழுத்து பூர்வமாக எழுத முடியவில்லை.

"வாருங்கள் நெமிலி ஒரு அற்புதத் தலம்
பாருங்கள் அன்னை செய்யும் அற்புதங்களும்"

தொடர்வது பாலா காப்பு.

21

பாலா காப்பு

எமைத்தினம் காக்கும் சுமைதனை நீக்கும்
அருள்மிகு பாலா சரணம்! – இங்கு
இமையென இருக்கும் அமைதியைக் கொடுக்கும்
ஈகையின் வடிவே சரணம்! (1)

அருள்மிகு பாலா சரணம் – எம்
ஆசைகள் தீர வரணும்!

திருமணம் முடிப்பாய் திருவருள் கொடுப்பாய்
தீங்கினை அழிப்பாய் பாலா! – எம்
இல்லறம் அதனில் நல்லறம் சேர
நல்வரம் தருவாய் பாலா! (2)

(அருள்மிகு பாலா)

பெற்றவர் மகிழ மற்றவர் நெகிழ
உற்றதுணை நீ பாலா! – எம்
சுற்றமும் நட்பும் சுகமதைப் பெற்றிட
நற்துணை நீயே பாலா! (3)

(அருள்மிகு பாலா)

அருகினில் இருந்து திருமணம் புரிந்து
அனைத்தையும் கொடுப்பாய் பாலா! – எம்
மனையதில் மழலையின் குரல்தனை கேட்டிட
மங்கலம் அருள்வாய் பாலா! (4)

(அருள்மிகு பாலா)

உருவினை அளித்து உயிர்தனைக் கொடுத்து
உயர்வினை அளித்தாய் பாலா! – நல்
கருவினைக் கொடுத்து கவலையைத் தடுத்து
கண்ணெனக் காப்பாய் பாலா! (5)

(அருள்மிகு பாலா)

ஒன்பது இரவுகள் ஒளி விளக்கேற்றி
அன்புடன் தொழுவோம் பாலா! – அந்த
ஒன்பது மாதமும் எம்முடன் இருந்து
அன்புடன் காத்திடு பாலா! (6)

(அருள்மிகு பாலா)

குழலிசை யாழிசை எதுவுமே குழந்தையின்
குரலிசை ஆகுமோ பாலா! – எந்தக்
குறைகளுமின்றி குவலயம் போற்றிட
குழந்தையைக் கொடுத்திடு பாலா! (7)

(அருள்மிகு பாலா)

கருவினில் கலந்து உயிர்தனில் உறைந்து
என்னுடன் கலந்திடு பாலா! – என்
பயமதைக் களைந்து பாவத்தை மறந்து
குழந்தையாய் பிறந்திடு பாலா! (8)

(அருள்மிகு பாலா)

குறைகளை நீக்கி குழப்பத்தைப் போக்கி
குடும்பத்தைக் காத்திடு பாலா! – இந்தக்
குவலயம் தனிலே உனைப் போல தெய்வம்
எங்குமே இல்லையே பாலா! (9)

(அருள்மிகு பாலா)

பயன்

ஒவ்வொரு மாந்தரும் ஒரு மனத்துடனே
இதனைப் படித்தால் நலமே! – பாலா

காப்பினை காலையும் மாலையும் படித்திட
கவலைகள் மறைந்திடும் நிஜமே!
வாழ்த்திட வருவாள் பாலா! – உன்
வாழ்க்கையே அவள்தான் கேளாய்!

பாலா காப்பு நிறைவுற்றது.

22

ஸ்ரீபாலா பஞ்சரத்னம்

நினைத்திடில் பலன்தரும்
அருமையானதொரு மந்திரம்
அனைத்திலும் உயர்ந்தது - எங்கள்
அன்னையின் மந்திரம்!
எமைத்தினம் காத்திடும்
எளிமையானதொரு மந்திரம்
சுமைதன்னை நீக்கிடும் - பாலா
நின் பெயரே மந்திரம்! (1)

அருள்தனை அளித்திடும்
அகிலமுழுமையும் காத்திடும்
அனைத்திலும் உயர்ந்தது - எங்கள்
அன்னையின் மந்திரம்!
புவிதன்னைக் காத்திடும்
புண்ணியங்கள் பல சேர்த்திடும்
புன் சிரிப்பைக் காட்டிடும் - பாலா
நின் பெயரே மந்திரம்! (2)

அகம்பாவம் அழித்திடும்
அமிழ்தம் போலவே இனித்திடும்
அனைத்திலும் உயர்ந்தது - எங்கள்
அன்னையின் மந்திரம்!

பாடல்பல கொடுத்திடும்
பாங்குடனது ஜொலித்திடும்
பார்முழுக்க பேசிடும் – பாலா
நின் பெயரே மந்திரம்! (3)

அதிசயங்கள் நிகழ்த்திடும்
அற்புதங்கள் பலசெய்திடும்
அனைத்திலும் உயர்ந்தது – எங்கள்
அன்னையின் மந்திரம்!
நிலையதனை உயர்த்திடும்
நிதமும் நம்மைக் காத்திடும்
நிறைவுதன்னை அளித்திடும் – பாலா
நின் பெயரே மந்திரம்! (4)

அன்புதன்னை உணர்த்திடும்
ஆற்றல்தனைக் கொடுத்திடும்
அனைத்திலும் உயர்ந்தது – எங்கள்
அன்னையின் மந்திரம்!
உண்மைதன்னை உரைத்திடும்
உயர்ந்த ஞானமளித்திடும்
உலகமெங்கும் ஒலித்திடும் – பாலா
நின் பெயரே மந்திரம்! (5)

பாலா பஞ்சரத்னம் நிறைவுற்றது

23

பாலா அஷ்டகம்

அம்மா உன்முகம் ஆறுதல் தரும்
ஆதாரம் உந்தன் பதம்!
பாடும் மனம் தினம் தொழும்
அதுதானே வேண்டும் வரம்!
தேன் போன்ற வாக்கு தெவிட்டாமல் கேட்க
தேவி நீ வரவேண்டும்!
தேவைகள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (1)

பாலா உன் இடம் பணிவினைத் தரும்
பாடல்கள் தானே வரும்!
அன்பாய் ஒரு முறை உனை
அழைத்தாலே சொர்கம் வரும்!
பொன் போன்ற உந்தன் புகழ்தன்னைக் கூற
தேவி நீ வரவேண்டும்!
ஆசைகள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (2)

தாயே உன் துணை தயவினைத் தரும்
தாபங்கள் மறைந்தே விடும்!
சேயாய் உனைத் தொழும் மனம்
சேவைகள் தான் செய்திடும்!

பூப் போன்ற சிரிப்பை யாம் காணவே இங்கு
தேவி நீ வரவேண்டும்!
பூசல்கள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (3)

ஆகாயம் இந்த பூமி யாவுமுன்
விளை யாட்டிலே ஜொலித்திடும்!
ஆதாயம் அது உனைத் தொழ
அளவின்றி தான் கிடைத்திடும்!
ஆனந்தம் பொங்க உன் பேரைச் சொல்ல
தேவி நீ வரவேண்டும்!
ஆதங்கம் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (4)

பாதார விந்தம் பணிந்தாலே போதும்
பயமென்பதே பறந்திடும்!
ஆதாரம் அது உனைத் தொழ
அழகோடு தான் பிறந்திடும்!
பால் போன்ற உந்தன் முகம் காணவே இங்கு
தேவி நீ வரவேண்டும்!
பாவங்கள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (5)

கரும்பாக எந்தன் கவியாவும் மாறும்
கவலைகள் தான் கரைந்திடும்!
இரும்பான மனம் உனைத் தொழ
அரும்பாகத் தான் மலர்ந்திடும்!
குறும்பான உந்தன் விளையாட்டைக் காண
தேவி நீ வரவேண்டும்!
துன்பங்கள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (6)

கண்ணே உன் குரல் காந்தமாய்க் கவரும்
காமங்கள் தான் மறைந்திடும்!

பெண்ணே உனைத் தினம் தொழ
பேரின்பம் தான் பிறந்திடும்!
மண்மீது நானும் மறவாமல் பாட
தேவி நீ வரவேண்டும்!
துயரங்கள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (7)

அருகே ஒருமுறை நீயும் வந்திடில்
ஆனந்தம் தான் பொங்கிடும்!
அழகே உனைத் தினம் தொழ
அகம்பாவம் தான் அழிந்திடும்!
உருகாத நெஞ்சம் உனைக் காண உருகும்
தேவி நீ வரவேண்டும்!
சோகங்கள் உண்டு அவை யாவும் தீரும்
பாலா நீ பார்த்தால் சுகம்! (8)

பாலா அஷ்டகம் நிறைவுற்றது

24

ஸ்ரீ பாலா நவரத்ன மாலை

குரு வணக்கம்

என்னைக் கருவியாய் ஆக்கிய அன்னை
உன்னைத் தவிர குருவெனக்கு யாரம்மா?
உந்தன் புகழை உலகறிய எழுதும்
எந்தன் ஆதாரம் எந்நாளும் நீயம்மா!!

கணபதி துதி

கனவினிலே வந்தருளும் கட்டழகு பெட்டகமாம்
காணக் கிடைக்கா பொக்கிஷமாம் எங்கள் பாலாவின்
நவரத்ன மாலைதனை நல்லபடி ஆக்கிட
நவசக்திகணபதி வருவாய்! நற்கவிகளை நீதருவாய்!!

மாணிக்கம்

தோகை மயிலே தோல்விகள் இல்லை
தோணியென எமக்கு நீ வந்தாலே!
ஏழிசை மகிழ ஏழ்மையும் மடியும்
ஏணியென எமக்கு நீ வந்தாலே!
வாழும் வாழ்க்கை வளமாய் மாறும்
வாணியுன் புகழை வாய் புகழ்ந்தாலே!
மாந்தர் வாழ்வு மங்கா திருக்கும்
மாணிக்கமாய் மின்னும் பாலா உன்னாலே!!

முத்து

முத்தமிழ் புகழும் முழுமதி யுனக்கு
முத்தம் தரவே ஆசைகள் உண்டு!
நித்திலம் காக்கும் நிறை வான்மதியே
நித்தம் பலவித பூஜைகள் உண்டு!
சந்தங்கள் சொன்ன சுந்தரி உன்னிடம்
சத்தம் கூட சங்கீத மாகும்!
முழுமுதற் கடவுளும் முன்னின்று வணங்கும்
முத்தினை யொத்தது பாலா உன்முகம்!!

பவளம்

கண்மணி உந்தன் பேர்சொல்லி உண்ணும்
கவளம் உணவும் கவலை தீர்க்கும்!
தண்ணொளி வீசும் பாலா உன்முகம்
தவழும் நிலவாய் தாபத்தைப் போக்கும்!
தூயவள் உந்தன் பெயர் சொன்னாலே
துவளும் நெஞ்சமும் நிமிர்ந்தே பார்க்கும்!
பவவினை அகற்றும் பாலா அணிந்தால்
பவளமும் மகிழ்ந்து பரவசம் பூக்கும்!!

மரகதம்

வகைவகை ஆன செல்வங்கள் வேண்டாம்
வரந்தரும் உந்தன் பார்வையே போதும்!
சுகம்தரும் சுவைமிகு பாடலைப் பாட
சுரந்தரும் உந்தன் சுடர்விழி போதும்!
நிதம்நிதம் மாறும் நித்தில மீதினில்
நிரந்தரம் என்றும் உந்தன் பொற்பதம்!
மனமது மகிழ ஆசிகள் வழங்கும்
மரகதம் ஜொலிக்கும் உந்தன் மலர்ப்பதம்!!

புஷ்பராகம்

இனியவள் உந்தன் இருப்பிடம் வந்தால்
    இஷ்டங்கள் யாவும் இனிதாய்ச் சேரும்!
கரும்பென இனிக்கும் கவிதைகள் சொன்னால்
    கஷ்டங்கள் யாவும் கணத்தினில் மாறும்!
நம்பியே உன்னை சரண் புகுந்தாலே
    நஷ்டங்கள் யாவும் நொடியினில் தீரும்!
புவியினைக் காக்கும் நீ அணிந்தாலே
    புஷ்பராகமும் இன்னிசை பாடும்!!

வைரம்

உண்மையின் உருவாய் உதித்த உன்னிடம்
    உயிரும் உருகும் பாடலைப் பருகும்!
உன்னதமான உன் இடம் வந்திடில்
    உயரும் உன்புகழ் ஊழ்வினை களையும்!
துவண்ட இதயமும் துடிப்புடன் இயங்கும்
    துயரம் அழியும் தூயவை நிறையும்
வைகறைப் பொழுதில் மின்னும் உன்முகம்
    வைரமாய் ஜொலிக்கும் வரங்களை அளிக்கும்!!

நீலம்

பாவை உன்வரவால் பாடல்கள் தோன்றும்!
    பாலங்கள் எமக்கு கனவுதான் என்றும்!
கோலமகள் உந்தன் முன்னே போடும்
    கோலங்கள் யாவும் தாளங்கள் போடும்!
ஜாதிமதம் நீக்கும் பாலா உந்தன்
    ஜாலங்கள் யாவும் ஜகத்தினை ஆளும்!
நீதிகள் கூறும் நீ அணிந்தாலே
    நீலக்கல் அதுவும் நிம்மதி அடையும்!!

கோமேதகம்

எந்தன் மனத்தில் உனக்கொரு தனியிடம்
என்ஜாதகம் உன்னிடம் பயமில்லை எமனிடம்!
உன்னதமான நெமிலி திருத் தலத்தில்
உன் சாதகம் பண்ணிட பாடலும் பூத்திடும்!
வீழ்ச்சிகள் குறையும் சூழ்ச்சிகள் மறையும்
வீண்பாதகம் செய்வோரை விரைவில் அழித்திடும்
கோதை உந்தன் பார்வை பட்ட
கோமேதகம் தொட்டால் கோடிகோடி புண்ணியம்!!

வைடூர்யம்

அன்பின்றி திரியும் அரக்கர் கூட்டத்தின்
அட்டூழியம் அது அடியோ டழியும்!
ஆதியோ டந்தமாய் உந்தன் தயவால்
ஆச்சர்யமது அளவின்றி நிகழும்!
சாதுபோல் இருந்து கொண்டு சாதிக்கும்
சாதுர்யம் கொண்ட சாதனை நாயகி
வையம் புகழும் பாலா நீ அணிந்தால்
வைடூர்யம் அது வைகுந்த மோட்சமடையும்!!

பயன்

பாலா உந்தன் நவரத்ன மாலையை
பணிவோடு நாளும் படித்து வந்தாலே
நினைத்தது நடக்கும்! நிம்மதி பிறக்கும்!!
நித்தில மீதினில் நல்லது நடக்கும்!!!

பாலா நவரத்ன மாலை நிறைவுற்றது

25

பாலா பதிகம்

நெமிலி நகர் வந்து சேர்ந்த
எங்கள் அன்னையே! – அன்பு
நெஞ்சினிலே நிதமும் வைத்து
துதித்தோம் உன்னையே!
நெருஞ்சி முள்ளும் குறிஞ்சி மலராய்
மாறும் அற்புதம்! – உனை
நெருங்கி வந்தால் நெருப்பும்கூட
நிலவாய்க் குளிர்ந்திடும்!! (1)

அகிலமெலாம் ஆட்சி புரியும்
எங்கள் அன்னையே! – இந்த
பதிகமது பறை சாற்றும்
உந்தன் புகழையே!
அன்னை பாலா உந்தன் பெயர்
துயரைப் போக்கிடும்! – உன்
அழகு முகம் காணக் காண
ஏக்கம் மறைந்திடும்!! (2)

அன்று முதல் இன்று வரை
உந்தன் லீலைகள் – அதை
பணிவுடனே படித்தவர்க்கு
ஏது தொல்லைகள்!?

அற்புதங்கள் நாளும் செய்யும்
உந்தன் பொற்பதம் – அந்த
அனுபவங்கள் போதுமம்மா
நெஞ்சம் நெகிழ்ந்திடும்!! (3)

ஆற்றல் கொண்ட உந்தன் பெயரே
ஏற்ற மந்திரம்! – அதை
ஆடிப் பாடி சொல்லிடவே
ஏற்றம் வந்திடும்!
ஆதி முதல் அந்தம் வரை
நீயே அல்லவா – அதை
ஆனந்தமாய் பாடல் மூலம்
நாங்கள் சொல்லவா! (4)

இன்பம் பொங்க இறைவியே உன்
பாடல்தான் என்றும் – நல்
இதயமுடன் இங்கு வந்தால்
இன்பங்கள் தோன்றும்!
இன்றுவரை உனக்கு ஒரு
இணை எனச் சொல்ல – தாயே
இது வரையில் இவ்வுலகில்
எதுவுமே இல்லை! (5)

பாலா உன் பாடல் பல
பாரினில் ஒலிக்கும் – அதைப்
பாடிடவே உந்தன் முகம்
பளிங்கென ஜொலிக்கும்!
பாலா எனச் சொல்லிவிட்டால்
பாதைகள் திறக்கும் – புனித
பாலா பீடம் வந்து சென்றால்
பாவங்கள் பறக்கும்!! (6)

இனிமையான உனது பீடம்
இன்பம் அளித்திடும் – எங்கள்

இமையெனவே நீ இருக்க
துன்பம் தொலைந்திடும்!
இல்லை என்று சொன்னவர்க்கு
அருளைக் கொடுத்திடும் – உன்
இருப்பிடத்தில் ஜாதி பேதம்
அனைத்தும் ஒழிந்திடும்!! (7)

கனவினிலே வந்து கருணை
புரிபவள் நீயே – எம்
கவலைகளை போக்க வந்த
கண்மணி நீயே!
கவிதைகளை அள்ளித் தரும்
கவின்மிகு தாயே – நல்ல
கலைகளையே சொல்லித் தரும்
கலை மகள் நீயே! (8)

ஆற்றினிலே கண் டெடுத்த
அன்பு தெய்வமே! – உன்
ஆற்றல் காண எங்களுக்கு
ஆற்றல் ஏதம்மா?
ஆவல் கொண்டு உந்தனிடம்
வந்தோம் பாரம்மா – உனை
ஆயிரம் முறை அழைத்திடினும்
ஆசை போகுமா?! (9)

நான் மறையும் போற்றுகின்ற
தாயவள் பதிகம்! – அதை
நாள் தோறும் சொல்லிவந்தால்
நன்மைகள் அதிகம்!
நாதமோடு வேதமான
தூயவள் அவளே – இங்கு
நாதியற்ற நமக்கு என்றும்
நற்கதி அவளே! (10)

பாலா பதிகம் நிறைவுற்றது

26

ஸ்ரீ பாலா ஸ்துதி

ஸ்ரீ பாலா எங்கள் ஸ்ரீ பாலா!!
நெமிலி நகர்வாழ் ஸ்ரீ பாலா!!! —ஸ்ரீ பாலா

அன்பின் வடிவே ஸ்ரீ பாலா
அழகின் வடிவே ஸ்ரீ பாலா
அருளின் வடிவே ஸ்ரீ பாலா
அமைதியின் வடிவே ஸ்ரீ பாலா! (4)

ஆற்றினில் வந்தவள் ஸ்ரீ பாலா
ஆற்றலைத் தந்தவள் ஸ்ரீ பாலா
ஆபத்தைத் தடுப்பவள் ஸ்ரீ பாலா
ஆனந்தம் கொடுப்பவள் ஸ்ரீ பாலா! (8)

இசையினை ரசிப்பவள் ஸ்ரீ பாலா
இன்பத்தை அளிப்பவள் ஸ்ரீ பாலா
இதயத்தில் வசிப்பவள் ஸ்ரீ பாலா
இனிமையைக் கொடுப்பவள் ஸ்ரீ பாலா! (12)

ஈஸ்வரி வடிவே ஸ்ரீ பாலா
ஈர்த்திடும் வடிவே ஸ்ரீ பாலா
ஈகையின் வடிவே ஸ்ரீ பாலா
ஈடில்லா வடிவே ஸ்ரீ பாலா! (16)
—ஸ்ரீ பாலா

உலகினைக் காப்பாள் ஸ்ரீ பாலா
உள்ளத்தில் பூப்பவள் ஸ்ரீ பாலா

உண்மையின் உருவே ஸ்ரீ பாலா
உயர்வினைத் தருவாய் ஸ்ரீ பாலா! (20)

ஊரெங்கும் உன்புகழ் ஸ்ரீ பாலா
ஊழ்வினை களைவாய் ஸ்ரீ பாலா
ஊக்கமளிப்பவள் ஸ்ரீ பாலா
ஊட்டி வளர்ப்பவள் ஸ்ரீ பாலா! (24)

எங்கும் நிறைந்தவள் ஸ்ரீ பாலா
எண்ணத்தில் நிறைந்தவள் ஸ்ரீ பாலா
எதிலும் உன் முகம் ஸ்ரீ பாலா
எமை நீ காப்பாய் ஸ்ரீ பாலா! (28)

ஏழிசை வடிவே ஸ்ரீ பாலா
ஏகாந்த வடிவே ஸ்ரீ பாலா
ஏழையைக் காப்பாய் ஸ்ரீ பாலா
ஏற்றமே அளிப்பாய் ஸ்ரீ பாலா! (32)

– ஸ்ரீ பாலா

ஐங்கரன் தாயே ஸ்ரீ பாலா
ஐஸ்வர்யம் நீயே ஸ்ரீ பாலா
ஐயத்தைக் களைவாய் ஸ்ரீ பாலா
ஐம் க்லீம் செள நீ ஸ்ரீ பாலா! (36)

ஒன்பது இரவுகள் ஸ்ரீ பாலா
ஒளியாய் திகழ்வாய் ஸ்ரீ பாலா
ஒருதரம் அழைத்தால் ஸ்ரீ பாலா
ஒயிலாய் வருவாள் ஸ்ரீ பாலா! (40)

ஓதிடும் வேதமும் ஸ்ரீ பாலா
ஓங்கார நாதமும் ஸ்ரீ பாலா
ஓம் சக்தி என்றால் ஸ்ரீ பாலா
ஓடியே வருவாள் ஸ்ரீ பாலா! (44)

கலியுக தெய்வம் ஸ்ரீ பாலா
கண்கண்ட தெய்வம் ஸ்ரீ பாலா

கருணை வடிவம் ஸ்ரீ பாலா
கனவினில் வருவாய் ஸ்ரீ பாலா! (48)

– ஸ்ரீ பாலா

காந்தப் பார்வை ஸ்ரீ பாலா
காக்கும் நம்மை ஸ்ரீ பாலா
காவல் என்றும் ஸ்ரீ பாலா
காப்பாய் எம்மை ஸ்ரீ பாலா! (52)

குழந்தை வடிவம் ஸ்ரீ பாலா
குறும்பின் வடிவம் ஸ்ரீ பாலா
குறைகள் போக்கும் ஸ்ரீ பாலா
குழப்பத்தை நீக்கும் ஸ்ரீ பாலா! (56)

சலங்கை ஒலிக்க ஸ்ரீ பாலா
சடுதியில் வருவாள் ஸ்ரீ பாலா
சக்தியின் வடிவே ஸ்ரீ பாலா
சஞ்சலம் தீர்ப்பாய் ஸ்ரீ பாலா! (60)

சாதனை புரிபவள் ஸ்ரீ பாலா
சாதிக்க வைப்பவள் ஸ்ரீ பாலா
சாபத்தைத் தீர்ப்பவள் ஸ்ரீ பாலா
சாந்தி அளிப்பவள் ஸ்ரீ பாலா! (64)

– ஸ்ரீ பாலா

சின்னஞ்சிறு உருவம் ஸ்ரீ பாலா
சிந்திக்க வைக்கும் ஸ்ரீ பாலா
சிறுமையை அழிக்கும் ஸ்ரீ பாலா
சிறப்பினை அளிக்கும் ஸ்ரீ பாலா! (68)

சுந்தரி வடிவம் ஸ்ரீ பாலா
சுடரெனத் தெரியும் ஸ்ரீ பாலா
சுமைகளை எடுக்கும் ஸ்ரீ பாலா
சுகமதைக் கொடுக்கும் ஸ்ரீ பாலா! (72)

தழுவும் தென்றல் ஸ்ரீ பாலா
தண்ணருள் புரிவாள் ஸ்ரீ பாலா
தடங்கலை நீக்கும் ஸ்ரீ பாலா
தஞ்சம் அளிக்கும் ஸ்ரீ பாலா! (76)

தாவிடும் குழந்தை ஸ்ரீ பாலா
தாபத்தைப் போக்கிடும் ஸ்ரீ பாலா
தாமதம் ஏனோ ஸ்ரீ பாலா
தாங்கிடுவாய் எமை ஸ்ரீ பாலா! (80)

–ஸ்ரீ பாலா

திருமணம் முடிக்கும் ஸ்ரீ பாலா
திசையெங்கும் உன்புகழ் ஸ்ரீ பாலா
திருவருள் பொழிவாய் ஸ்ரீ பாலா
தினம் தினம் வளர்வாய் ஸ்ரீ பாலா! (84)

தீங்கனி போன்றவள் ஸ்ரீ பாலா
தீங்கினை அழிப்பவள் ஸ்ரீ பாலா
தீராத வினைகள் ஸ்ரீ பாலா
தீர்த்து வைப்பாயே ஸ்ரீ பாலா! (88)

துணையென்றும் நீயே ஸ்ரீ பாலா
துயரினைக் களைவாய் ஸ்ரீ பாலா
துடிக்கும் இதயமும் ஸ்ரீ பாலா
துதிக்கும் உன்னை ஸ்ரீ பாலா! (92)

தூற்றிடும் நெஞ்சமும் ஸ்ரீ பாலா
தூற்றிட அஞ்சும் ஸ்ரீ பாலா
தூய்மையின் வடிவே ஸ்ரீ பாலா
தூயவள் நீயே ஸ்ரீ பாலா (96)

– ஸ்ரீ பாலா

நாளும் உன்புகழ் ஸ்ரீ பாலா!
நாங்கள் பாடினோம் ஸ்ரீ பாலா

நான்மறை போற்றும் ஸ்ரீ பாலா
நாடியே வந்தோம் ஸ்ரீ பாலா! (100)

நெஞ்சினில் நிறைந்தவள் ஸ்ரீ பாலா
நெமிலிக்கு வந்தவள் ஸ்ரீ பாலா
நெருப்பென ஒளிர்வாய் ஸ்ரீ பாலா
நெருங்கினில் குளிர்வாய் ஸ்ரீ பாலா! (104)

புன்னகை தவழும் ஸ்ரீ பாலா
புகழினைத் தருவாய் ஸ்ரீ பாலா
புருவத்தை உயர்த்தி ஸ்ரீ பாலா
புவியினைக் காப்பாய் ஸ்ரீ பாலா (108)

27

பாலா அந்தாதி

காப்பு

ஞால மதை படைத்திட்ட ஞான ஸ்வரூபிணியாம் அன்னை
பாலா வின் அந்தாதி தனை அழகுடன் ஆக்கித் தர
மூல காரணமாம் இருக்கும் முழு முதற் கடவுளே
கோல நிறை கணபதியே தொழுதேன் உனை கோடி முறை

அன்று ஒரு நாள் அய்யரவர்கள் கனவினிலே வந்தவள்
இன்று முதல் நெமிலி என் இருப்பிடம் எனச் சொன்னவள்
[1]என்றூழ் போல் ஜொலிக்கின்ற வயதினிலே சின்னவள்
ஒன்று தலென்றால் இங்கு தானென்று ஒய்யாரமாய் நின்றனள்! (1)

நின்றனள் குழந்தையாய் நிறைந் தனள் மனத்தினில்
வென்றனள் அனைத்தையும் வெற்றி வாகை கொண்டனள்
கொன்றனள் பண்ட புத்திரரை கொஞ்சி மகிழும் குழந்தையாய்
[2]தென்றினள் போன்றவள் தெவிட்டா இன்பம் தருபவள்! (2)

தருபவள் அனைத்தையும் தடை யின்றி இவ் வுலகுக்கு
வருபவள் நொடியினில் அடியவர் குறை தீர்ப்பதற்கு சிறு
[3]உருபவள் சீறி வந்து நன்மை பலவும் புரிபவள் அழகிய
[4]புருபவள் பூவுலகை அரை நொடியில் அற்புதமாய் படைத்தவள்! (3)

படைத்தவள், பக்தரின் துயர்தனை பரி பூரணமாய்
துடைத்தவள் இரக்கமற்ற அரக்கர் கூட்டத்தை தூள்தூளாய்
உடைத்தவள் உள்ளமதில் உண்மையான அன்புதனை அளவின்றி
அடைத்தவள் இவ் வுலக மெங்கும் இடையறாது நிறைந்தவள்! (4)

---

1. சூரியன், 2. தென்றல், 3. உருவம் கொண்டவள்,
4. குழந்தையானவள்.

நிறைந்தவள், அன்பு கொண்ட மனத்தில் நிரந்தரமாய்
உறைந்தவள்! பண்ட புத்திரரை அழித்த பின் பாதி புராணத்தில்
மறைந்தவள், உலகத்து தெய்வங்களில் உருவிலும் வயதிலும்
குறைந்தவள் குறைகள் அனைத்தையும் குறைவின்றி தீர்த்தவள்! (5)

தீர்த்தவள் தீங்கினை, நல்லவர் பலரை நெமிலியிலே கொண்டு
சேர்த்தவள், கலை நிகழ்ச்சிகள் பலவற்றை களிப்புடனே
பார்த்தவள்! மணியான கலைஞர்களை மணி மணியாக
கோர்த்தவள் கோடி கோடி இன்பமதை கொடை போல்
கொடுத்தவள்! (6)

கொடுத்தவள் மகிழ்வுடனே, இன்னல் பலவும் இமைப் பொழுதில்
தடுத்தவள், தரணி எங்கும் புகழ் பாடத் தக்கதோர் அவதாரம்
எடுத்தவள்! அன்பையும் அருளையும் அழகிய ஆடை போல
உடுத்தவள், உண்மையான பக்தரின் கனவிலே வந்து உதிப்பவள்!
(7)

உதிப்பவள் உலகமெங்கும், நல்லவர்க்கு நன்மைகளை நாள்தோறும்
விதிப்பவள் நிலையற்ற இவ்வுலகில் நிதமும் பலரால்
துதிப்பவள், தூய நெஞ்சைக் காயப் படுத்தும் கயவரைக்
கண்டவுடன்
மிதிப்பவள் மின்னல் இறங்கி வந்தது போல சொலித்தவள்! (8)

சொலித்தவள் சுடர் போல சுவையான பாடல் பல கேட்டு
[1]கலித்தவள் கல் நெஞ்சு கொண்ட கயவரைப் பொசுக்கிய
[2]அலித்தவள் உலக மெங்கும் நீங்கா ஓங்கா ரமாய்
ஒலித்தவள், ஒற்றுமை எனும் பாடத்தை ஒய்யாரமாய் உரைத்தவள்!
(9)

உரைத்தவள் உண்மை தனை கம்பீரமாய், உண்மையில்
[3]நுரைத்தவள் [4]நுதனாட்டி ஆனவள் நிதமும் நமைக் காக்கும்
[5]பரைத்தவள் பண்பு கொண்ட அன்பர்க்கு அன்பினை ஊட்டும்
[6]சுரைத்தவள் சுமைகளை சுகமாய் மாற்றும் அரும் பொருள்! (10)

பொருள் வேண்டா அன்பர்கள் பொறுமை யோடு உன்
அருள் வேண்டி உன் இடம் தேடி வரும் போது

1. மகிழ்ச்சி கொள்பவள், 2. நெருப்பு போன்றவள், 3. மென்மையானவள்,
4. துர்க்கை, 5. உமையம்மை, 6. தேன்.

மருள் கொண்டு மன மகிழ்ச்சி யோடு அக
இருள் நீங்கி இப் பூவுலகில் இன்பம் கொள்வர். (11)

கொள்வர் உன் பெயரை நிதமும் கூறு கையில்
[1]ஒள்வர் ஆகி ஒழுக்கமோடு ஒப்பிலா ஒற்றுமை ஆகி
எள்வர் எந் நாளும் பாதகச் செயலைக் கண்டு
கள்வர் ஆயினும் கயவர் ஆயினும் கணத்தில் மாறுவர் (12)

மாறுவர் மாநில மெங்கும், மகிழ்வுடனே ஓடிச் சென்று
கூறுவர் நின் புகழை, உண்மை எனும் ஏணி கொண்டு
ஏறுவர் ஏற்றம் கண்டு பின்பு தீச் செயல் கண்டால்
சீறுவர் சிறுமையை அழித்து பெருமையை அணியாய் பூணுவர்! (13)

பூணுவர் கவசமாய் பூங்கொடி உன் கவசத்தை பூவுலகில்
காணுவர் காணக் கிடைக்கா பேற னைத்தும் கண்டபின்
[2]ஏணுவர் [3]ஏதின்மை இன்றி உன்னை [4]ஏத்துவர் பின்பு
நாணுவர் நாத்திகம் பேசியதை எண்ணி நா கூசுவர். (14)

கூசுவர் கடகச் செயல் புரிய, கூடா வொழுக்கம் கண்டு
ஏசுவர் [5]ஏணாப்பு இன்றி, ஏகபோகமாய் எந் நேரமும்
பேசுவர் உன் லீலையை, ஆவல் மிக உனைக் காண
[6]ஆசுவர், கண்டபின் ஆட்படுவர் ஆனந்தமாய் உனை நினைத்து!
(15)

நினைத் தவுடன் நிம்மதி அடைவர் நின் பார்வை
[7]இனைத் தவுடன் இன்னலை அழிக்கும் இன்பம் அது
[8]எனைத்து என்று அளவிட முடியாது, அமுத சுரபியாகி
அனைத்து குறைகளையும் போக்கி அமைதி கொடுக்கும். (16)

கொடுக்கும் கொடை வள்ளல், கொஞ்சி மகிழும் பாலா
விடுக்கும் அழைப்பு ஒவ்வொன்றும் வரும் அல்லவைகளை
ஒடுக்கும் பின்பு அமைதியோடு அருளும் தந்து இருளைத்
தடுக்கும் தக்கதொரு துணையென இடையறாது இருக்கும். (17)

இருக்கும் வரையில் இதய மதில் இன்பம் சுரக்கும் கொடிய
தருக்கும் மறையும் தளிர்க் கரம் வழங்கும் ஆசியில்
செருக்கும் அழியும் செம்பருத்தி போல சிவக்கும் விழிகள்
பெருக்கும் வளத்தை கொடுக்கும் நலத்தை இது சத்தியம். (18)

1. அறிவு நிறைந்தவர், 2. வலிமை நிறைந்தவர், 3. பகைமை,
4. வணங்குவர், 5. இறுமாப்பு, 6. விரைவர், 7. வருத்தம், 8. எவ்வளவு.

சத்தியம் சொன்ன சுந்தரியுன் முகம் சத்துருவை அழிக்கும்
பத்தியம் வேண்டாம் பதறவும் வேண்டாம் நமது உடலே
[1]தித்தியம் ஆகும் அதில் அம்பிகையின் அழகு வேள்விதனை
நித்தியம் செய்து வந்தால் நிச்சயம் முக்தி வரும். (19)

வரும் துயர் யாவும் வளமாய் இங்கு மாறும்
தரும் இன்பம் நாளும் [2]தரங்கம் போல பெருகும்
அரும் பொருள் நீதானென்று அடிக்கடி நெஞ்சு கூறும்
இரும் பான மனமும் அரும்பாகி மணம் வீசும். (20)

வீசும் தென்றல் உன் பெயர் சொல்லிச் செல்லும்,
பேசும் தமிழ் உன் புகழைச் சொல்லிச் செல்லும்
பூசும் சந்தனம் உன் பெருமையை நாளும் சொல்லும்
காசும் பணமும் வேண்டாம் கண்ணே உன் கரிசனம் போதும். (21)

போதும் என்ற மனம் எவருக்கும் இங்கு இல்லை
மோதும் தேவை களுக்கும் அளவு என்பதே இல்லை
சூதும் வாதும் நிறைந்த இவ் வுலகில் நிதமும்
தீதும் தீங்கும் நிகழா திருக்க தாயே உன்னருள் வேண்டும். (22)

வேண்டும் வரம் யாவும் தரும் எங்கள் பாலா
மீண்டும் ஒரு தரம் எங்கள் வேண்டுதல்களைக் கேளாய்
யாண்டும் இன்பம் வேண்டவில்லை பாழும் துன்பக் கிணற்றை
தாண்டும் சக்தியும் அதை தாங்கும் சக்தியும் நீ தா! (23)

தா என்றால் தருவாய் நீயே சேயாய் நின்ற தாயே
வா என்றால் வருவாய் நீயே வரமதைத் தருவாயே
போ என்று நீயும் சொல்லலாகாது என்றும் எங்கள்
மா பெரும் துணை நீயே இதை நீ மறவாயே! (24)

மறவாய் நெஞ்சே தினம் அவள் பெயரைக் கூறி என்றும்
உறவாய் இங்கிரு அன்னையை சரண் அடைந்தால் சத்தியமாம்
இறவாய் இது நிச்சயம் ஆகவே உன் மனக் கதவை
திறவாய் அதில் நிறைவாய் அவளின் நினைவாய் இருந்திடு. (25)

இருந்திடு நாளெலாம் இடைவிடாது அவள் பெயரை ஆகாரமாய்
அருந்திடு, அலையும் நெஞ்சுக்கு அமைதி தர பாலா கவசமெனும்
மருந்திடு பின்பு மறந்திடு மற்றவற்றை உன்னையே அவளுக்கு
விருந்திடு வியக்க வைக்கும் அற்புதம் காண விரைந்திடு! (26)

1. வேள்விக் குண்டம், 2. கடல்,

விரைந்திடு துயர் யாவும் அருள்சிந்தும் அன்னை முகம் காண
கரைந்திடும் கவலை யாவும் மறைந்திடும், குழந்தை அவள்
வரைந்திடும் கோலத்தில் சிறு புள்ளியாய் இருந்திடு போதும்
கரைந்திடு கனவிலும் நினைவிலும் பாலாவின் திரு நாமம். (27)

நாமம் கூறுங்கால் நம் நெஞ்சம் நாள் தோறும்
சேமம் கண்டு வரும் சேதம் ஏதுமின்றி எந்த
யாமம் வெளியே சென்று வந்தாலும் ஒரு போதும்
[1]வீமம் வாராது வீழ்ச்சியும் வாராது இதுவே தக்க சாமம்! (28)

[2]சாமம் ஏதுமில்லை சஞ்சலம் யாவும் காற்றில் கலையும்
[3]தூமம் போல் மறையும் தூயவள் பேர் சொன்னால்
[4]ஈமம் செல்லும் நிலை வராது ஈயென்று இரவாமல்
ஓமம் ஏதும் செய்யாமல் வாழ்வு நல்ல வளமாகும். (29)

வளம் கொழிக்கும் வாழ்க்கை வேண்டின் வாலை உன்னுடன்
[5]அளம் கொண்டால் போதும் ஆற்றல் கூடும், வேறு கோயில்
குளம் செல்ல வேண்டாம். குழந்தை வடிவில் வாழும்
இளம் தெய்வம் உனைத் தொழுதால் மறைந்திடும் பாழ் [6]சளம். (30)

சளம் இல்லா வாழ்க்கை வாழ்ந்து நாள்தோறும் உனை
உளம் நெகிழ நினைத்து வந்தால் [7]உழைக்கலம் பெருகும்
[8]களம் அழிந்து கவலைகளும் கண்ணீர் திவலைகளும் எமைவிட்டு
கிளம் புதல் கண்கூடாய்த் தெரியும் தீரும் எம் காமம். (31)

காமம் ஒழிய கவலைகள் மறைய உன் பேர் சொல்லி ஓர்
[9]ஆமம் உண்டாலும் போதும்! வந்த மாத்திரத்தில் அழிவுதரும்
[10]பாமம் நீங்கும் பாவம் நீங்கும் பாலா உந்தன் மாறா
[11]வாமம் கண்டால் வாட்டம் யாவும் ஓட்டம் விடும். (32)

விடும் மூச்சு கூட உன் பேர் சொன்னால் விநயம் கூறும்
கடும் சொல்லும் உனைக் காண கனிவாய் மாறும்
சுடும் தீயும் சுந்தரி உன்னிடம் தென்றலாய் குளிரும்
உடும் பாக நெஞ்சம் உனையே பற்றிக் கொள்ளும். (33)

கொள்ளும் நீரும் கொஞ்சும் தமிழில் உன் பேர் கூறும்
கள்ளும் போதை கொள்ளும், உன் பேர் சொல்ல

1. அச்சம், 2. தந்திரம், 3. புகை, 4. சுடுகாடு, 5. நெருக்கம், 6. துன்பம், 7. பொன்பொருள், 8. வஞ்சகம், 9. அரிசி, 10. கோபம், 11. அழகு.

தள்ளும் மனமும் உனைக்காண துள்ளும். குத்தும்
முள்ளும் பூவாய் மாறி பாடும் உந்தன் கீதம். (34)

கீதம் பலவுண்டு பாலா உன் பெயரில், எங்கள்
வேதம் அதுவே யன்றோ உன் நாதம் இசைக்க
[1]மேதம் செய்ய வேண்டாம் மோகம் அழியும் எங்கள்
[2]கேதம் ஒழியும் பணிவோம் நாங்கள் உந்தன் பாதம்! (35)

பாதம் கண்டால் போதும் பாதகம் யாவும் போகும்
[3]மோதம் கூடும் மோட்சம் கூடும் உன் பீடம் தன்னில்
[4]போதம் கூடும் போலி வாழ்க்கை மறைந்து போகும்
[5]சூதம் அழியும் வாரா திங்கே எந்நாளும் சேதம். (36)

சேதம் இன்றி சேவை செய்தால் [6]சேடு கூடும்
[7]வாதம் உள்ள மட்டும் அவள் வாழ்த்து பாடும்
மீதம் ஏதுமின்றி மனம் அவள் மேல் மீட்சி கொள்ள
[8]வீதம் வரும் [9]விற்பத்தி வரும் அது தரும் நல்ல [10]நீதம்! (37)

[11]நீதம் காத்து வரும் தாயவளைக் காண தினம்
[12]சாதம் கூடி வரும் கீதம் பாடி வரும்
[13]ஓதம் போல் அவள் கருணை காக்க வரும்
[14]ஏதம் தொலையும் ஏற்றம் நிறையும் இது [15]திரம் (38)

[16]திரம் உள்ள மட்டும் திக்கெலாம் உன் புகழ் பாடும்
வரம் வேண்டும் எமைக் காக்க வர வேண்டும்
[17]குரம் குறைவிலா பால் தருவது போல உன் அருள்
நிரம் புதல் வேண்டும் அதைத் தரும் உன் [18]தரம். (39)

தரம் அற்றவன் என தள்ளல் ஆகாது உன்
கரம் பட்டால் [19]கரம் கூட அமுதாக மாறி
[20]துரம் நீக்கும் துயர் நீக்கும் துடிக்கும் எந்தன்
[21]சரம் சத்தமின்றி சமயம் பார்த்து நாடும் உன்பீடம்! (40)

பீடம் வந்தால் [22]பீடிப்பு மாறும், நீ ஆட்சி புரியும்
கூடம் கண்டால் [23]கூடகரும், [24]கூடலரும் கூண்டோடழிவர் உன்

1. வேள்வி, 2. துக்கம், 3. மகிழ்ச்சி, 4. அறிவு, 5. சூது. 6. நன்மை, 7. காற்று, 8. அமைதி, 9. கல்வி வன்மை, 10. தகுதி, 11. நீதி, 12. கூட்டம், 13. கடல், 14. துன்பம், 15. உறுதி, 16. பூமி, 17. பசு, 18. மேன்மை, 19. விஷம், 20. சுமை, 21. மூச்சு, 22. துன்பம், 23. வஞ்சகர், 24. பகைவர்.

இடம் வந்த பின்பு இடர் எனும் சொல்லேது! பலவித
வேடம் பூண்டு பக்தரைக் காப்பவளே, கரை சேருமோ வாழ்க்கை
ஓடம் (41)

ஓடம் நீ காட்டும் திசையில் ஓடும், உன் சக்தியை
[1]ஊடம் பார்க்க முற்படின் [2]ஊழி முடிந்துவிடும் இது
[3]காடம் [4]காசினியில் [5]காமியமின்றி காமினி உனைத் தொழ
[6]கோடம் இல்லா [7]கோதுகம் ஏற்படும் மறைந்திடும் மன[8]மடம் (42)

[9]மடம் மாறாத மாணிக்கம் பூவினும் மெல்லிய பாலாஉன்
[10]கடம் எம் குறை நீக்கி குடிகளை காப்பதேயாகும் எவ்
விடம் உண்டாலும் அவ் விடம் வந்தால் பயமில்லை நாளும்
திடம் கூடும் தீயவை ஓடும் மறையும் எங்கள் பாதகம். (43)

பாதகம் செய்வோரைப் பாடாய்ப் படுத்தும் பாலா உனை
சாதகம் செய்ய சாதனைகள் கூடும் [11]சாரூபம் ஏற்படும் தீய
[12]காதகம் புரிவோர் கானல் நீராய் காய்ந்து போவது [13]திடம்
[14]சேதகம் நிறம் வாய்ந்தவளால் சேர்ந்திடுவோம் நல்ல தடம். (44)

தடம் தெரியா அப்பாவி எனக்கு உன் விந்தை
நடம் புரியவில்லை நன்மை தீமை தெரியவில்லை இந்த
சடம் மண்ணிலே மறைமுன் உன் அருளால் இதை
புடம் போட்ட தங்கமாய் மாற்றி விடு என் தாயே! (45)

தாயே உனையன்றி யாருமில்லை தவிக்கும் நெஞ்சுக்கு
நீயே அரு மருந்து என நான் சொல்லத்தான் வேண்டுமோ!
தீயே ஆயினும் உன்னிடத்தில் தீண்டுங்கால் அருவியாய்க் குளிரும்
சேயே கலியுகத்தின் கண் கண்ட தெய்வம் நீயே எந்நாளும் (46)

நாளும் கோளும் ஏது? கொஞ்சி மகிழும் பாலா
ஆளும் பீடம் வந்தால் பிணிகள் வாராது கொடும்
தேளும் அவ்விடம் விடம் நீக்கி தேன் சுரக்கும்
மூளும் துயர் முணு முணுத்து நமைவிட்டு நீங்கும். (47)

நீங்கும் அல்லல்கள் நிதமும் அவள் முகம் காண
ஏங்கும் நம் விழிகள் திறக்கும் விழிகள் நமைத்

1. உளவு, 2. ஆயுட்காலம், 3. உறுதி, 4. உலகம், 5. பயன்கருதிச் செய்வது, 6. எல்லை, 7. உள்ளக்களிப்பு, 8. அறியாமை, 9. இளமை, 10. கடமை, 11. கடவுளைப் போலாகும் நிலை. 12. கொலை, 13. உறுதி, 14. சிவப்பு

தாங்கும் தாயவளின் இருப்பிடம் வந்தால் எந்தத்
திங்கும் வாராது தூயவள் அவள் புகழ் நீ பாடு! (48)

பாடு கின்ற நேர மெலாம் கண் முன்னே பாலா
ஆடு கின்ற தோரணையில் வந்து நிற்க அந்த
வீடு அவள் கோயிலாக மாற ஆசையோடு வந்து
கூடு கின்ற பக்தர் கூட்டம் தேனி போல நாடும். (49)

நாடு கின்ற நல்லவர் கூட்டம் துயர் கண்டு
வாடு கின்ற நேரம் பாலாவின் பார்வை பட்டால்
மூடு பனியது சூரியனைக் கண்டு விலகுதல் போல
கேடு கள் பலவும் கேள்வியின்றி பின்வாங்க வாராது தடை! (50)

தடை கள் வரினும் தயங்கேன் கொலுசொலிக்க ஓடிவரும் கொடி
இடை பூங்கொடியே உனை மறவேன் வாரி வழங்கும் உன்
கொடை குணத்தைப் புகழ்வேன் வயிரம்போல் மின்னும் வண்ண
உடை அணியும் வஞ்சியுனை வாழ்நாள் முழுதும் பணிவேன்! (51)

பணிவேன் பாலா உனை பல பிறவி கொண்டாலும்
அணிவேன் உன் கவசத்தை அழகோடு, பின் எதற்கும்
துணிவேன் துளி பயமுமின்றி தூயவள் உன் பெயரை
[1]உணிவேன் உணவாக உண்மையில் அதுவே என் பாக்கியம். (52)

பாக்கியம் கைகூடும், பாலா உன் பீடத்தில் சொல்லும்
வாக்கியம் மெய்யாகும் உடலுக்கு உறுதி சேர்க்கும் அற்புத
லேக்கியம் போன்றது உன் தீர்த்தம்! அதை நிரூபிக்க
[2]சாக்கியம் ஏதும் தேவையில்லை இது எழுதாத [3]சாசனம் (53)

[4]சாசனம் கொண்டு அவளை சாதனம் செய்ய அறிவு
[5]சூசனம் ஆகும் [6]சூக்குமம் இதுவே, இதய சிம்
மாசனம் தன்னில் அவளை இருத்தி விட்டால் சிறு
தூசினும் கீழான நாம் தூண் போன்று மாறிடலாம்! (54)

மாறிடலாம் மனத் தளவில் அவளைக் கண்டவுடன் நல்லவராய்
தேறிடலாம் தேவைகள் பல இருந்தாலும் தாராளமாய்
கூறிடலாம், கும்பிடலாம் நெக்குறுக, நம் நெற்றிக்குத் தூய
நீறிடலாம் நீள் தவம் செய்யாமல் அவளிடம் சென்றிடலாம். (55)

1. உண்பேன், 2. சாட்சியம், 3. சட்டம், 4. ஒழுங்கு, 5. கூர்மை, 6. சூட்சுமம்.

சென்றிடலாம் எட்டுத் திக்கும் எந்த பயமுமின்றி எதையும்
வென்றிடலாம் வெற்றி கொண்டிடலாம் தூயவள் துணையோடு
தீயவைகளை
கொன்றிடலாம், திசையெங்கும் ஓடோடி கலியுக தெய்வம்
பாலாதான்
என்றிடலாம் என்றும் அவள் பாதம் சரணம் எனச் சொல்லிடலாம்.
(56)

சொல்லுக அவள் நாமம் சொர்க்கத்துக்கு வழி காட்டும்
வெல்லுக யாவையும் வெற்றி உமதாய் மாறிடும், பிடிவாதமாய்
நில்லுக அவள்முன் நினைத்தது நிறைவேறும் அடிக்கடி
செல்லுக அவள் பீடம் அது ஒன்றே துயர் போக்கும். (57)

போக்கும் கவலைகளை ஒரு சிறு புன்னகை அது
காக்கும் நம் சந்ததியை காத்தபின் வீறு கொண்டு
நீக்கும் நம் சாபங்களை, அவள் சொல்லும் ஒவ்வொரு
வாக்கும் வாழ்க்கையை வளமாக்கும் இது மாறா உண்மை. (58)

உண்மை சொல்வேன் கேளுக நீவிர் நிஜத்தில் உள்ளமதில்
வெண்மை கொண்டு இவ்வுலகத்தை ஆள வந்த சிறுமி
திண்மை நிறை பாலா தன் சிறு விழிக்கு பூசும்
கண்மை கண்டால் போதும் கடுந்துயரும் காணாமல் போகும்! (59)

போகும் பாதையெலாம் உன் நினைவுதானடி அது நீங்கின்
பாகும் வேம்பாகும் பாலும் நஞ்சாகும் வேதனையில் மனம்
வேகும் உன் அழகு முகம் காண ஆவல் மிக அதிக
மாகும் மனம் நிலை கொள்ளாமல் அலை பாயும்! (60)

பாயும் புலியும் புன்னகை புரியும் உனைக் கண்டால் வெயில்
சாயும் பொழுது சூரியனும் கலங்கிடும் உனை நீங்குதலால்
தேயும் நிலவும் உனைப் பார்க்க இயலாமல் தேம்பி அழும்
ஓயும் அலைக்குள்ள சோகம் உன் பேர் சொல்ல மாயும். (61)

மாயும் சமயம் உனைக் காண மனம் அலை பாயும் அன்று
நீயும் வர வேண்டும் எனைக் காண வந்தால் எந்த
நோயும் வாராது நீங்கும், எமனையே வெற்றி கொள்ளும்
தாயும் நீயே இந்தக் குவலயம் காக்க வந்த சேயே! (62)

சேயும் தாயும் ஆன தெய்வம் உனை எந்த
வாயும் புகன்றால் புன்மைகள் நீங்கும் புதுமைகள் ஓங்கும்

தீயும் உன்னிடம் தித்திப்பாய் மாறும் ஒரு சிறு
ஈயும் உன் பார்வை பட்டால் ஓங்கி நிற்கும் இமயமாகும்! (63)

இமயம் போல் உயர்ந்தவள் கண்ணிமை போல் இருப்பவள்
[1]அமயம் வரும்போது அமைதியோடு அருள் தந்து புகழெனும்
[2]சிமயம் தன்னில் ஏற்றுபவள், எளிமையோடு ஏற்றம் தந்து
சமயம் வரும்போது சதங்கை ஒலிக்க சந்தியில் வந்திடுவள்! (64)

வந்திடுவள் வஞ்சியவள் வழக்கமான புன்னகையோடு வரங்களை
தந்திடுவள் [3]தங்கலரை [4]தகவின்மை செய்திடுவள் சிரிப்பொன்றை
சிந்திடுவள், சிங்காரமாய் சிறு இடை துள்ளத் துள்ள
முந்திடுவள் அனைத்து தெய்வங்களையும் கணப் பொழுதில் (65)

பொழுது புலரும் நேரம் ஒலிக்கும் சுப்ரபாதம், அது ஆலம்
விழுது மரத்தைத் தாங்குதல் போல் நமைக் காத்திடும்
அழுது புலம்ப வேண்டாம் அன்னையின் பீடத்திலே வந்து
தொழுது சென்றால் போதும் தொலைந்திடும் நமது பாவம் (66)

பாவம் நீங்கும் பாரிடம் ஓங்கும் எந்தப் பாழுங்
[5]கூவம் நீரும் பாலா பேர் சொல்ல பளிங்கு நீராய் மாறும்
[6]ஏவம் குறையும் ஏற்றம் நிறையும் எழில் சிந்தும்
[7]ஓவம் பாலாவின் புன்னகை குளிர் அருவியாக கொட்டும்! (67)

கொட்டும் மழையும் உன் புகழ் பாடும் நீ கட்டும்
பட்டும் மின்னலாய் வெட்டும் மகிழ்ச்சியில் மனக்கதவை மெல்ல
தட்டும் எம் கனவுகள் பலிக்கும் என் உயிர் உள்ள
மட்டும் மறவாமல் உனையே எந்தன் நினைவுகள் சுற்றும் (68)

சுற்றும் சூரியனும் சுந்தரி உன் பதம் நாடும் பல
கற்றும் பயனில்லை, உனை என் வயப்படுத்த உயிர்
விற்றும் கவி வரைவேன் கண்ணே உன் புன்னகை காண
முற்றும் துறந்த முனிவரும் முண்டியடித்து வருவரே! (69)

வருவர் வந்த பின் உனைக் கண்டு வியப்பர் உவப்புடன்
தருவர் அனைத்தையும் தடுமாற்ற மின்றி உனையே நினைப்பவர்
[8]அருவர் பெருமை கொள்ள அவதாரம் எடுத்தவளே உன்னால்
[9]செருநர் பலரும் செய்த தவறை உளமாற உணர்வர்! (70)

1. நேரம், 2. உச்சி, 3. பகைவர், 4. வருத்தம் கொள்ளுதல், 5. கிணறு, 6. குற்றம், 7. ஓவியம், 8. தமிழர், 9. பகைவர்.

உணார் கின்றபோது உண்மைகள் புரியும் உள்ளம் உயர்ந்த
[1]திணர் கொண்டு தினமும் உன்னைப் பணியும் மணக்கும்
[2]துணர் போன்ற உன்னை வசப்படுத்த தூய அன்பினால்
[3]நிணர் தலின்றி நிச்சயம் வேறெதனாலும் முடியாது! (71)

முடியாது என்ற ஒன்று கிடையாது உன்னிடம், நீயின்றி
விடியாது இது நிச்சயம், அலையும் மனமோ எளிதில்
படியாது தறி கெட்டுச் சென்றால், என் துயரது
வடியாது ஆகவே உனையே இறுகப் பிடிக்கும் என் நெஞ்சம். (72)

நெஞ்சம் முழுதும் நிறைந்தவளே, நெமிலி நகர் வந்தவளே!
வஞ்சம் இன்றி வாஞ்சையோடு நாங்கள் வாழ மலர்
மஞ்சம் விட்டு இறங்கி வா, உலகெங்கும் உள்ள
பஞ்சம் போக்க பறந்து வா எங்கள் பாவமதை மறந்து வா! (73)

மறந்தேன் அனைத்தையும் மந்தாகினியே [4]மதோன்மத்தன் போல்
பிறந்தேன் பிறகு உணர்ந்தேன் பிழையை சரண் புகுந்தேன்
சிறந்தேன் அதனால், இருப்பினும் ஓர் ஆசை வீணே
இறந்தேன் என்றில்லாமல், உனை நேரில் பார்த்துப் பேசி, பின்
இறப்பேன். (74)

இறப்பேன் அதற்கு முன் உன் மேல் பல கவிகள் இயற்றுவேன்
துறப்பேன் உனைத் தவிர மற்ற னைத்தையும், இறந்து
பிறப்பேன் இங்கு மீண்டும் தொடர்வேன் என் பணி
மறப்பேன் எனையதில் உனையே நினைப்பேன் உயிருள்ளவரை. (75)

உயிர் பெரிதல்ல உடல் பெரிதல்ல தூய பக்திப்
பயிர் வளர்க்க, பணியாரை பணிய வைக்க என்னறிவை
[5]வயிர் ஆக்கு, வயிரம் போல் மின்னும் வாலைக்குமரியே
[6]அயிர் நீக்கு நல் அன்புக்கு எனை அதிபதி ஆக்கு! (76)

ஆக்கும் பொருளுக்கும் ஆணி வேர் நீயன்றோ எந்த
நாக்கும் நன்றி சொல்லும் நர்த்தகி நீயன்றோ எந்த
நோக்கும் இன்றி நோற்றலுமின்றி வந்தேன் உன் அமுத
வாக்கும் அற்புத வாய்ப்பும் எனை உலகுக்கு உணர்த்தியதே! (77)

உணர்தல் என்றால் உளமாற இருத்தல் வேண்டும் அவ்வாறவளை
[7]இணர்தல் எளிதன்று அதற்கு எளிமையோடு சில குணங்களை

1. செறிவு, 2. பூங்கொத்து, 3. கட்டுதல், 4. மிக்க செருக்குடையவன்,
5. கூர்மை, 6. ஐயம், 7. நெருங்குதல்.

கொணர்தல் நடந்தால் வாலையவள் நம் மடியில் அமர்ந்தபடி நமை
[1]அணர்தல் செய்திடுவாள் அற்புதம் புரிந்திடுவாள் அழகாக
சிரித்திடுவாள்! (78)

சிரித்திடும் சிங்காரி அவள் பார்வை கொடியவர்களை
எரித்திடும் எள்ளுனரை அழித்திடும் அவள் கை பட்டால்
கரித்திடும் உப்பும் இனித்திடும் விதியும் அவள் பேர் சொல்ல
[2]பரித்திடும் பயந்து பதுங்கிடும் அவள் பாதம் பற்றிடும்! (79)

பற்றுதல் கொண்டு பக்தி செலுத்திட பயம் அனைத்தும்
வற்றுதல் காண்! அத்துடன் அவளை நினைத்தபடி இருக்க
[3]பெற்றுதல் கூடும் இவைதான் என்றும் நிரந்தரம் மற்றெலாம்
[4]பீற்றுதல் என்பது கண்கூடு என மனமாற அவளைப் போற்றிடு!
(80)

போற்றுதல் என்றால் பாலாவைப் போற்றுதலே சிறந்தது ஏனெனில்
நோற்றுதல் ஏதும் செய்தல் வேண்டாம்! நொடியில் அவள்
மடியிலமர
[5]நற்றுதல் கூடி வாழ்க்கை நந்தவனம் போல் மாறிவிடும்
[6]வீற்றுதல் போய் இனிமை சேர கூடிடும் நமக்கு [7]அத்தம். (81)

[8]அத்தம் நிறத்தவளே, அன்பு நிறைந்தவளே உனை அள்ளியெடுத்து
முத்தம் கொடுக்க ஆசை கூடுதடி உன் பாடலைப் பாட
[9]மத்தம் அதுவும் தன் பாட்டை நிறுத்தி மகிழ்ச்சியோடு கேட்கும்
வெறும்
சத்தம் ஆனாலும் உன்னிடம் சங்கீதமாகும் அதற்கு ஏது
[10]கொத்தம்.
(82)

கொத்தம் இல்லா இனிப்பு கொண்ட கொம்புத் தேனே உன்
[11]நத்தம் வந்திடில் நஞ்சும் நசிந்து போகும் நகை முகம்
நித்தம் காண [12]நித்தன் ஆகி [13]நிமித்திகர் கூற்று பொய்யாகி
புத்தம் புது மனிதனாய் மாறிட உடலில் பாய்ந்திடும் புதிய ரத்தம்!
(83)

1. மேல் நோக்கிச் செல்லல் (முன்னேறுதல்) 2. ஒடும், 3. செல்வாக்கு, 4. தற்பெருமை, 5. நன்மை, 6. தனிமை, 7. அருநெறி, 8. சிவப்பு, 9. குயில், 10. எல்லை, 11. ஊர், 12. அழியாதவன், 13. ஜோசியர்.

ரத்தம் சுண்டு முன் ரதம் ஏறி வரும் ரதி உனைப் பணிந்தால்
[1]பெத்தம் கூடும் பெருமை கூடும் தாயே உன் புகழ் சொல்ல தூய
[2]துத்தம் போல மனம் வெண்மையாகும் இது உண்மை எந்த
சொத்தும் வேண்டாம் சுகமும் வேண்டாம், வேண்டும் நல்ல சித்தம்!
(84)

சித்தம் கொண்டு அவள் நாமம் செபித்து வர
பித்தம் தெளியும் குத்தம் குறையும் சுத்தம் கூடும்
தத்தம் வேலைகளை சரிவர செய்து வந்தாலே வாழ்க்கை
மொத்தம் வளமையாக வறுமைக்கு வந்திடும் வறுமை! (85)

வறுமை நீங்க வாழ்வில் பெருமை ஓங்க தலை குனியும்
சிறுமை மாற, சிந்தனை உயர, குற்றம் குறைந்து
பொறுமை கூட பொதுவாழ்வில் நன்மைகள் புரிய
[3]அறுமை தெரிந்து அளவிலா செல்வத்தை அனைவர்க்கும்
தானமிடு. (86)

தானம் செய்ய தூபம் போடும், தாயவள் கருணையால் இருள்
[4]சோனம் சூழ்ந்த நம் வாழ்வு மேன்மை கொள்ளும் இனி
[5]தூனம் வேண்டாம் தூயவள் பேர் சொல்லி உயர்
[6]நானம் போல் வாழ்ந்திடலாம், நன்மைகள் பலவும் செய்திடலாம்.
(87)

செய்தல் யாவும் அவள் செய்வித்தல் ஆகும் வான் மழை
பெய்தல் கூட வாலையவள் விருப்பமாகும், வஞ்சகர்கள் சிரம்
கொய்தல் அவளுக்கு ஒரு விளையாட்டாகும், அழகு துணி
நெய்தல் போல நமை சீர் படுத்துதல் அவள் கடமையாகும். (88)

கடமை தவறாது உனைக் காண வருவேன் என் அரும் பெரும்
உடமை நீயன்றோ, உனைக் குறைத்து மதிப்பிடல் பெரும்
மடமை அன்றோ, வாழ்நாள் முழுதும் என் உடல் அன்னையே!
முடமை கொள்ளாமல் எனைக் கர்ததருள வேண்டும். (89)

அன்னையே இந்த அகிலம் முழுதும் அன்புடன் வணங்கும்
உன்னையே, உன் பிஞ்சு முகம் காண ஓடோடி வந்த

---

1. பாசபந்தம், 2. பால், 3. நிலையின்மை, 4. மேகம், 5. வருத்தம், 6. கவரிமான்.

என்னையே ஏமாற்றுதல் முறையோ உன்னருள் கிடைத்திடில்
அடைந்திடுவேன்
பொன்னையே என் இன்னல்கள் இன்பங்களோடும் எப்போதும்
குறைவில்லையே! (90)

குறை ஒன்றுமில்லை, தெய்வக் குழந்தையின் பார்வை பட்டால்
பிறை போல் வளரும் பிரச்சனைகள் மறையும் ஓதும்
மறை யும் அவளன்றோ உடல் மறையுமுன் அடிமைச்
சிறை யிலிருந்து விடுபட்டு அவளைச் சரணடைதலே முறை! (91)

முறை தவறா முறையே சரியான முறையென்று நல்லதொரு
நிறை சொன்ன இறைவியவள் பெயர் சொல்ல நாவில்
[1]நறை தடவாமலே இனிக்கும்! அதை இந்த உலகம்
பறை சாற்றும் அவளே நமைத் தாங்கும் பொறையன்றோ. (92)

[2]பொறை நிறை [3]பொருநன் என்றாலும் அவன் மனத்தில்
கறை ஏற்பட்டால் அதைக் கழுவ உன் தீர்த்தம் தவிர வேறில்லை
குறைவான அறிவோடு உனை நினைத்தாலும் போதும் அவன்
[4]உறை தேடி உதவும் தாயே உனக்கு ஆசையோடு தருவார்
[5]கூறை (93)

கூறை அணிந்து, இளங்கூந்தலை மெல்ல காற்றில் அசைத்து
சூறை காற்றையும் குளிர் தென்றலாய் மாற்றுபவள்
சேறை பூசினாலும் பழச்சாறாய் மாற்றி இல்லற வாழ்வுக்கு
[6]இறை ஆக இருந்து இறுதி வரை நமைச் சுமப்பவள். (94)

அவள் இன்றி இந்த அகிலமில்லை. அன்பர்க்கு எப்போதும்
இவள் பெயரே ஆகாரம் அன்பர் கேட்ட வரம் கொடுப்
பவள் ஒரு போதும் இல்லை என்ற சொல்லை சொல்லா
தவள் தவமிருந்தாலும் பெற முடியா வரந்தரும் சின்னவள்! (95)

சின்னவள் ஆயினும் சிந்துகின்ற புன்னகையில் உலகினை
உலுக்கிடும்
என்னவள் என்றென்றும் ஒன்பது வயதினளாய் நின்றனள்
வேதமதை
சொன்னவள் வேதனையை அடியோடு அழிக்கும் எல்லா
தெய்வங்களுக்கும்
முன்னவள் முன்னின்று காப்பவள் முக்தி கொடுக்கும்
பெண்ணவள்! (96)

1. தேன், 2. பொருமை, 3. வீரன், 4. வீடு, 5. புத்தாடை, 6. முதன்மை

பெண்ணவள் பேறுகளை அள்ளித் தரும் பெரியவள், அழகுக்
கண்ணவள் கலைகளை சொல்லித் தரும் கலைமகள் இசைப்
பண்ணவள் இசையில் விருப்பம் கொண்டவள் நிலவு போன்ற
தண்ணவள் தன்னிகரில்லா தன்மை கொண்ட தூயவள்! (97)

தாயவள் தாலாட்டுப் பாடி நமைத் தூங்க வைக்கும்
தூயவள் தூண் போன்றவள் தீயவரை அழிக்க வந்த
தீ யவள் தீங்கனி போன்றவள் தீங்கினை அழிப்பவள்
மாயவள் மாய லீலைகள் புரிந்து மகிழ்ச்சி தரும் மாதவள்! (98)

[1]மாது நிறை [2]மாது கொண்ட மாதவள், இப் பூவுலகில்
யாது மாகி நின்றவள் யட்சிணிக்கும் மேலவள்
சூது நிறை உலகிலே சூழ்ச்சி நிறைந்த பொழுதிலே
ஏது குறை எனக் கேட்டு வந்தவள், எல்லோருக்கும் பிடித்தவள்!
(99)

பிடித்தவள் ஒருவரைப் பிடித்து விட்டால் பிடிவாதமாய் நடிப்பவள்
துடித்தவள், துயர் கண்டு துன்பம் நிறை கதைகளை
முடித்தவள், முடித்தபின் ஒன்றுமே தெரியாதது போல்
நடித்தவள் நம் மூச்சவள் என்று சொன்னால் மிகை அன்று! (100)

நூற்பயன்

பாசம் நிறை குழந்தை, பாவம் நீக்கும் பாலாவின்
நேசம் பெற்றிடின் நேயம் பெருகும்! தீய சக்திகள்
நாசம் ஆகி நசிந்துவிட, நாள்தோறும் அவளை தொழுதிடின்
தேசம் எங்கும் தேசோமயம் வீசி- சுபிட்சம் காணும் நிச்சயம்!

முற்றும்

1. அழகு, 2. பெருமை.

28

பாலா பஜன்

கவிமழை பொழியும் எழில்மிகு உலகம்
பாலா உந்தன் அருட் பீடம்!
கவலைகள் மறையும்; கலை பல நிறையும்!
பாலா உந்தன் எழில் பீடம்! (கவிமழை)

அருள்வது என்றும் உன் சிறுக் கரங்கள்
அன்புடன் அளிக்கும் பலவித வரங்கள்
இருளது மறையும்; இன்பங்கள் நிறையும்!
இதயத்தில் ஒலிக்கும் உந்தன் சுரங்கள்! (கவிமழை)

அனைத்திலும் உந்தன் புகழே சிறக்கும்
நினைத்திடில் நிஜமாய் இதயம் சிலிர்க்கும்
தோல்விகள் மறையும்; வெற்றிகள் நிறையும்!
எங்குமே உந்தன் பாடலே ஒலிக்கும்! (கவிமழை)

அரும்பிய சிரிப்பு அழகுடன் மலரும்
அற்புதம் பலகண்டு அகிலமே அலரும்!
தீயவை மறையும் தூயவை நிறையும்
விரும்பிய யாவும் விரைவினில் சேரும்! (கவிமழை)

29

“பாலா தாலாட்டு”

சிரித்து மயக்கும் சின்னக் குழந்தை
உறங்கிடு என் உயிரே — பாலா (சிரித்து)

கொடுத்து மகிழும் பிஞ்சுக் கரங்கள்
நாளும் நமக்கு நல்கும் வரங்கள்
அலைந்து திரிந்து கண்கள் சொருகும்
அழகு மிளிர மடியில் உறங்கும்! (சிரித்து)

அழகு தவழும் இனிய பருவம்
அமைதி தவழும் அன்பு உருவம்
அற்புதங்கள் பலவும் புரியும்
அலுப்பு தீர மடியில் உறங்கும்! (சிரித்து)

சுழலும் உலகம் நொடியில் படைத்தாய்
சுவைமிகு கவிதை பலவும் கொடுத்தாய்
சுமைகள் பலவும் தாங்கும் தாயே
சுகமாய்க் கொஞ்சம் உறங்கு நீயே! (சிரித்து)

30

ஸ்ரீபாலா தீபாராதனைப் பாடல்

அருள்மழை பொழியும் அன்னை பாலா
திரிபுர சுந்தரி சரணம் – உன்
அருமையை உணர்ந்து பணிந்திடும் பக்தர்
கனவினில் நீயும் வரணும்!
அன்னை பாலா சரணம்! – நின்
அன்பினை எமக்குத் தரணும்!! (அன்னை பாலா)

ஒருமுக விளக்கை ஒற்றுமையுடனே
ஏற்றியே வைத்தோம் பாலா! – உன்
ஒளி சிந்தும் முகத்தில் ஒரு சிறுபுன்னகை
நீயும் காட்டிடு பாலா!! (அன்னை பாலா)

இருமுக விளக்கை இங்குள்ள அனைவரும்
ஏற்றியே வைத்தோம் பாலா! – எம்
இன்னல்கள் தீர இன்பங்கள் சேர
அன்புடன் காத்திடு பாலா!! (அன்னை பாலா)

மும்முக விளக்கை முழுமனத்துடனே
ஏற்றியே வைத்தோம் பாலா! – எம்
முதலும் முடிவும் நீயேயன்றி
வேறோர் உளரோ பாலா!! (அன்னை பாலா)

நான்முக விளக்கை நாதமுழங்கிட
ஏற்றியே வைத்தோம் பாலா! – எம்

நாவினில் என்றும் உந்தன் பெயரே
நடமிட வேண்டும் பாலா!! (அன்னை பாலா)

ஐம்முக விளக்கை ஐம்புலனடக்கி
ஏற்றியே வைத்தோம் பாலா! – வீண்
ஐயம் போக்கிடு விரயத்தை நீக்கிடு
விந்தைகள் புரிந்திடு பாலா!! (அன்னை பாலா)

இப்புவியெலாம் ஒளிர இருபத்தியேழு
விளக்கினை ஏற்றினோம் பாலா! – நீ
இருப்பது சேயாய் காப்பது தாயாய்
கவலைகள் இல்லையே பாலா!! (அன்னை பாலா)

ஒருமுறை இருமுறை எனமொத்தம் ஐம்முறை
துர்கா தீபங்கள் பாலா! – எம்
துயரங்கள் போக துன்பங்கள் வேக
துணையென்றும் நீயே பாலா!! (அன்னை பாலா)

பூரண விளக்கை பரிபூரணமாய்
நாங்கள் அளித்தோம் பாலா! – உன்
பூஜைகள் காண ஒருவித சிலிர்ப்பு
உள்ளத்தில் தோன்றுது பாலா!! (அன்னை பாலா)

பூஜையின் நிறைவாய் பூவையுள் நினைவாய்
தீபா ராதனை பாலா! – இப்
பூவுலகமெல்லாம் அமைதி மலர்ந்திட
அருள் புரிவாயே பாலா!! (அன்னை பாலா)

31

பாலா ஆரத்தி

ஐம் க்லீம் செள பாலா – ஓம்
ஐம் க்லீம் செள பாலா!
ஆரத்தி எடுத்தோம் தாயே (Repeat)
அன்புடன் வருவாயே – ஓம்
ஐம் க்லீம் செள பாலா! (ஐம் க்லீம் செள)

எங்கும் உந்தன் எழில் பொங்கும்
என்றும் காப்பாயே – பாலா
என்றும் காப்பாயே!
உந்தன் புகழ் தன்னைக் கூறி
உன்னையே நம்பி வந்தோம் – ஓம்
ஐம் க்லீம் செள பாலா!

சக்தி மிகுந்த உன் கவசம்
எம்மைக் காத்திடுமே – நாளும்
எம்மைக் காத்திடுமே!
சாதனை புரிபவள் நீயே
சந்ததி காப்பாயே – ஓம்
ஐம் க்லீம் செள பாலா!

பாடல் பல கோடி பிறக்கும்
எல்லாம் உன்னாலே – பாலா
எல்லாம் உன்னாலே!
கண்ணால் காப்பவள் நீயே

சின்னப் பெண்போல் வந்தாயே! – ஓம்
ஐம் க்லீம் செள பாலா!

பூஜை பல இங்கு நடக்கும்
பார்த்தால் புண்ணியமே – அதைப்
பார்த்தால் புண்ணியமே!
பூவையர் விரும்பும் தேவி
அழைத்தோம் மலர்த் தூவி! – ஓம்
ஐம் க்லீம் செள பாலா! (ஐம் க்லீம் செள)

32

"பரவசமூட்டும் பாலா பாடல்கள்"

ஓர் இரவில்

ஓர் இரவில் சிறு உருவில் சேயாய்
வந்தவள் நீயம்மா!
கனவினிலே வந்தவளே கவலையைத்
தருவது நியாயமா?
எனது விழியில் வரும்
துளிகள் சிதறி விழும்!
உனது உருவம் கண்டு
உடலும் சிலிர்த்து விடும்!
பாலா... பாலா...
என்னுயிரே என் கனவே
இனியும் தாமதம் ஏனம்மா? – ஓர் இரவில்

என் நெஞ்சில் என்றுமே உன் ராகம் – அடி
ஏனம்மா என் கண்ணில் வீண் சோகம்?
சொல்லம்மா சொல்லம்மா
சொர்கம் நரகம் ஆகுமா?
சொந்தங்கள் பலவுண்டு
உன்னைப் போல் ஆகுமா?
சுடர்விழியால் அருள்பவளே!
இடர்தனையே களைபவளே!
தாயே வருவாய்! தயை நீ புரிவாய்!! – ஓர் இரவில்

உன்னையே எண்ணி நான் வாழ்கிறேன் – அடி
உள்ளுக்குள் ஊமை போல் வாட்டம் ஏன்?
சொல்லம்மா சொல்லம்மா
எந்தன் துயர் நீங்குமா?
சொல்லாமல் நீ போனால்
எந்தன் மனம் தாங்குமா?
சுந்தரியே வந்திடுவாய்
சுகமதையே தந்திடுவாய்!
பாலா வருவாய்! பயத்தைக் களைவாய்!! – ஓர் இரவில்

ஆற்றினில்

ஆற்றினில் மிதந்து வந்தவளாம்! – உயர்
ஆற்றலை அழகாய்த் தந்தவளாம்!
அன்புடன் அழைக்கும் சேயவளாம்! – நல்ல
பண்புடன் நடந்தால் தாயவளாம்! – ஆற்றினில்

தேவைதன்னை பிறர் சொல்லத் தேவையில்லை
தேடி வந்து அருள் புரிபவளாம்!
சேவைகள் பலவும் செய்யத் தேவையில்லை
சேவித்தால் அன்புடன் வருபவளாம்! – ஆற்றினில்

உனது எனது என இங்கு ஏதுமில்லை
என்ற உண்மைதன்னைச் சொன்னவளாம்!
உலகம் உய்ய பல உதவி செய்ய
இன்று ஊஞ்சலில் அழகாய் வந்தவளாம்! – ஆற்றினில்

"பாலா உன் பார்வை"

பாலா உன் பார்வை போதும்
தினந்தோறும் துயர் தீரும்!
பாடும் சங்கீதம் யாவும்
உனைச் சேரும் வினை மாறும்!

ஊஞ்சலில் வந்தாயம்மா லாலி லாலி...
உன் புகழ் சொன்னேனம்மா லாலி லாலி...– (பாலா உன்)

ஆடி மாத வெள்ளியில்
ஆடி வரும் தென்றலே!
பாடி உன்னைப் போற்றவே
நாடி வரும் மின்னலே!
அன்றும் இன்றும் என்றும் உந்தன்
பார்வை ஒன்று போதுமே!
அன்பு கொண்டு ஊஞ்சல் தன்னில்
ஆடுகின்ற வேதமே! நீதான்
எங்கள் வீடு தேடி வந்த சொந்தம்! – (பாலா உன்)

வண்ண உடை மின்னவே
சின்ன இடை தோன்றுமே
ஊஞ்சலுக்கும் ஆசை வந்து
உன்னைக் கண்டு ஆடுமே!
வந்து உன்னைப் பார்த்தால் போதும்
கவிதை வந்து பொங்குமே!
வார்த்தை வந்து வணங்கி நின்று
வாழ்த்து உனைப் பாடுமே! நீதான்
எங்கள் வீடு தேடி வந்த சொந்தம்! – (பாலா உன்)

எந்தன் மனமெங்கும்

எந்தன் மனமெங்கும் – என்றும்
உந்தன் சங்கீதம்!
எந்தன் விழி காணும் – என்றும்
உந்தன் சிங்காரம்!
எழிலோவியமாய் பல ஏற்றமே
தந்திட எம்மிடம் வந்தாயே!
உயிரோவியமாய் பல உன்னத
அற்புதம் நாளும் செய்தாயே!

பாலா பாலா... எங்கள் பாலா
அன்னை பாலா... அருமை பாலா (எந்தன்)

சொல்லும் செயலும் ஒன்றாய் இங்கு
சேரும் வினை மாறும்! – பகை
வெல்லும் பாதம் பாலா உந்தன்
பாதம் அது வேதம்!
சொல்லுங்கள் பாலாதான் என்றும்
நமது சொந்தம்!
செல்லுங்கள் பாலாவின் பீடம்
ஒன்றே சொர்கம்!
பாடுங்கள் பாடல்கள் – இன்பம்
இதுதான் பாருங்கள்!
பாலா... எங்கள் பாலா... (எந்தன்)

தேரில் செல்லும் தேவதை உந்தன்
தோற்றம் தரும் ஏற்றம்! – இங்கு
நேரில் ஒருமுறை நெமிலிக்கு வந்தால்
மாற்றம் வழி காட்டும்!
தேடுங்கள் பாலாதான் என்றும்
நமது செல்வம்!
நாடுங்கள் பாலாவின் பீடம்
ஒன்றே சொர்கம்!
பாடுங்கள் பாடல்கள் – பரவசம்
இதுதான் பாருங்கள்!
பாலா... எங்கள் பாலா... (எந்தன்)

"அன்று ஆற்றினிலே"

அன்று ஆற்றினிலே மிதந்து வந்த
எங்கள் பாலா!
இன்று வீட்டினையே கோயிலெனக்
கொண்டாள் பாலா!

எங்கள் வேண்டுதல்கள் யாவையுமே
தீர்த்தாள் பாலா! அன்று ஆற்றினிலே

அருள் கொடுக்கும் தாயே உந்தன்
அருமைதன்னை நாடறியும்
பால் வடியும் உந்தன் முகத்தை
பார்த்தால் போதும் பகைமடியும்
கனவினில் வந்தாய்! கவிதைகள் தந்தாய்!!
கடமைகள் புரிய கருணையும் தந்தாய்
கடலும் இனிக்கும் உன்னால்! அன்று ஆற்றினிலே

உருவெடுக்கும் கருவும் உன்னை
நினைத்தே பாடல் பாடிடும்
உலகெங்கும் உந்தன் புகழை
சொல்லியே நாளும் போற்றிடும்
நவராத்திரியின் நாயகி நீயே
நவசக்திகளின் மூலமும் நீயே!
கவிதை சிறக்கும் உன்னால்! அன்று ஆற்றினிலே

உள்ளம் எனும்

உள்ளம் எனும் கோயிலிலே உள்ள தெய்வம் நீயடி
உன்னை நம்பி எங்கள் வந்தோம் எம்மைக் கொஞ்சம் பாரடி!
– உள்ளம் எனும்

என்னவளே சின்னவளே உன்னைப் போல யாரடி?
கண்ணை இமை காப்பதுபோல எம்மைக் காக்க நீயடி!
அன்புடனே... உந்தன் பாடல் பாடி வந்தோம் பாரடி
நெமிலி வந்த பாலாவே நெஞ்சமெங்கும் நீயடி!
–உள்ளம் எனும்

அன்னதானம் அமுத கானம் அனைத்தும் இங்கே தானடி!
இவ்விடம் போல் இவ்வுலகில் வேறு இடம் ஏதடி?
உனக்கெனவே... ஒரு இடமும் இவ்வுலகில் ஏதடி?
நெமிலி மட்டும் உன் இடமாய் ஆன மாயம் என்னடி?
–உள்ளம் எனும்

துள்ளித் திரிந்து அங்கும் இங்கும் ஓடுவது ஏனடி?
அள்ளி எடுத்து முத்தம் கொடுக்க எமக்கு ஆசைதானடி!
கள்ளி உனை கண்டபோது கவலைகளும் ஏதடி!
தள்ளி நின்று சிரித்து மயக்கும் மாயம் என்ன கூறடி?
–உள்ளம் எனும்

தேரில் ஏறி நீயும்

தேரில் ஏறி நீயும் வந்தாயே
என் தாயே... வந்தாயே!
பாலா... பாலா... பாலா... பாலா (தேரில் ஏறி)

என் குறை சொல்ல உனையன்றி
வேறே யாரம்மா?
என் துயர் தீர வழி என்னவென்று
நீயும் கூறம்மா!
உன் புகழ் பாட என் தமிழ் உண்டு
உன் புகழ் சொல்ல என் குரல் உண்டு
இனி துயர் வந்தால் என் குறையன்று.. ஆ.. ஆ..
(தேரில் ஏறி)

உன் இடம் தேடி உருகினேன் பாடி
நீயும் கேளம்மா!
உன் முகம் காண வந்தேன் ஓடி
நீயும் பாரம்மா!
என் மனம் செல்லும் உந்தன் வசமே!
என் குறை தீர்ப்பாய் அதுவும் நிஜமே!
இருந்தும் ஏனோ மனதில் பயமே!.. ஆ.. ஆ..
(தேரில் ஏறி)

"என் தாயே உன்னை"

என் தாயே உன்னை நான்
தேடாமல் தேடினேன்!

வந்தாயே இங்கு நீ
பாடாமல் பாடினேன்! (என் தாயே)

எங்கும் உன் காந்தப் பார்வைதான்
எம்மை தினம் காக்கும் போர்வைதான்!
எந்நாளும் சொந்தம் நீயம்மா
நீங்காத பந்தம் தானம்மா!
அம்மா உன் உள்ளம் வெண்மைதான்
அன்பால் அது மகிழும் உண்மைதான்!
ஆதாரம் என்றும் நீயம்மா
ஆகாரம் உந்தன் பேரம்மா!
பாதங்கள் காக்குமே தாயே
பாவம்தனை போக்குவாய் நீயே! (என் தாயே)

நான் சூட்டும் வண்ணப் பூமாலை
உன்னை தினமும் வாழ்த்தும் பாமாலை!
எல்லாமே உந்தன் விளையாட்டு!
தாயே நீ எம்மைத் தாலாட்டு!
நான் பாடும் பாடல் நீ கேட்டு
தாயே சிறு புன்னகை நீ காட்டு!
உந்தன் புகழ்தன்னைப் பலர் கேட்டு
வந்தார் இங்கு நீயும் வழி காட்டு!
வேதங்கள் சொன்ன என் தாயே
வேண்டுதல் தன்னைத் தீர்ப்பாயே! (என் தாயே)

ஆயிரம் கோயில்

ஆயிரம் கோயில் ஆயிரம் தெய்வம்
ஆயினும் உன்னைப் போல் ஆகுமா?
தாயவள் பார்வை போதுமே
தாபங்கள் தானாய் போகுமே! (ஆயிரம் கோயில்)

நெமிலிக்கு வந்தால் ஒரு பயணம்
நெஞ்சத்தில் மறையும் பல சலனம்!

நேரில் வருவேன் என்றது நீயே
தேரில் அழகாய் வந்தாயே!
ஆறுதல் தேடி அலையுது நெஞ்சம்
அழுதிடக் கண்ணில் நீருக்குப் பஞ்சம்
தாயே நீதான் எம் தஞ்சம்! (ஆயிரம் கோயில்)

அற்புதம் யாவும் நடக்கும் இடம்
பொற்பதம் கண்டால் சிலிர்த்து விடும்!
தாயாய் இருந்து காப்பது நீயே
சேயாய் மாறி வந்தாயே!
மந்திரங்கள் பல கூறிடும் நேரம்
மனக் கவலை பல ஓடிடும் தூரம்
தாயே தீரும் எம் பாரம்! (ஆயிரம் கோயில்)

சொல்லுங்கள்

சொல்லுங்கள் பாலா ஒன்றே என்றும் நம் தெய்வம்
செல்லுங்கள் பாலா பீடம் பாவங்கள் தீரும்
ஓ... பாலா உன் பாடல்தான் வேதம்!
வாருங்கள் நெமிலி ஒரு அற்புதத் தலம்
பாருங்கள் அன்னை செய்யும் அற்புதங்களும்
ஓ... பாலா உன் பாடல்தான் வேதம்!... ஓ... (சொல்லுங்கள்)

பலிக்கும் இங்கே சொன்ன அருள்வாக்கு யாவும்
ஜொலிக்கும் தாயே உன் முகம் தானே நாளும்
ஒலிக்கும் இசை உன் பெயர் சொல்லிப் போகும்
களிக்கும் மனம் உன் புகழ் சொல்லிப் பாடும்!
பாலா உந்தன் அருகே பாடுதல் யோகம்
அதுதானே நாங்கள் செய்யும் பணிவான யாகம்!
ஓ... பாலா உன் பாடல்தான் வேதம்!.. ஓ... (சொல்லுங்கள்)

இருக்கும் வரை என் மனம் உன்னைப் பாடும்
இருந்தும் ஏனோ என் மனம் வீணாய் வாடும்
மயக்கும் கண்கள் தன்னை தினந்தோறும் தேடும்

தயக்கம் இன்றி உன் அருள் வந்து கூடும்!
பாலா உந்தன் அருகே பாடுதல் யோகம்
அதுதானே நாங்கள் செய்யும் பணிவான யாகம்!
ஓ... பாலா உன் பாடல்தான் வேதம்!.. ஓ... (சொல்லுங்கள்)

"என் உள்ளம்"

என் உள்ளம் கொண்ட இன்பம்
சிங்காரி நீயும் தந்த வரமா?
ஒய்யாரி உன்னைப் போல வருமா? - உன்
பார்வை கேட்ட வரங்கள் தருமா? - என்
பாடல் உந்தன் காதில் விழுமா? (என் உள்ளம்)

என் மனமென்னும் கோயிலின் தெய்வம்
எனக்கு என்றும் நீயே!
என் மனக் குறை தன்னைப்
போக்கிடும் அன்புத் தாயே!
இவ்வுலகினை காத்திட வந்தாய்
உனை என்றும் மறவேனே!
ஒய்யாரி உன்னைப் போல வருமா? - உன்
பார்வை கேட்ட வரங்கள் தருமா? - என்
பாடல் உந்தன் காதில் விழுமா? (என் உள்ளம்)

எங்கள் உயிர் தன்னைக் காத்திடும் தாயே
உனக்கு நிகர் நீயே!
எங்கள் உயர்வுக்கு வழி தன்னைக்
கூறிடும் அன்புத் தாயே!
இந்த நெமிலிக்கு நீ வந்தாய்
மன நிம்மதியைத் தந்தாய்!
ஒய்யாரி உன்னைப் போல வருமா? - உன்
பார்வை கேட்ட வரங்கள் தருமா? - என்
பாடல் உந்தன் காதில் விழுமா? (என் உள்ளம்)

பாடல்கள் பாடும்

பாடல்கள் பாடும் பாலாவின் பீடம்!
பார்த்தாலே பாவங்கள் தான் ஓடும்!
நாளும் அவள் சன்னதி
தருமே மன நிம்மதி
என்றும் விழாவே அவள் வீட்டிலே! (பாடல்கள்)

வாழும் காலம் கொஞ்சமே
வாழ்த்தும் உந்தன் நெஞ்சமே!
வாலைக் குமரி உன்
நூலைப் படிக்கையில் ஓ... இன்பமே
எங்கள் பேச்சும் எங்கள் மூச்சும்
என்றும் உன் வசமே!
எங்கள் விழிகள் தேடிப் பார்க்கும்
என்றும் உன் முகமே!
வாராய் என் தெய்வமே! (பாடல்கள்)

தேவை இன்றி ஓடினேன்
பாதை ஒன்று தேடினேன்
பேதை நெஞ்சினில்
வேதம் போலுனை நான் ஓதினேன்!
இந்த வாழ்வும் இந்த வளமும்
என்றும் நீ தந்ததே!
உன்னைப் போற்றி தினமும் பாட
நாவில் தேன் வந்ததே!
எல்லாம் நீ தந்ததே! (பாடல்கள்)

ஓ.. சிரிப்பில்

ஓர் சிரிப்பில் மயக்கிடும் சிறிய பூங்கொடி
உன்னை நினைக்க சுகமே – உன்னை
நினைக்க நினைக்க உள்ளம்
மணக்க மணக்க துன்பம்

விலகி ஓடும் தினமே!
ஓ... ஓ... ஓஹோ.... ஓஹோ... (ஓர் சிரிப்பில்)

நல்ல சுகம் நாளும் பல வேண்டி – உன்னை
நாடி வரும் பக்தர் பல கோடி! – பாடல் பல
பாடி வருவார் உனைத் தேடி!
வெறும் ஆணவத்தினாலே பெரும் ஆத்திரத்தினாலே
வீண் பேச்சு பேச வேண்டாம்
அவள் பாதம் ஒன்றே துணை!
ஏது ஈடு இணை – விலகும்
துன்ப வினையே! (ஓர் சிரிப்பில்)

என்று வரும் நல்ல காலம் என்று – இந்த
பூமியில் ஏங்குவோர் பலர் உண்டு – உன்னை
தினம் தேடி வரும்போது பலன் உண்டு
அந்த ஆற்றங்கரை ஓரத்திலே அந்தி சாயும் நேரத்திலே
பூஜை பலவும் நடக்கும்!
அதைக் காணக்காண – மனம்
கீதம் பாடப் புகழ்
தானாய் வந்து சேரும்! (ஓர் சிரிப்பில்)

நீங்காத துன்பம்

நீங்காத துன்பம் வந்த போதிலும்
உன்னையே நாடினோம்!
நீ வந்து இன்பம் சேர்த்த போதிலே
உன்னையே பாடினோம்!
வாலை உன்முகம் வாட்டம் தீர்த்திடும்
வாழ்த்தும் என்றும் உன் நெஞ்சமே!
வாடித் திரிவதேன்? தேடி அலைவதேன்?
நெமிலி வந்திடில் சொர்கமே! (நீங்காத)

தோல்விகள் இனியில்லை வேள்விகள் அதன் எல்லை!
என்றுமே தாயே உன் அன்புக்கு ஈடில்லை!

கண்டதும் உன் பார்வை
காந்தமாய் இழுக்கும் – அதைக்
கண்டதும் எந்தன் மனம்
சாந்தமாய் இருக்கும்!
உனைப் பற்றி இங்கு சொல்லவே
தாயே வார்த்தைகள் இல்லையே!
தினந்தோறும் உன்னைப் பாடவே
எமக்கு வருத்தங்கள் இல்லையே!!
வேறெங்கு சென்ற போதிலும்
இந்த இன்பங்கள் இல்லையே!!! (நீங்காத)

பாடல்கள் பலநூறு பாடிய போதும்
பாடல்கள் பலகோடி நெஞ்சினில் மோதும்!
அன்னையே உன் பாடல்
ஆறுதல் அளிக்கும்! – அதைப்
பாடவே எந்தன் மனம்
துள்ளியே குதிக்கும்!
எந்நாளும் உந்தன் பெருமைதான்
தாயே உலகெங்கும் ஒலிக்குமே!
என்றென்றும் உந்தன் வாக்குதான்
தாயே தவறாமல் பலிக்குமே!!
எப்போதும் உந்தன் மேனிதான்
தாயே ஒளிவீசி ஜொலிக்குமே!!! (நீங்காத)

அன்பெனும் கோயில்!

அன்பெனும் கோயிலின் தெய்வம்
அருள்மழை பொழிந்திடும் நேரம்
அழுவது அழுவது ஏனம்மா?
பண்புடன் அன்னையின் பீடம்
வந்திடின் பாவங்கள் தீரும்
தாமதம் தாமதம் ஏனம்மா?
இதயம் துடிக்குமே பாரம்மா!

இன்பம் நமக்கு வெகுதூரமா?!
பாலா இருக்கும் இடத்திலே
துயர் இருக்க முடியுமா? (அன்பெனும்)

துன்பங்கள் பலவும் நம்மைத் தொடர்ந்திடும்போது
துயரங்கள் பலவும் நம்மைத் துரத்திடும்போது
உள்ளமது உன்னிடத்தை நாடி வரும்
உன்பெயரை உச்சரித்துப் பாடி வரும்
நீதா னம்மா எங்கள் சொந்தம்
நின் முகத்தைப் பார்த்தால் இன்பம்
பாலா இருக்கும் இடத்திலே
துயர் இருக்க முடியுமா? (அன்பெனும்)

அன்னை உன் பெயரில் ஆயிரம் பாடல்கள் வருமே!
அவை யாவும் மனதுக்கு நாளும் மகிழ்ச்சியை தருமே!
அன்பு ஒன்றே உந்தனுக்கு ஏற்ற குணம்
ஆசையோடு அங்கு வந்தால் ஏற்றம் வரும்!
உந்தன் பார்வை ஒன்றே போதும்
உந்தன் பாடல் ஒன்றே வேதம்!
பாலா இருக்குமிடத்திலே
துயர் இருக்க முடியுமா? (அன்பெனும்)

பாடுங்கள் தினமும்

பாடுங்கள் தினமும் பாடுங்கள்
பாடுங்கள் தினமும் பாடுங்கள்
பாவந்தான் கரைந்திடும்!
பரவசம் நிறைந்திடும்!! – பாடுங்கள்

ஆற்றில் வந்தவள் ஆறுதல் தந்தவள்
அன்னை ஆனவள் பாலா தான்!
இசையை ரசிக்கும் என் தாயே...
இசையை ரசிக்கும் என் தாயே!
இன்பம் நீயும் தந்தாயே

சுமைகள் குறைந்திடும்!
சுகமது நிறைந்திடும்!! – பாடுங்கள்

சொல்லும் ஒரு சொல்லும் – உனைச்
சொன்னால் பகை வெல்லும்
கல்லும் கனிந்திடுமே – உன்
கருணை என்றும் சிறந்திடுமே
அழகும் அறிவும் அருளும் நிறைந்த உருவே!
பொருளும் புகழும் அருளும் உன்திரு வடிவே!
இன்றும் இனி என்றும் உனக்கு நான் அடிமையே
இதயம் தனில் ஒளி வீசிடும் அழகிய பதுமையே
நாளும் உனை நான் பாட
காதினிலே தேன் பாய
தினம் தினம் புதுமையே!
உயிரது உருகிடும் உருகிடும்
உருவங்கள் மறைந்திடும் மறைந்திடும்
வெறுப்பதனை மறந்து
பொறுப்பதனை உணர்ந்து (பாடுங்கள்)

தேவர்கள் மலர் தூவ

தேவர்கள் மலர் தூவ தேவியர்கள் இசை பாட
புறப்பட்டாள் பாலா புறப்பட்டாள்!
தீமைகள் தான் ஓட நன்மைகள் தான் சேர
புறப்பட்டாள் பாலா புறப்பட்டாள்!
புன் சிரிப்பு மாறாமல் பூவுலகைக் காத்திடவே
புறப்பட்டாள் பாலா புறப்பட்டாள்!
கண் இமைக்கும் நேரத்தில் கவலைதன்னை தான் மாற்ற
புறப்பட்டாள் பாலா புறப்பட்டாள்! (தேவர்கள்)

அம்பிகையின் அருட்பிள்ளை – அவள்
என்றும் எதற்கும் பயந்ததில்லை!
பண்டாசுரனின் கொடும் செயலை – அவள்

பார்த்த பிறகும் அஞ்சவில்லை!
பார்க்கும் போது சிறுமியம்மா – பாலா
பாய்ந்து வந்த சிறுத்தையம்மா
பாய்ந்து சென்ற சில சரங்கள் – அங்கே
மாய்ந்து வீழ்ந்தன பல சிரங்கள்!
சின்னஞ்சிறிய மலர்க் கரங்கள் – அவை
நாளும் நல்கும் நல்வரங்கள்! (தேவர்கள்)

பண்ட புத்ரர் முப்பது பேர் – அவர்கள்
கொண்ட யுத்தம் முடியுது பார்!
பாலா விடுத்த அஸ்திரத்தால் – பல
தலைகள் பந்தாய் உருளுது பார்!
ரதத்தில் வந்த அழகு ரதம் – பாலா
புரியும் போரோ புதிய விதம்!
வீரமோடு வந்த முல்லை – பாலா
அம்பிகைக்கு செல்லப் பிள்ளை!
வெற்றி அவளைச் சுற்றி வரும் – அவளை
போற்றி தினமும் பாடி வரும்! (தேவர்கள்)

தேடி வந்தோம்

தேடி வந்தோம் தேடி வந்தோம்
அன்னை உன்னை தேடி வந்தோம்
பாடி வந்தோம் பாடி வந்தோம்
உன்னைக் காண ஓடி வந்தோம்
கனவினிலே வந்த எந்தன் கட்டழகே
கைகளுக்குள் வந்து விடு பேரழகே – இம்முறை
கைகளுக்குள் சிக்கி விடு பேரழகே! (தேடி வந்தோம்)

எப்பொழுதும் நீயம்மா சின்னஞ்சிறு சேயம்மா!
இல்லையே உன்னைப் போல் அன்பு கொண்ட தாயம்மா!
உதிக்கும் கதிரில் இருக்கும் அழகே
உன்னை துதிக்க உயரும் புகழே (Repeat)

நீதானே எங்கள் நம்பிக்கை – தாயே
தேடாதோ உன்னை இந்தக் கை (தேடி வந்தோம்)

அன்னை உன்னைக் கண்டவுடன் ஆனந்தமே பொங்குதம்மா!
அம்மம்மா இதுதான் நாங்கள் செய்த பாக்கியமா?
ஆற்றில் வந்த அழகுத் தாயே
ஆற்றல் கொடுக்க வேண்டும் நீயே!
நீதானே எங்கள் சொந்தமே! – தாயே
வேண்டாமே வேறு பந்தமே! (தேடி வந்தோம்)

33

பாலா பீடக்குறிப்புகள்

பாலா பீடம்

காஞ்சிபுரத்திலிருந்து 22 கி.மீட்டர் தொலைவிலும், அரக்கோணத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலும், காவேரிப் பாக்கத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவி லும் நெமிலி (திருத்தலம்) உள்ளது. சென்னையிலிருந்து அன்பர்கள் பஸ் மூலம் நெமிலி வர நினைத்தால், சென்னை To வேலூர் செல்லும் பேருந்துகளில் ஏறி ஓச்சேரி (அல்) காவேரிப்பாக்கத்தில் இறங்கி, அங்கிருந்து வேலூர் To அரக்கோணம் செல்லும் பேருந்தில் ஏறி நெமிலிக்கு வரலாம். சென்னையிலிருந்து நெமிலிக்கு வர குறைந்தது மூன்று மணி நேரம் பிடிக்கும்.

ரயில் மூலம் வர நினைத்தால், சென்ட்ரலில் ஏறி அரக்கோணம் ஸ்டேஷன் இறங்கி, பிறகு அங்கிருந்து பஸ் மூலமாக அரை மணி நேரத்தில் நெமிலியை அடையலாம். கார் மற்றும் வேன் போன்ற இதர வாகனங்களில் வருபவர் கள் சென்னையிலிருந்து வேலூர் செல்லும் வழியில் வெள்ளை கேட் என்னும் ஊரில் வலது பக்கம் திரும்பி ரயில்வே லைனை ஒட்டி அரக்கோணம் செல்லும் வழியில் வந்தால் சேந்தமங்கலம் எனும் கிராமம் வரும், அங்கிருந்து ரயில்வே கேட் வழியாக திரும்பி ஏழு கிலோ மீட்டர்

பயணித்தால் நெமிலியை அடையலாம். சென்னை To நெமிலி பயண நேரம் இரண்டு மணி நேரம் ஆகும்.

பூஜைகள்


நவராத்திரி மற்றும் புத்தாண்டு, பௌர்ணமி பூஜைகள் அபிஷேக ஆராதனையோடு காலை பத்து மணிக்குத் தொடங்கி பன்னிரெண்டு மணிக்கு நிறைவு பெறும். பிரதி வெள்ளி மாலை *6-00* மணிக்கும், பிரதி ஞாயிறு காலை *9-00°* மணிக்கும் சிறப்பு வழிபாடு நடைபெறும். ஆடிவெள்ளி, தை வெள்ளி போன்றவை விசேஷமானவை.

அன்பர்கள் அனைவரும் வருக!
அன்னையின் அருள்தனைப் பெருக!

ஸ்ரீ பாலா பீட முகவரி

ஸ்ரீ பாலா பீடம்
22, சத்திரத் தெரு
நெமிலி & அஞ்சல்
வ.ஆ.வே. மாவட்டம் 631051.
தொலைபேசி 47216 (04177)

பணிவுடன்
நெமிலி. வெங்கட்கிரிதர்


KAVERIPAKKAM.
TO VELLORE
OCHERI
TO SHOLINGHUR
NEMILI
SRI BALA PEETAM
TO ARAKKONAM
RAILWAY LINE
SENTHA MANGALAM
TO KANCHI
VELAI GATE
TO ARAKKONAM
TO MADRAS